803
OF BOOKS
DEC 1954
MADRAS
803.
4-54.
JL
N54.2.8
177210

அழகிற்கு
அழகு
மனதிற்கு
மகிழ்ச்சி
உயர்ந்த
உறுதியான
வேலைப்பாடுள்ள
வைரம்
தங்க
நகைகள்
வெள்ளி
பாத்திரங்களுக்கு
T. கோவிந்தராஜுலு நாயுடு
JEWELLERS & DIAMOND MERCHANTS
4818
28. நேதாஜி
சுபாஷ் சந்தரபோஸ் ரோடு
மதராஸ். 1

டிசம்பர்
9
முதல்
சென்னை
சித்ரா
பிராட்வே
காமதேனு
பாரத்
மற்றும் தென்னாடெங்கும்...
கதை வசனம்
ஸ்ரீதர்
சரவணபவா & யூனிட்டி பிக்சர்ஸ்
எதிர்பாராதது
ஸ்டுடியோ
நெப்ட்யூன்
டைரக்ஷன்
CH. நாராயணமூர்த்தி

OK
SOAPS
KEEP YOU FRESH AND YOUR CLOTHES CLEAN AND BRIGHT
THE EAST ASIATIC COMPANY (INDIA) LIMITED
MADRAS



Popular
for more than 70 years
LITTLE'S
ORIENTAL
BALM
தலைவலி, மார்சளி,
தொண்டை பொறுமல்,
நரம்பு வலி, சுளுக்கு, கை,
கால் பிடிப்பு, கீல் வாதம்
முதலிய எல்லா வலிகளுக்
கும் மிகச் சிறந்தது.
ORIENTAL BALM
All Aches and Pains
LITTLE'S ORIENTAL BALM & PH. LTD.
MADRAS - 2

உலகப் பிரசித்திப் பெற்ற

பனாமா பிளேடுகள்

பனாமா லிமிடெட் கம்பெனியாரால்,

இந்திய மூலதனமும், தொழிலாளரை யும் கொண்டு நவீன இயந்திர உதவி களுடன் ஜெர்மானிய தொழில் நிபுணர்களால் கல்கத்தாவிலேயே தயாரிக்கப்படுகிறது.

இப்போது நீங்கள் உபயோகிக்கும் "பனாமா பிளேடுகள்"

பனாமா
பிளேடுகள்

இந்தியாவிலேயே தயாராகுபவை எல்லோராலும் வாங்கி உபயோகிக்க குறைந்த விலையாக பிளேடு ஒன்றுக்கு ஒரு அணா என்று நிர்ணயித்துள்ளது. எனவே அதிகம் கொடுக்காதீர்கள்.

ஒரு பிளேடு விலை ஒரு அணா.

சோல் ஏஜண்ட்ஸ் :-

மதராஸ், ஆந்திரா, ஒரிஸா, ஹைதராபாத், மைசூர், குடகு, திருவாங்கூர், கொச்சின், பம்பாய், கட்ச், சௌராஷ்டிரா, மத்திய பிரதேஷ், & சிலோன்.

லாலா கோபிகிருஷ்ண கோகுல்தாஸ்,

119, தங்கசாலைத் தெரு, சென்னை - 1.

போன் : 3275. தந்தி : 'ஜாவர்'

தமிழை ஆட்சி மொழியாக்குவதே
நமது முதல் லட்சியம்.

செடி 2 மலர் 8	டிசம். 1954	ஜய ஆண்டு கார்த்திகை

பொருளடக்கம்

தமிழர் ஆட்சியில்? 9
பழமையின் உயர்வு 13
அலை ஓய்ந்தது (தொடர் கதை) ... 16
கலை வழக்கு 27
தன்மதிப்பு ... 33
மனத்தெளிவு 35
காதல் பாதை ... 43
தமிழ் முரசம் (கவிதை) 51
மனப்புயல் (தொடர் கதை) ... 52
மாயச் சொப்பு (பாப்பா உமா)... 63
பாவையின் பார்வை ... 68
மதிப்புரை 74
சரியான பரிசு 76
நடன மணிகள் ... 84
பட உலகம் ... 88

'உமா'வில் வெளியாகும் கதைகளில் உள்ள
பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே.
சம்பவங்களும் கற்பனையே.



197216

அழாமே சீக்கிரம் குடிச்சுடு கண்ணு.........
இல்லேன்ன பசிக்கும்!

தமிழர் ஆட்சியில் ?

ஆங்கில ஆட்சி அகன்றதுமே நமது அன்னை மொழியாம் கன்னித் தமிழ் அரியாசனம் ஏறுமென்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் ஆங்கிலேயர் வெளியேறி ஆண்டுகள் 7 ஆகியும் நமது அருமைத் தமிழ் இன்னும் அரசாங்க மொழியாகவில்லை. இதனால் சுதந்திரம் பெற்ற தன் பயனை சாதாரண மக்கள் அனுபவிக்க முடியவில்லை. தமிழ் ஆட்சி மொழி ஆகாதவரை ஆங்கிலமறியாத சாதாரண மக்களுக்கு 'சுதந்திரம்' என்பது ஏட்டில் எழுதிக் காட்டிய சக்கரை போலத் தான்.

ஆந்திரம் பிரிந்த பிறகு எஞ்சிய சென்னை ராஜ்யம் அனேகமாக தமிழ் ராஜ்யம்தான். அமைச்சர்கள் எட்டு பேரில் ஏழு பேர் அசல் தமிழர். சட்ட சபையிலும் 100-க்கு எண்பது பேருக்கு மேல் தமிழரே. ஆகவே சென்னை அரசாங்கத்தின் நிர்வாகமும், சட்டசபை நடவடிக்கைகளும், தமிழில் நடத்த முடியும். வேண்டுமானால் மலபார் ஜில்லாவின் நிர்வாகத்தை மலபாரிலும் – தென் கன்னட ஜில்லாவின் நிர்வாகத்தைக் கன்னடத்திலும் நடத்த உரிமை கொடுத்து விடலாம். அந்த இரண்டு ஜில்லாக்கள் நம் மாகாணத்தோடு இருப்பதற்காக தமிழை ஆட்சி மொழியாக்காமலிருக்க வேண்டிய அவசியமில்லை.

ஆனால் முதலமைச்சர் காமராஜர் தமிழை ஆட்சி மொழியாக்குவது இப்போதைக்கு சாத்தியமில்லை என்று மதுரையில் பேசியிருக்கிறார். ஆங்கில மொழியில் மோகமுடைய வேறுயாரேனும் இப்படிச் சொல்லியிருந்தால் நாம் ஆச்சரியப்படமாட்டோம். அன்னியமொழிப் புலமையால் ஏற்பட்ட அடிமைப் புத்தி என்று எண்ணியிருப்போம். ஆனால் ஆங்கில மொழியில் மோகம் கொள்ளச் சந்தர்ப்பம் இல்லாத திரு. காமராஜர் தமிழை ஆட்சி மொழியாக்க மறுப்பது நமக்கு ஆச்சரியத்தை தருகிறது.

தமிழை ஆட்சிமொழியாக்க முடியாததற்கு அவர் சொல்லும் காரணம் உண்மை நிலமைக்கு பொருந்துவதாக இல்லை. ஆங்கில மொழிச் சொற்களையெல்லாம் தமிழில் பெயர்த்த பிறகுதான் தமிழை ஆட்சிமொழியாக்க முடியுமென்கிறார். நிர்வாகத்துறைக்கு பயன்பட்டு வரும் ஆங்கிலச் சொற்களுக்கு நேரான தமிழ் சொற்கள் இப்போதே நடைமுறையில் இருந்து வருகின்றன. ஆகவே ஆங்கிலச் சொற்களை தமிழில் பெயர்த்த பிறகுதான் தமிழை ஆட்சி மொழியாக்க முடியும் என்று சொல்வது பிரத்யட்ச நிலமை அறியாது பேசுவதாகும். திருச்சி ஜில்லாவின் நிர்வாகம் தமிழிலேயே நடந்து வருகின்றது. ஜில்லா நிர்வாகத்தை தமிழில் நடத்த முடிந்ததென்றால் ராஜ்ய நிர்வாகத்தை மட்டும் தமிழில் நடத்த முடியாதென்று கூறுவதில் நியாயமிருக்கிறதா?

கல்லூரிப் பாடங்களை தமிழில் போதிப்பதிலுள்ள கஷ்டம் அரசாங்க நிர்வாகத்திற்கு தமிழை உபயோகிப்பதிலில்லை. தமிழை போதனா முறை ஆக்குவதானால் ஆங்கிலத்திலுள்ள கலைச் சொற்

களுக்கீடான சொற்களை தமிழிலும் கண்டு பிடித்தாக வேண்டும். ஆனால் அரசாங்க நிர்வாகத்துக்கு பழக்கத்திலுள்ள தமிழ்ச் சொற்களையே உபயோகிக்க முடியும். தமிழை போதனா மொழியாக்குவது வேறு – அரசாங்க மொழியாகச் செய்வது வேறு. இந்த வேற்றுமையை சரியாக புரிந்துக் கொள்ளாமல் முதலமைச்சர் பேசியிருக்கிறார்.

ஆங்கிலச் சொற்களை தமிழில் பெயர்ப்பதும் ஆகாத காரியம் அல்ல. முன்பு திரு. அவிநாசலிங்கம் செட்டியார் கல்வி அமைச்சராக இருந்தபோதே கலைச் சொல் பட்டியல் தயாரிக்கப் பட்டிருக்கிறது. அந்த வேலையை தொடர்ந்து நடத்தி முடிந்தால் தமிழை போதனா மொழியாக்குவது சுலபமான முறையாகிவிடும். கலைச் சொல் பட்டியல் தயாரிப்பது அரசாங்கத்தின் கடமை. அது சாத்தியமில்லை என்றால் அந்த வேலையை மேற்கொள்ளும்படி அரசாங்கம் சென்னை சர்வகலா சாலையை தூண்டிவிடலாம். இதற்கு மாறாக ஆங்கிலச் சொற்களை தமிழில் பெயர்ப்பதை மக்கள்தான் செய்ய வேண்டும் – அரசாங்கம் செய்ய முடியாது என்கிறார் காமராஜர். ஏதோ ஆழ்ந்து சிந்தியாமல் அவசரத்தில் இப்படி பேசியிருப்பார் என்றே எண்ணுகிறோம். தமிழின் வளர்ச்சிக்கு அரசாங்கம் பொறுப்பேற்க முடியாதென்றால் அப்புறம் இந்த அரசாங்கம் எதற்காகத்தான் இருக்கிறதோ? ஆந்திரம், ஒரிஸா, ராஜஸ்தான்; மத்தியபாரதம் போன்ற ராஜ்யங்களில் பிரதேச மொழியை அரசாங்க மொழியாக்குவதற்கான முயற்சிகளெல்லாம் ஆட்சியாளரே மேற்கொண்டிருக்கின்றனர். பிற மொழிகளுக்கு கிடைத்த உரிமையைக் கூட தமிழுக்கு மறுப்பது - அதுவும் தமிழரான காமராஜரே மறுப்பது நீதியற்ற செய்கை. இலக்கண இலக்கிய வளமற்ற இந்தியை இந்தியாவில் தேசீய மொழியாக்குவதற்கான பொறுப்பில் சென்னை அரசாங்கம் கூடப் பங்கு எடுத்துக் கொண்டு வருகின்றது. அப்படியிருக்க சென்னை ராஜ்யத்தின் பிரதான மொழியான தமிழுக்கு வாழ்வளிக்க மறுப்பது நம்மை நாமே தாழ்த்திக் கொள்வதாகும்.

அதிகாரத்துக்குவரும் ஒவ்வொருவருக்கும் தங்கள் பதவி காலத்தில் அழியாத புகழ்தரும் ஏதேனும் ஒரு நல்லக் காரியத்தைச் செய்ய வேண்டும் என்ற ஆசை பிறப்பது இயற்கை. அத்தகைய ஆசை காமராஜருக்கும் இருக்கவேண்டும். அவருடைய காலத்தில் தமிழை ஆட்சி மொழியாக்கினால் அதுவே அவருக்கு அழியாத புகழ்தேடும் அரிய செயலாக இருக்கும். ஆகவே முதலமைச்சர் காமராஜர் மதுரையில் தெரிவித்த கருத்தை மறந்துவிட்டு சிந்தித்து தமிழுக்கு வாழ்வளிக்க முன் வருவாராக.

'உமா'வின் பொங்கல் பரிசு !

'உமா'வின் ஜனவரி மாத இதழ் அதிகப் பக்கங்களுடன் – எட்டணா விலையில் பொங்கல் மலராக பொங்கலன்று வெளியாகிறது. மலரில் வெளியிடப்படும் சிறந்த கதைகள் இரண்டுக்கு முதற் பரிசாக 50 ரூபாயும் இரண்டாவது பரிசாக 25 ரூபாயும் அளிக்கப்படும். 'உமா' பொங்கல் சிறு கதைப் போட்டியில் எல்லா எழுத்தாளர்களும் கலந்துக் கொள்ளலாம். கதைகளை டிசம்பர் 16 தேதிக்குள் காரியாலயத்துக்கு அனுப்பிவிட வேண்டும். உறையில் 'உமா பொங்கல் பரிசு' என்று குறிப்பிட வேண்டும். கதைகளை திரும்பப் பெற அத்துடன் போதிய தபால் தலைகளும் இணைக்க வேண்டும்.

— ஆசிரியர்.

கலை விழாவில் களங்கமா?

நாடகக் கலையை வளர்ப்பதில் மத்திய அரசினர் கவனம் செலுத்த முற்பட்டிருக்கின்றனர். இது மகிழ்ச்சிக் குறியதுதான். ஆனால் பல்வேறு மொழிகளைக் கொண்டு பாரத நாட்டில் கலை கலாசாரம் சம்பந்தப்பட்ட துறைகளில், அரசாங்கத்தார் செயல்படும் போது அந்தந்த மொழிக்குரிய மக்களின் மனவழி நடந்துக் கொள்ள வேண்டியது அவசியம். ஆனால் மத்திய அரசாங்கத்தார் மேற்கொண்டுள்ள தேசிய நாடகவிழா விஷயத்தில் தமிழ் நாட்டுக் கலைஞர்களுடைய மனம் புண்படும்வகையில் சம்பவங்கள் நடந்திருப்பது வருந்தத் தக்கதாகும். தேசிய நாடக விழாவை யொட்டி நடைபெற்ற தமிழ் நாடகப் போட்டியில், மக்களிடையே செல்வாக்குடைய நாடகக் கலை ஸ்தாபனங்கள் புறக்கணிக்கப்பட்டு விட்டதாக புகார் கிளம்பியிருக்கிறது. இதைப்பற்றி முதலமைச்சர் காமராஜரும், நிதி அமைச்சர் சுப்ரமணியமும், தெரிவித்துள்ள கருத்துக்களே புகாரின் உண்மைத் தன்மையை ஒப்புக் கொள்கின்றன. பொறுப்பு வாய்ந்த இவ்விருவரும் நினைத்திருந்தால் ஏற்பட்டுவிட்ட தவறை திருத்தியிருக்க முடியும். ஆனால் சூத்திரக் கயிறு டில்லியில் இருந்ததால் அவர்கள் மனவழிச் செயல்பட முடியவில்லை.

தமிழ் நாட்டின் சார்பாக ஒரு நாடகம் தேசிய நாடக விழாவில் நடத்தப்படுகின்றதென்றால், அது உண்மையிலேயே நாடகக்கலையில் தமிழர் அடைந்துள்ள திறமையை அப்படியே படம் பிடித்துக் காட்டுவதாக இருக்கவேண்டும். அப்படிக்கின்றி ஏதோ ஒரு நாடகத்தைக் காட்டி—நடிப்புத்துறையில் நாடகக் கலையில் தமிழருடைய திறமை இவ்வளவு தான் என்று பிற மொழிக்கலைஞர்கள் எண்ணும்படிச் செய்வது தமிழர் ஒவ்வொருவருக்கும் மன வேதனை தருவதாகும்.

இனியேனும் கலை கலாசார துறைகளில் அரசாங்கத்தார் மேற்கொள்ளும் நடவடிக்கைகளில் இது போன்ற தவறுகள் ஏற்படாமலிருக்கும்படி சென்னை கல்வி அமைச்சர் கவனம் செலுத்த வேண்டும். தவறு நடக்க விட்டு விட்டு, தவறை நீக்கவும் துணிவு கொள்ளாமல் வெறும் சமாதானம் சொல்லிக் கொண்டிருப்பதில் பயன் இல்லை. வெளி நாடுகளுக்கு கலைஞர்கள் அடங்கிய தூதுக்குழு அனுப்பும் போதும் கஷ்டப்படும் கலைஞர்களுக்கு உதவிபுரியும் விஷயத்திலும் தமிழ் நாடகக் கலைஞர்களின் பிரதிநிதித்துவ ஸ்தாபனங்களைக் கலந்து கொண்டு செயல் புரிவது அவசியமாகும்.

மேலட்டைச் சித்திரம் :

பறவையினங்களில் சிட்டுக் குருவி - புறு - குயில் - போன்ற சில பட்சிகள் — ஆணும் பெண்ணும் ஒன்றை விட்டொன்று பிரியாமல் ஒன்றுபட்டு உயிர்வாழும் இயல்பை உடையது. இவற்றில் ஆணை விட்டுப் பெண்ணும் — பெண்ணைவிட்டு ஆணும் பிரிய நேருமாயின் — பிரிவுற்ற பறவை ஓயாமல் கத்தி உயிர்விடும். என்னே இப்பறவைகளின் இணையற்ற அன்பு!

பொருளையே பெரிதாக மதித்து தன்னை விட்டுப் பிரிந்து — கடப்பதற்கரிய கடும் பாலைவனத்தைக் கடந்து சென்று தன்னை நினைந்து திரும்பி வராமல், வன்னெஞ்சத்துடன் பிற நாட்டில் நீண்டகாலம் தங்கிவிட்ட தன் கணவனை நினைந்து வருந்திய தலைவி- இரவு நேரத்தில் துயில் கொள்ளவும் விரும்பாமல் உப்பரிகையிலிருந்து விளங்கும் நிலவை எண்ணிப் பெருமூச்சு விடுகிருள். தலைவனை எண்ணி வருந்தும்போதும் அவள் முகம் தனி மெருகுடன் தான் பிரகாசிக்கிறது.

பழமையின் உயர்வு

அன்புள்ள தம்பி,

இப்போது நீ எழுதும் கடிதங்களில் புதுமை புதுமை என்று புதுமையை அதிகமாகப் புகுத்தி எழுதுகிறாய். பழமையின் உயர்வு உனக்குத் தெரியாததற்காக புதுமையைப் பற்றி அதிகமாகப் புகழ்கின்றாய். இப்படி நான் கூறும்போது ஏதோ புதுமையைக் குறைத்துப் பேசுவதாக நீ கருதிவிடாதே.

புதுமையான கருத்துக்களை ஏற்றுக் கொள்பவர்கள் எங்கும் இருக்கிறார்கள். நம் தமிழர்கள் பழங்காலத்திலும் மிகவும் நாகரீகத்துடனும்தான் இருந்தார்கள் என்பது நம் பழைய நூல்களிலிருந்தும் — கல்வெட்டுக்களிலிருந்தும் நன்கு விளங்குகிறது. அக்காலங்களில் மரக்கலங்களில் கடல் கடந்து அன்னிய நாடுகளுக்குச் சென்று வியாபாரம் செய்து வந்த தமிழர்களைப் பற்றிய சீரும் சிறப்பும் பழங்காலத்திலேயே வெளிநாடுகளில் பரவி விட்டது.

தம்பி! பழங்காலக் கொள்கைகளில் சில தற்காலத்துக்கு ஏற்றதாக இல்லாமலிருக்கலாம். சந்தர்பத்துக்கும் சூழ்நிலைக்கும் ஏற்றவாறு கொள்கையை மாற்றிக் கொள்ளலாம். ஆனால் அதற்காகப் பழமையைக் குறைத்துப் பேசக் கூடாது.

ஒரு சமயம் நாமிருவரும் மதுரை தஞ்சாவூர் — சிதம்பரம் முதலிய இடங்களுக்குச் சென்று வந்ததை இப்போது உனக்கு நினைவூட்டுகிறேன். ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்ட மதுரை சோமநாதர் ஆலயத்தையும் — அதன் பிரம்மாண்டமான கல் சுவர்களையும் — அங்குள்ள ஒரே கல்லில் செதுக்கப்பட்ட மிகப் பெரிய சிற்பங்களின் சிறப்பையும் பற்றி நீ நாட் கணக்கில் என்னிடம் பேசினாயல்லவா? அவ்வளவு பெரிய ஆலயத்தை எப்படி அக் காலங்களில் இயந்திரத்தின் உதவியின்றி அமைக்க முடிந்தது என்று ஆச்சரியப்பட்டாய். அடுத்தபடி தஞ்சை சென்றபோது — கலைக் கோயில் பிரகதீசுவரர் ஆலயத்தைக் கண்டோம். ஆலய கோபுரத்தின்நிழல் கீழே விழாமலே இருப்பதை அதுவரை கேள்விப்பட்ட அந்த அற்புதத்தை — அன்று நேரில் கண்டோம்.

அவ்வளவு பெரிய கோபுரத்தின் நிழல் கீழே விழாமல் எப்படி இருக்க முடியும் என்று சந்தேகப்பட்டு ஒரு நாள் முழுவதும் சூரியன் மறையும் வரை இருந்து பார்த்த பின்தான் உன் சந்தேகம் நீங்கியது. அந்தக் கோபுரத்தை எப்படி அமைத்திருக்க முடியும்?— என்று என்னைக் கேட்டாயே அதற்கு இதோ இப்போது பதில் தருகிறேன். அதுதான் தம்பி — நம் பழமையின் உயர்வு! பழங்காலத் தமிழர்கள் கட்டிவிட்டுச் சென்ற கோயில்களை அவர்களின் சந்ததியர்களாகிய நாமே பார்த்து 'தமிழர்களின் திறமையா இது' — என்று ஆச்சரியப்படுகிறோம். ஆனால் ஒன்று மட்டும் எப்போதும் ஞாபகமாக வைத்துக் கொள். அக்கால மனிதன் பொறாமை — பொய் — ஏமாற்றுதல் — இவை மூன்றையும் புறக்கணித்து தன் உழைப்பையும் திறமையையும் முழு மனதுடன் நம்பி அன்பும் அறனும் கொண்டு வாழ்ந்தான். அதனால்தான் அவனால் எதுவும் செய்ய முடிந்தது!

ஆனால் 'புதுமை' — என்னும் இந்த நாகரீக உலகிலோ?

வாழ்க்கையின் ஆக்க வேலைக்கு பதில் மக்கள் அழிக்கும் பயங்கர இயந்திரங்களை அதிகமாக செய்கிறார்கள். கத்தி ஈட்டிக் கொண்டு போரிடாமல் கடலுக்குள் ஓடும் சப்மரீன்கள் – ஆகாயக் குண்டுகள் – விஷவாயு குண்டுகள் — ஹைட்ரஜன் குண்டுகள் – முதலியவைகளைக் கொண்டு எதிரிகளோடு போரிடும்போது ஒன்றுமறியா நிரபராதி மக்களையும் அழித்து விட்டுப் போகும் இந்தப் புதுமையைத் தவிர – வேறு என்ன புதுமை வந்துவிட்டது?

தம்பி, நாடு வளர வளர–மக்கள் அதிகரிக்க அதிகரிக்க பழமையின் பெருமை புதுமையின் மோகத்தினால் குன்றுவது இயற்கை. பழங்காலத்தில் தமிழர் ஒழுக்கத்துக்கு வழி காட்டியாய் நடந்தனர். அறத்துடனும்–அன்புடனும் நெறி தவறாமல் ஒருவிதக் குறையுமின்றி இல்லறம் நடத்தினர். தங்கள் உயிரைக் காட்டிலும் ஒழுக்கத்தையே சிறப்புடன் போற்றி வந்தனர். ஆனால் புதுமை நாகரீகம் புற்றீசல் போலப் பரவி விட்ட இப்போது, வழிபடும் கோவில்கள் — தண்டிக்கும் நீதி மன்றங்கள்– தாக்கும் பத்திரிகைகள் – எல்லாமிருந்தும் நாளுக்கு நாள் குற்றம் செய்வோரும் – குற்றங்களும் – அதிகரித்துக் கொண்டே போகிறது. மேல் நாடுகளில் தற்போது சிறுவர்கள் குற்றம் செய்வதுதான் அதிகரித்து இருக்கிறது. தற்கால நாகரீகத்தின் இருதயங்கள் என்று கூறப்படும் லண்டன் – சிகாகோ– நியூயார்க் – முதலிய இடங்களில்தான் உலகத்திலேயே மிகப் பெரிய பாதகச் செயல்கள் நடைபெறுகின்றன. மேற்கு நாட்டு நாகரீகத்தின் மத்திய ஸ்தலங்களாகிய அவைகள் எல்லா விடங்களைக் காட்டிலும் அபாயகரமானவையாகவும்–அநீதி நிறைந்தவையாகவும் – மிருகத் தன்மை குடி கொண்டவையாகவும் இருக்கின்றன. இவையெல்லாம் புதுமையின் விளைவு அல்லவா?

தம்பி! – வானளாவி நிற்கும் கோபுரங்களைக் கண்டு வியக்

இந்தியாவின் தலைசிறந்த
பட்டணம் பொடி
REGISTERED
TRADE MARK
காரம் நிறைந்தது
ஆனால் காந்தாது
மணம் மிகுந்தது
ஆனால் மாறாது
நிறம் ஜொலிப்பது
ஆனால் மங்காது
T.A.S
ரத்தினம்
பட்டணம் பொடி
தபால் பெட்டி 1151, சென்னை-21.

கிறோம். வடிவமில்லா தனிப் பாறைக்கு வடிவமளித்து அதிலே தனிக் குகைக் கோயிலமைத்த சிறப்பைக் கண்டு அதிசயிக்கிறோம். ஆயிர மாண்டுகள் கடந்தும் மங்கி அழியாத வண்ணச் சித்திரங்களின் சிறப்பைப் போற்றிப் புகழ்கிறோம். யாழையும் அத்துடன் இழைந்து மனதைப் பரவசப்படுத்தும் பண்ணையும் இசைத்து மகிழ்கிறோம். இலக்கியத்தில் பெண்மையின் சிறந்தத்தை சித்தரிக்கும் சிலப்பதிகாரத்தையும்—காதல் — துறவு இரண்டின் போராட்டத்தை விளக்கும் மணிமேகலையையும் மீண்டும் மீண்டும் படித்துக் களிப்படைகிறோம். கலை ஞானல் மக்கள் அழிவதில்லை. கெடுவதில்லை மகிழ்வடைகிறார்கள். இது ஒன்றே பழமையின் சிறப்பை உனக்கு நன்கு விளக்கும்.

உலகப் பெரும் நூலாசிரியர் வள்ளுவர் – பழமையிலே தான் புதுமையைக் கண்டார். தற்காலத் தமிழ்த் தென்றல் திரு. வி. க. வை ஒரு முறை காணச் சென்றோமே அப்போது அவர் பழமையில் புதுமையைப் புகுத்தி எழுதிய பல புத்தகங்களை படித்துக் காட்டினரல்லவா? அந்தப் புலவர் கூட அண்மையில் வ. உ. சி. போல் வறுமையில் மாண்டார். தமிழ்கள் அறிஞர்கள் – ஞானிகள் யாவரும் பழமையில் அன்போடு – அறத்தைக் கடைப்பிடித்து வாழ்ந்தார்கள். ஆனல் தற்போது புதுமையின் போர்வையிலே மக்கள் பண்பும் – அன்பும் கெட்டு வாழ்வதைத் தவிர வேறு என்ன நீ கண்டாய். அடுத்த கடிதத்தில் இன்னும் விரிவாக விளக்குகிறேன்.

உன் அன்புள்ள தமையன்.

புதிய சந்தாதாரர்களுக்கு சலுகை......

ஜனவரி மாதம் 10-உக்குள் சந்தாதாரர்களாக சேருபவர்களுக்கு மலர்கள் உள்பட

வருட சந்தா ரூபாய் மூன்றுதான்!

'உமா' பொங்கல் மலர்

ஜனவரி இதழ் பொங்கல் மலராக பொங்கலன்று எல்லா இடங்களிலும் கிடைக்கும்.

150 பக்கங்களுடன்

கண்ணைக் கவரும் வண்ண ஓவியங்களுடனும்,
கருத்துக்கள் பொதிந்த கட்டுரைகளுடனும்,
சிறந்த சிறு கதைகளுடனும்
வெளி வருகிறது..

விலை 8 அணா.

உங்கள் பிரதிக்கு உள்ளூர் ஏஜன்டிடம் சொல்லி வையுங்கள்

விபரங்களுக்கு:

மானேஜர்: 'உமா' த. பெ. நெ. 1377. சென்னை–1.

அலை ஓய்ந்தது

ர. சண்முகம்

9

என் நண்பரின் வீடு ஒரு சாதாரண கீற்றுக் கொட்டகை தான், வாழ்க்கைக்குத் தேவையான குறைந்தபட்ச வசதி கூட அங்கு கிடையாது. ஒரு கயிற்றுக் கட்டில், ஏராளமான புத்தகங்கள், சிறு அடுப்பு ஒன்று, இரண்டு மூன்று அலுமினிய சமையல் பாத்திரங்கள் ஆகிய இவைதான் என் நண்பரின் வீட்டு ஆஸ்திகள். எந்த வித ஒழுங்கு முறையும் இன்றி மூலைக்கு மூலை புத்தகங்களும் பத்திரிகைகளும் சிதறிக்கிடக்கும். வீட்டுக்கு யார் யாரோ, எந்தந்த நேரத்திலும் வருவார்கள்; உரிமையோடு உலாவுவார்கள். சில நாட்கள் தங்கியும் இருப்பார்கள். அவர்களெல்லாம் என் நண்பருக்கு அறிமுகமானவர்கள் என்று கூறிவிட முடியாது. வாழ்க்கையில் கதியற்றோர், வசதிக் குறைவான ஆத்மாக்கள், நண்பரின் சிபாரிசை எதிர்பார்த்து வேலை தேடி வரும் அப்பாவிகள் ஆகிய இந்த ரகமான ஆசாமிகளின் கூட்டம் வீட்டில் சதா நிறைந்து கிடக்கும்.

நண்பரின் வாழ்க்கைத் துணைவி என்ற உரிமையோடு அந்த வீட்டில் காலடி எடுத்து வைத்த அன்றே அங்கிருந்த அலங்கோல நிலையைக் கண்டு பானுமதியின் முகம் வெறுப்பால் சுருங்கியதை நான் கண்டேன்.

''இந்த இடந்தான் நமது மாளிகை நமது சொர்க்கம்.....'' என்று என் நண்பர் குதூகலத்துடனும் வேடிக்கையாகவும் கூறியபோது ''தியாகம் செய்வது எப்படி என்பதைக் கற்றுக் கொடுக்கும் பள்ளிக்கூடம் என்று வேண்டுமானாலும் சொல்லுங்கள்....'' என்று உடைந்த குரலில் பானுமதி கேலி செய்ததை நண்பர் கவனிக்கவில்லை.

வீட்டுக்கு வந்த கொஞ்ச நேரத்திற்கெல்லாம் அவர் அரசியல் சம்பந்தப்பட்ட ஒரு அவசர வேலை காரணமாக வெளியே போய்விட்டார். போனவர் சீக்கிரம் திரும்புவதாகவும் தெரியவில்லை.

பானுமதி கொஞ்ச நேரம் அங்கே கிடந்த உடைந்த நாற்காலி ஒன்றில் உட்கார்ந்திருந்தாள். நண்பரின் மேஜையடியில் உட்கார்ந்து எழுதிக் கொண்டிருந்த என் பக்கம் வந்து ''நீங்கள் அவருடைய உறவினரா?'' என்று விசாரித்தாள்.

''உறவினர் தான். அதாவது தமிழ்த் தாயின் புதல்வர்கள் என்ற அடிப்படையில்...'' என்று விளையாட்டாகக் கூறினேன். என்னுடைய ஹாஸ்யத்தைக் கேட்டு சிரிப்பதற்குப் பதில் அவள் முகம் கடுகடுத்தது.

''சரியான சிஷ்யர்கள் தான்....! உங்கள் நண்பருக்கு சாப்பாட்டைப் பற்றிய விஷயத்தில் ரொம்ப ஞாபக மறதி உண்டு போலிருக்கிறது....'' என்று கடுமையாகக் கூறினாள்.

வந்தவளுக்கு சமையல் செய்வதற்கான ஒரு வசதியைக் கூடச் செய்யாமல் நண்பர் போய்விட்டது அப்பொழுதுதான் எனக்கு நினைவுக்கு வந்தது.

உடனே நான் ஓடிச் சென்று

சமையலுக்குத் தேவையான பொருட்கள் சிலவற்றை சேமித்து வந்து அவளுக்கு முன்னல் வைத்தேன்.

''என்ன இது?'' என்று கேட்டாள் அவள். மிக எளிமையுடன் கூடிய அந்த பொருட்களைக் கண்டதும் அவளுக்கு சிரிப்புத் தான் வந்தது. பிறகு ''இவற்றை என்ன செய்ய வேண்டும்?....'' என்று அவள் ஒரு கேள்வியைப் போட்ட போது எனக்கே ஆச்சரியமாக இருந்தது.

''சமையல் செய்வதற்காக....'' என்று தயக்கத்தோடு சொன்னேன்.

''நானு சமைப்பது?''.... என்று வியப்பு தவழ அவள் என்னை நோக்கினுள். ''இங்கே ஒரு வேலைக்காரி கூடக் கிடையாதோ''.... என்று அவள் கேட்ட கேள்விக்கு என்ன பதில் சொல்வதென்றே எனக்குத் தோன்றவில்லை. என்ருலும் சமாளித்துக் கொண்டு ''சுயதேவைப் பூர்த்தியில் நண்பருக்குக் கொஞ்சம் அதிகபற்று. மேலும் இத்தனை நாட்களாக பிரம்மச்சாரியாக வாழ்க்கை நடத்திப் பழக்கப்பட்டவர். இனி மேல்தான் ஏதாவது ஏற்பாடுகள் செய்ய வேண்டும்....''

பானுமதி முணு முணுத்துக் கொண்டே சமையல் செய்யத் தொடங்கினுள்.

அன்று இரவுதான் என் நண்பர் வீடு திரும்பினுர். வரும்போதே ''பானுமதி...'' என்று அன்பு தவழ அழைத்துக் கொண்டே வீட்டுக்குள் பிரவேசித்தார். பானுமதி முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டு மூலையில் ,உட்கார்ந்திருந்தாள். ஒரே நாளில் வாழ்க்கையில் ஏற்பட்ட கசப்பு அவள் முகத்தில் திரையிட்டு நின்றது.

பகல் முழுவதும் தன்னைப் பிரிந்திருந்த ஏக்கமாக இருக்கும் என்று எண்ணிய நண்பர் அவள் மனதை உல்லாசப்படுத்த எண்ணி விளையாட்டாகப் பேசத்தொடங்கினுர். பானுமதியோ சீறி விழுந்தாள். அவருடைய வார்த்தைக்கு வார்த்தை எதிர்த்து சூடாகப் பதில் கொடுத்தாள்.

நண்பருக்கு ஆரம்பத்தில் ஒரே திகைப்பாக இருந்தது. பிறகு கொஞ்ச நேரம் பொறுமையைக் கடைப்பிடித்து மௌனமாக இருந்து பார்த்தார். பானுமதியோ ஓய்வதாக இல்லை. சம்பந்தா சம்பந்தமின்றி ஏதேதோ பேசிக் கொண்டேபோகவே சினத்தையே கண்டறியாத என் நண்பரின் முகத்திலே சினத்தின் சின்னம் தலைகாட்டத் தொடங்கியது.

எனக்குத் தர்ம சங்கடமாகப் போய்விட்டது. தாம்பத்திய வாழ்வு நண்பருக்கு ஒத்து வராத ஒன்றுதான் என்று எனக்குத் தெளிவாகப் புரிந்துவிட்டது. ஆனுல் அவருடைய மணவாழ்க்கை இப்படி ரசாபாசமாக ஒரே நாளில் முடிவடைந்து போவதைக் காண எனக்கே சகிக்கவில்லை.

எனவே அவர்கள் வாக்குவாதத்தில் நான் வலிய பிரவேசிக்க வேண்டிய அவசியம் நேர்ந்துவிட்டது.

நண்பரைத் தனியே அழைத்துச் சென்று அவரை சமாதானப்படுத்த முற்பட்டேன்.

''பானுமதியின் மீது இந்த சமயத்தில் குற்றம் சுமத்துவது சரியானதல்ல. என்னதான் தேச சேவையில் ஈடுபட்டாலும் அவள் ஒரு பெண் தானே! குடும்பப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட உடனே அது சீர்கெட்டு ஒழுங்கற்றுக் கிடப்பதைக்காண அவளுக்கு சகிக்க முடியவில்லை. நாம் தனி வாழ்வு நடத்தியவரை சரி; இனி, குடும்ப வாழ்வை மேற்கொண்ட பின் அதற் கேற்ப வாழ்க்கையில் கொஞ்சம் மாறுதலை உண்டாக்கிக் கொள்ள வேண்டுவது அவசியந்தான்'' என்று நண்பருக்கு விளக்கினேன்.

பானுமதியை தனியே சந்தித்து, என் நண்பரிடம் அமைந்திருக்கும் சில தவிர்க்க முடியாத குறைபாடு

களை எடுத்துக் கூறி இதெல்லாம் தன்னை மறந்து தேசப் பணியில் ஈடுபட்டதன் விளைவுதான் என்றும், விரைவில் அவரைத் திருத்தி விடலாம் என்றும் உறுதி கூறினேன்.

பிறகு நானே அவர்களது குடும்ப வாழ்வை நிலைப்படுத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய ஆரம்பித்தேன்.

கொஞ்சம் வசதிகள் நிரம்பிய சிறிய தனி வீடு ஒன்றை வாடகைக்கு அமர்த்தினேன். குடும்பத்துக்குத் தேவையான தட்டுமுட்டு சாமான்களை முடிந்தமட்டில் வாங்கிப் போட்டேன். ஒரு வேலைக்காரியையும் ஏற்பாடு செய்தேன்.

இவ்வளவையும் என் சொந்தப் பொறுப்பில் என் கையிலிருந்த அரை குறைப் பொருளைக் கொண்டும் நண்பர்களிடம் கடன் வாங்கியும் நானே ஏற்பாடு செய்தேன்.

இந்த என்னுடைய வேலைகளைக் கண்டு பானுமதிக்குக் கொஞ்சம் திருப்தி ஏற்பட்டது. ஆனால் என் நண்பரோ அதிருப்தி தான் கொண்டார். இப்படியெல்லாம் சுயவாழ்வில் வசதிகளைப் பெருக்கிக் கொள்ளும் மனோபாவம் ஏற்பட்டாலே பொது வாழ்வில் ஊழல் படிந்துவிடும் என்று அவர் வருந்தினர். என்றாலும் ஒன்றும் சொல்ல முடியாத எக்கச்சக்கமான சூழ்நிலையின் நடுவே அவர் இருந்ததால் வாய் திறக்கவில்லை...

தன் கடந்த கால வரலாற்றைச் சொல்லிக் கொண்டு வந்த திருவரங்கநாதர் அந்த இடத்தில் சற்று நிறுத்திவிட்டு எதிரே தான் சொல்வதைக் கேட்டுக் கொண்டிருந்த சாவித்திரியின் முகத்தை உற்று நோக்கினர். அவள் மன ஈடுபாட்டுடனேயே கதையைக் கேட்கிருள் என்று தோன்றியதால் அவருக்குச் கொஞ்சம் திருப்தியாக இருந்தது. சாவித்திரி முன்பு கொடுத்த தண்ணீர்டம்ளர் மேஜை மீது இருந்தது. அதை எடுத்து மிகுதியாக இருந்த நீரில் இரண்டு வாய் அருந்திவிட்டு மேலே சொல்ல ஆரம்பித்தார்.

''....உனக்கு நான் இழைத்த கொடுமைகளுக்குப் பரிகாரம் கூற வந்த நான் என்னென்னவோ கதைகளைக் கூறிக் கொண்டு போகிறேனே என்று உனக்கு சலிப்பாக இருக்கிறதோ என்னவோ. என்னுடைய கொடுமைகளை மறைப்பதற்கு ஏதோ கதை சொல்லி ஏமாற்றுவதாக உன் மனம் எண்ணி என்னைச் சந்தேகித்தால் கூட அது வியப்பானதல்ல. ஆனல் நான் கூறும் இந்த வரலாறு தான் என்னைக் கொடியவனுக்கியது என்பதென்னவோ முழு உண்மை. இதைப் போகப் போக நீயே உணர்ந்து கொள்வாய்.

''புதுக் குடித்தனத்துக்கு ஏற்பாடு செய்ததனலேயே குழப்பத்துக்கு ஒரு முடிவு ஏற்படவில்லை. மாருக புதுப் புதுக் குழப்பங்கள் என் நண்பரின் வாழ்வில் உருவெடுத்தன.

என் நண்பர் மணமாவதற்கு முன் தன் வாழ்வில் மனைவி என்ற உரிமைப் பட்டத்தோடு ஒரு பெண் பிரவேசித்தால், அவளுடைய தகுதி எப்படிப்பட்டதாக இருக்க வேண்டும் என்று ஒரு உருவகம் செய்து வைத்திருந்தார். தன் மனைவி பொது வாழ்வில் ருசியுள்ள மனப்பண்பு பெற்றவளாக இருக்க வேண்டியது அவசியம் என்று அவர் கருதினர். ஆனல் அவள் ஒரு குடும்ப விளக்காகத் திகழ்ந்து, வீட்டிலேயே தங்கி, வீட்டுப் பொறுப்பை பரிபூரணமாக ஏற்பதோடு வெளியுலகத்துக்கான நல்ல ஆலோசனைகளைக் கூறும் நன் மந்திரியாகவும் விளங்கவேண்டும் என்பது அவருடைய கனவு. தீவிரமாக அரசியலில் ஈடுபட்ட தன் விளைவாக தன் சுயவாழ்வில் ஒரே குழப்பம் தாண்டவமாடுவதை அவர் உணர்ந்திருந்தார். பல தடவை குளிக்கவும், உணவு உண்ணவும் கூட அவர் மறந்து விடுவார். காலா காலத்தில் சாப்

நவம்பர் 27உ முதல்

சென்னை வெல்லிங்டன், கிருஷ்ணா, உமா

மற்றும் தென்னாடெங்கும்

பிடும் பழக்கம் அவரிடம் கிடையவே கிடையாது. இதனல் அவருடைய உடல் நலம் அடிக்கடி கெட்டுவிடுவதுண்டு.

இந்தக் குறைபாடுகளைக் களைந்து தன்னைப் பொறுப்புடன் கவனித்துக் கொள்ளும் பண்பு தன் மனைவியாக வரும் பெண்ணுக்கு இருக்க வேண்டும் என்று அவர் எண்ணமிட்டார். இதையெல்லாம் அவர் என்னிடம் பல முறை வெளியிட்டிருக்கிருர்.

ஆனல் பானுமதியின் குண விசேஷங்களோ இவற்றிற்கெல்லாம் நேர் எதிரிடையாக இருந்தது. என்நண்பரைப்போல தானும் அரசியலில் நேரடியாகக் கலந்து கொள்ள வேண்டும் என்று அவள் விரும்பினுள். என் நண்பரைக் கேட்காமல் கூட சில பொதுப்பணிகளில் அவள் கலந்துகொண்டாள். மற்றும் நண்பர் ஈடுபடும் மாநாடுகள் பொதுக் கூட்டங்களில் நண்பரின் உத்தரவைப் பெருமலே திடீரெனப் பிரவேசித்து மேடையில் ஏறி அமர்ந்துவிடுவாள். அந்த இடத்தில் தான் சொற்பொழிவாற்ற விரும்புவதாக வலிய தன் எண்ணத்தை கூட்டத் தலைவருக்கு அறிவிப்பாள்.

கூட்டத்தலைவருக்கு மட்டுமின்றி அங்கிருக்கும் எல்லோருக்குமே பானுமதியின் வேண்டுகோள் அசம்பாவிதமாக இருக்கும். வேறென்ன செய்வது; வேண்டா வெறுப்பாக தலைவர் அவளைப் பேச அனுமதிப்பார். என் நண்பருக்கு சொல்ல இயலாத மன வேதனை ஏற்படும். மனம் குன்றி, தலை குனிந்து ஒடுங்கிப்போய் ஓர் தனி யிடத்தில் ஒதுங்கி விடுவார்.

இப்படி அவர் மனம் புண்படும் நிகழ்ச்சிகள் நாள்தோறும் நடைபெறுவது தவிர்க்க முடியாததாகி விட்டது. என் நண்பர் இயற்கையாகவே மிகவும் மென்மையான இதயம் படைத்தவர். பிறர் மனம் புண்படும் சிறு சொல்லைக் கூட சொல்ல அவருடைய நாக்கு அஞ்சும். இந்தப் பண்பாடு பானுமதி

> காலம் மனிதனுக்கு ஆதாரமா? மனிதன் காலத்துக்கு ஆதாரமா? இது எப்படிப் போனலும், எக்காலத்திலும் மனிதனுக்கு ஆதாரம் பணம் தான்.
>
> — ஞானப்பிரகாசம்

யின் கொட்டத்தை அதிகப்படுத்தி விட்டது. தட்டிக் கேட்க ஆள் இல்லாத காரணத்தால் அவள் சண்டப் பிரசண்டமாக உலாவத் தொடங்கினுள்.

குடும்பச் செலவு நாளுக்கு நாள் அதிகரித்தது. தேவையில்லாத ஆடம்பரப் பொருள்களெல்லாம் குவியத் தொடங்கின. உயர்தரமான கதர் சில்க் புடவைகள் அவளுடைய பெட்டியிலே பெருகின. ஆடம்பரமான அணிகளை நிறைய வாங்கினுள்.... வீட்டுக்கு திடீரென ஒரு நாள் ரேடியோ பெட்டி ஒன்று விஜயம் செய்தது. இதற்கெல்லாம் பணம் ஏது என்று நானும் நண்பரும் திகைத்தோம். பின்னர் விஷயம் விளங்கியது.

ஊரில் என் நண்பரிடம் நன் மதிப்பு வைத்துள்ள செல்வந்தர் வீட்டுக்கெல்லாம் பானுமதி வலிய சென்று நண்பர் கேட்டு வாங்கி வரச் சொன்னதாக அடிக்கடி பணம் பெற்று வந்தாளாம்.

இதையறிந்ததும் நண்பர் இடி விழுந்தவர் போலானுர். அரசியல் பெயரால் சுயநல வாழ்வைப் பெருக்கிக் கொள்ளும் கயவர்களுக்கு மேடைகளில் சாட்டையடி கொடுக்கும் என் நண்பரின் மனைவி ரேடியோ வாங்குவதற்கும், ஆடம்பர உடையணிகள் சேகரிப்பதற்கும் கண்டவர்களிடம் பணம் பெறுகிருள் என்ருல் ஊர் வம்பையே தொழிலாகக் கொண்ட வீணர்களின் வாய் சும்மா இருக்குமா? என் நண்பர் கேலிக்கிடமான ஒரு பொருளாகி விட்டார். அவருடைய

தேசப்பணி, ஒரு போலி வேஷம் என்று கண்ட கண்ட இடங்களிலெல்லாம் பேசப்பட்டது. பானுமதியின் செயல்கள் அத்தனையும் என் நண்பரின் ஆலோசனையின் பேரிலேயே நடைபெறுவதாக நம்புவதற்கு வேண்டிய சாட்சியங்களை வெகு சுலபமாக அவருடைய எதிரிகள் பரப்பினர்.

சுருக்கமாகச் சொன்னால் என் நண்பர் கொஞ்சங் கொஞ்சமாக பொதுமக்கள் முன்னிலையில் செல்லாக்காசாக மாறிக் கொண்டிருந்தார் — அதாவது மாற்றப்பட்டுக் கொண்டிருந்தார்.

எத்தகைய இடையூறுகள் ஏற்பட்டாலும் சிரித்த முகத்துடன் மௌனமாக சகித்துக் கொள்ளும் இயல்பு படைத்தவர் என் நண்பர். தனக்கு ஏற்படும் இன்னல்களை சொல்லால் மட்டுமல்ல, சிறு உணர்ச்சியால்கூட வெளியிடமாட்டார். இப்படிப்பட்ட பெருந்தன்மை பூண்டவர் ஒருநாள் இரவு என்னிடம் வாய்விட்டே அலறிவிட்டார். அவருடைய இதயத்தில் எவ்வளவு பயங்கரமான காயம் பட்டு அதில் உதிரம் பெருக்கெடுத்து ஓடுகிறது என்பதை அன்றுதான் நான் உணர்ந்தேன். இந்த இக்கட்டான நிலையை உடனடியாக மாறுதலுக்கு உட்படுத்தாவிட்டால் ஏதாவது பயங்கர நிகழ்ச்சியொன்று நடந்து விடும் என்று எனக்குத் தோன்றியது. என் மனதில் இரண்டு வழிகள் தோன்றின. பானுமதியிடம் சூழ்நிலையைத் தெளிவாக விளக்கி தன்னைத் திருத்திக் கொள்ளுமாறு வற்புறுத்தலாம்; அல்லது கண்ணியமான முறையில் என் நண்பருக்கும் பானுமதிக்கும் உள்ள தொடர்பை அறுத்துவிடலாம். ஆனால் இரண்டு முடிவுகளும் அவ்வளவு சுலபத்தில் முடியக் கூடியதல்ல என்பதையும் நான் உணராமல் இல்லை. பானுமதி அவ்வளவு சுலபத்தில் திருந்துவாள் என்பதற்கான அறிகுறி எதுவும் தெரியவில்லை. விவாக ரத்து விஷயத்தையும் ரசாபாசமின்றி அவள் ஒப்புக்கொள்வாள் என்று நம்பவும் இயலவில்லை. வேண்டுமென்றே இந்த விஷயத்தை பகிரங்கப்படுத்தி ஊர் சிரிக்க வைக்க முற்பட்டால்?.... இந்தத் தகராறுகள் காரணமாக என் தன்மான உணர்ச்சி பாதிக்கப்பட்டாலும் பரவாயில்லையென நான் துணிந்தேன். பானுமதியை எப்படியாவது தனியே சந்தித்து இது சம்பந்தமாக விவாதிப்பது என்று முடிவு கட்டிக்கொண்டேன். என்னுடைய சக்தி அவ்வளவையும் திரட்டி பானுமதியின் மனதை மாற்ற முயற்சிப்பது என்று தீர்மானம் செய்துகொண்டேன். அதற்கான சந்தர்ப்பத்தையும் எதிர்பார்த்து நின்றேன்.



என் நண்பர் ஊரிலில்லாத சமயமாகப் பார்த்து ஒருநாள் மாலை நான் மெல்ல பானுமதியை அணுகினேன்.

அப்போது அவள் தன்னைப் பிரமாதமாக அலங்கரித்துக்கொண்டு எங்கோ வெளியே புறப்படத் தயாராகிக்கொண்டிருந்தாள். என்னுடைய திடீர் வருகையைக்கண்டு அவள் கண்கள் வியப்பால் விரிந்தன.

''உங்களிடம் சில முக்கியமான விஷயங்களைப் பற்றி விவாதிக்க எண்ணினேன்....'' என்றேன் தயக்கத்தோடு.

''என்னுடனா?''... என்று ஆச்சரியம் பொங்கக் கேட்டாள் பானுமதி.

''ஆமாம்....'' என்று நான் சொன்னபோது அவள் உதடுகளில் கேலிப் புன்னகை அரும்புவதைக் கவனித்தேன்.

''ஏதாவது அரசியல் பிரச்னையா'' என்று கேட்டாள் பானுமதி.

''இல்லை.... குடும்பப் பிரச்னை தான்''.

''எந்தக் குடும்பம்?''....

''நமது குடும்பத்தைப் பற்றி தான்......''

அவள் என் முகத்தை நிதானமாக உற்று நோக்கினாள். பிறகு ''உங்களுடைய மனோபாவம் எனக்கு நிரம்பவும் பிடிக்கிறது. இந்த வீட்டில் உண்மையிலேயே ஒருவரிடம் எனக்கு நன்மதிப்பும் அன்பும் இருக்கிறதென்றால் அது நீங்கள்தான்; ஏனெனில் அரசியலுடன் உங்களுக்கு மனிதர்களைப் பற்றிய நினைவும் இருக்கிறது....'' என்றாள்.

அவள் கேலியாகப் பேசுகிறாளோ என்று எனக்குச் சந்தேகம் ஏற்பட்டது. இந்த மாதிரி அவள் என்னிடம் என்றுமே பேசியதில்லை.

''வேடிக்கை செய்கிறேனோ என்று உங்களுக்கு சந்தேகம் தோன்றுகிறதாக்கும். உண்மையாகத்தான் சொல்கிறேன். நான் இங்கே வந்தபிறகு உங்களால் தான் இவ்வளவு நாட்களாக நடமாடிக் கொண்டிருக்கிறேன். நீங்கள் இல்லாமல் இருந்திருந்தால் உங்கள் நண்பரின் அலட்சிய சுபாவமே என்னைக் கொலை செய்திருக்கும்; அல்லது என்னைச் சூழ்ந்திருக்கும் தனிமையின் பயங்கரம் தாளாமல் நானே தற்கொலைசெய்துக் கொண்டிருப்பேன்''



இதைச் சொல்லிவிட்டு பானுமதி என் முகத்தைக் கவனித்துவிட்டுத் தொடர்ந்து பேசினாள்.

"தனிமை, என்று நான் கூறுவதன் பொருள் விளங்குகிறதா. நீங்கள் பிரம்மச்சாரி, ஒரு வேளை உங்களுக்குப் புரியாமல் கூட இருக்கலாம்... சரி.... இப்போது நான் வெளியே போகிறேன். இரவு நாம் சந்திப்போம். நானும் உங்களுடன் சில விஷயங்கள் பற்றிச் சண்டை பிடித்தாக வேண்டும். நீங்களும் அப்போது உங்கள் விவாதத்தை நடத்தலாம்" என்று கூறிவிட்டு அவள் வேகமாக வெளியே போய்விட்டாள்.

அவளுடன் பேசிய அந்தச் சில நிமிஷ நேரங்களில் அவள் என்னை ஒரு குழப்பத்தில் ஆழ்த்திவிட்டே சென்ருள். அவளுடைய பேச்சின் பின்னுல் மறைந்திருந்த புதிர் என் கண்களுக்குத் தெரியவே இல்லை. மூளையைப் போட்டுக் கலக்கிக் கலக்கி யோசித்தேன். ஒன்றுமே புலப்படவில்லை.

சொந்த அலுவல்கள் சம்பந்தமாக வெளியே போய் சுற்றிவிட்டு இரவு சுமார் எட்டு மணிக்கு வீடு திரும்பினேன். பானுமதி எனக்காக வீட்டில் தயாராகக் காத்திருப்பாள் என்று எதிர்பார்த்தேன். ஆனல் அவளுடைய சாயலையே வீட்டில் காண முடியவில்லை. மாலை வெளியே சென்றவள் இன்னும் திரும்பவில்லை போலிருக்கிறது என்று எண்ணி நண்பரின் அறையில் விளக்கைப் போட்டுக் கொண்டு மேஜைக்கு எதிரே உட்கார்ந்தேன்.

மேஜை மீது ஒரு கடிதம் எழுதி வைக்கப்பட்டிருந்தது. பானுமதியின் கையெழுத்தாக இருக்கவே ஆவலுடன் கவனித்தேன். எனக்குத்தான் எழுதியிருந்தாள்.

"ஆற்றங்கரைப் பிள்ளையார் கோவில் பக்கம் உங்களுக்காக காத்துக் கொண்டிருக்கிறேன். உடனே வரவும்.... —பானுமதி"

என்று கடிதத்தில் குறிப்பிட்டிருந்தாள்.

மாலையில் அவளுடன் விவாதிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொண்டதற்கிணங்கவே அவள் தனியே என்னைச் சந்திக்க விரும்புகிருள் என்று நான் கருதினேன். ஆனல் அதற்கு ஆற்றங்கரைதான் சரியான இடமா? அதுவும் இரவு எட்டு மணிக்குப் பிறகு....!!

ஆற்றங்கரைப் பிள்ளையார் கோவில் பக்கத்தை அந்த ஊர் மக்கள் மாலை நேரத்தில் பொழுது போக்கும் இடமாக உபயோகித்து வந்தார்கள். ஆற்றில் எப்பொழுதும் தண்ணீர் ஓடுவதில்லை. கோடை காலங்களில் பெரும்பாலும் வரண்டுதான் கிடக்கும். ஆற்றங்கரையின் இருபுறங்களிலும் அடர்த்தியான மரஞ்செடிகள் பசுமையாகக் காட்சியளிக்கும். மாலை நேரங்களில் இளங் காற்றை அனுபவித்த வண்ணம் ஆற்றின் வரண்ட மணற்பரப்பில் அமர்ந்திருப்பது மனதிற்கு உல்லாசமாக இருக்கும். நிலவுக் காலங்களில் நானும் என் நண்பரும் ஆற்றுக்கு வந்து மணற்பரப்பில் அமர்ந்து நீண்டநேரம் சம்பாஷித்திருந்து செல்லுவோம். அந்த இடம் ஊரைவிட்டுச் சற்று ஒதுங்கியிருந்ததால் இரவு நேரங்களில் அனேகமாக ஜன நடமாட்டம் இருக்காது. அந்த இடத்திற்குத் தான் பானுமதி என்னை வரச் சொல்லியிருந்தாள்.

என்னை அந்தத் தனியிடத்தில் சந்திக்கச் சொல்லியிருந்தது என் மனதில் விசேஷமான அர்த்தம் எதையும் உண்டாக்கவில்லை. என்ருலும் நண்பர் ஊரிலில்லாத சமயத்தில் இரவு எட்டு மணிக்கு மேல் ஊருக்கு வெளியே தனியிடத்தில் பானுமதியை சந்தித்துப் பேசிக் கொண்டிருப்பது முறையா என்றும் எனக்குத் தோன்ருமல் இல்லை.

எது எப்படியிருப்பினும் பானுமதியை அவள் குறிப்பிட்ட இடத்தில் சந்திப்பது என்று தீர்மானித்தேன். வேறு எதைப்பற்றியும் சிந்திக்காமல் வெளியே புறப்பட்டு விட்டேன்.

அப்பொழுது நிலாக்காலம் வானத்தில் நிலாவின் ஆட்சி பரிபூரணமாக இருந்தது. அந்தநேரத்தில் இயற்கை வளம் நிறைந்த ஆற்றங்கரைப் பிரதேசத்தில் நடப்பது எனக்கு ஒருவித மன மகிழ்ச்சியையே அளித்தது.

ஆற்றின் நடுவே பானுமதி படுத்திருப்பதைக் கவனித்தேன். அந்தப் பக்கமாக நடந்து சென்று அவளுக்கு முன்னால் உட்கார்ந்தேன்.

வேறு பக்கமாக முகத்தைத் திருப்பிய வண்ணம் ஏதோ யோசனையில் ஆழ்ந்திருந்த அவள் என் காலடியோசை கேட்டதும் திரும்பிப்பார்த்து புன்முறுவலுடன் "வந்து விட்டீர்களா? ஒருவேளை வராமல் இருந்துவிடுவீர்களோ என்று பயந்தேன்...." என்றாள்.

அவள் என்னை வரவேற்ற வண்ணம் திரும்பிப் படுத்தாளே தவிர எழுந்திருக்கவில்லை. இது எனக்கு சற்று அதிர்ச்சியைத்தான் தந்தது.

"உங்கள் நண்பர் எப்பொழுது வீடு திரும்புவதாகச் சொன்னார்?" என்று கேட்டாள் பானுமதி.

"தெரியவில்லை. பெரும்பாலும் தான் புறப்படுமுன் எப்பொழுது திரும்ப முடியும் என்று அவருக்கே தெரிந்திருக்காது. சில சமயம் மறுநாளே திரும்பி விடுவதாகக் கூறிச் செல்வார். திரும்ப ஒரு மாதம் ஆனாலும் ஆகும். பொது வாழ்வில் ஈடுபடுபவர்களின் நிலை இதுதான்...." என்றேன் நான்.

பானுமதியின் கேள்வி எனக்குச் சற்று உற்சாகத்தையே அளித்தது. நண்பரின் பழக்க வழக்கங்களை விரிவாக எடுத்துக் கூற அவளே முதலடி எடுத்துத் தந்த மாதிரி யிருந்தது. மேற்கொண்டு அவள் எதையாவது கேட்டால் அதை வைத்துக்கொண்டு என் வேலையை மெல்ல ஆரம்பித்துவிடலாம் என்று அவள் முகத்தை நோக்கினேன். ஆனால் அவள்

கண்ணாடி: விளக்கெண்ணை சாப்பிட்டீர்களா? என்னமோ போல் இருக்கிறீர்களே?

மற்றவர்: ஆமா ஸார்! ஆனா பேதி ஆகமாட்டேனென்கிறதே. என்ன செய்வது?

கண்ணாடி: பூ! இவ்வளவுதானா! பக்கத்து ஹோட்டலிலிருந்து ஒரு கப் காப்பி வரவழைத்து சாப்பிட்டு விடுங்களேன்!

கேட்ட அடுத்த கேள்வியோ என்னைத் திணற வைத்துவிட்டது.

"நீங்கள் ஏன் இன்னும் திருமணம் செய்துக் கொள்ளவில்லை?" என்றாள் பானுமதி.

இப்படி வேறு யாராவது கேட்டிருந்தால் வெகு சுலபமாகவும் வேடிக்கையாகவும் நான் பதிலளித்திருப்பேன். என்ன பதிலளிப்பது என்றே எனக்குப் புரியாமல் விழித்தேன்.

அவளே மீண்டும் பேசத்தொடங்கினாள் "சிக்கலான கேள்வியாகப் படுகிறதோ? என்னைப் பொருத்தவரை இது நியாயமான கேள்வியாகத்தான் படுகிறது. உங்கள் நண்பருக்கு மணம் ஆகாதிருந்து அவருடைய குணப்பண்புகளை

நான் புரிந்திருந்தால் உங்களைக் கேட்ட மாதிரி அவரை நான் கேட்டிருக்கமாட்டேன்.... ஏனெனில் குடும்ப வாழ்வுக்கு அவர் லாயக் கற்றவர்........''

கைதிக் கூண்டில் நிற்பவன்மீது குற்றப்பத்திரிக்கை வாசிக்கப்படுவதுபோன்று அழுத்தம் திருத்தமாகக் கூறினுள் பானுமதி.

''நண்பரைப் பற்றி தப்பான கண்ணேட்டம் போட்டுவிட்டீர்கள். அவர் ஒரு சராசரி மனிதனுக்கு அப்பாற்பட்ட அதிமானுடர். ஒரு குடும்பத்துக்கு நீங்கள் கூறும் இலக்கணம் வேறு; அவர் கருத்து வழிப்பட்ட இலக்கணம் வேறு....'' என்று அவள் கூற்றை நான் மறுத்தேன்.

''திருமண வாழ்வு என்ருல் ஒரு ஆணும் பெண்ணும் கூடி நடத்தும் வாழ்க்கைதான் என்பதற்கு புதுக் கண்ணேட்டம் வேறு உண்டா என்ன? வாழ்க்கையை வாழும் விஷயத்தில் மாறுதல் இருக்கலாம், வாழ்க்கையையே மாற்றிக் கவனித்துவிட முடியாதே! உங்கள் நண்பர் என்னைப் போன்ற ஒரு பெண்ணைத்தானே 'மனைவி' என்ற உரிமையோடு கைப் பிடிக்க முடிந்தது — வேறொரு ஆணையல்லவே! அப்படி யிருக்க அந்த மனைவியிடம் பழகும் போது மட்டும் மறுமலர்ச்சித் தனமும் தலைகாட்டி விடுகிறதாக்கும்....''

அவள் எந்தப் பிரச்னையை என்னிடம் விளக்குகிருள் என்று என்னுல் தெளிவாக யூகிக்க முடியவில்லை; என் நண்பர் மணமானது முதல் மனைவியிடம் பராமுகமாகவே இருந்திருக்கிருர் என்பது உண்மைதான். வாரக்கணக்கில் மாதக் கணக்கில் கூட வீட்டு நினைவு இன்றி ஊர் சுற்றித் திரிந்திருக்கிருர். அதைக் காரணமாக வைத்துக்கொண்டு அவர் மனைவியிடம் பாசமே கொள்ளாதவர் என்ருே; வேண்டுமென்றே மனைவியை அலட்சியப் படுத்துகிருர் என்ருே என்னுல் எண்ண முடியவில்லை. ஆனுல் இன்ப வாழ்வை எதிர்பார்த்து நிற்கும் ஒரு இளம் பெண்ணின் ஏமாற்றம் அவள் இதயத்தில் எத்தகைய புரட்சியை

உண்டாக்க முடியும் என்பதை நானோ அவரோ சற்றும் உணரவில்லைதான். இது விஷயத்தில் நாங்கள் இரண்டு பேருமே தவறு செய்திருக்கிறோம் என்பதும் சரிதான், அதற்காக நண்பரின் தியாக வாழ்வுக்கு களங்கம் விளைவிக்கும் பானுமதியின் பேராசைச் செயல்களுக்கு நண்பரின் அலட்சியப் போக்கை ஈடுகட்டி சரிசெய்து விட முடியுமா? பானுமதியின் அடாவடிச் செயல்கள் எவ்வளவு கொடூரமானவை!

பானுமதி கூறிய விஷயங்களைக் கேட்டவுடன் எனக்கு அவள் மீது சற்று அனுதாபம் ஏற்பட்டாலும் அவளுடைய ஒழுங்கற்ற நடவடிக்கைகளை நினைத்துக் கொண்ட போது ஆத்திரம்தான் பெருகியது என்றாலும் அப்பொழுதைய என்னுடைய லட்சியத்தை எண்ணி மனக் கொதிப்பை அடக்கிக் கொண்டேன்.

பானுமதியோ என்னைப்பற்றிய சிந்தனை எதுவுமின்றி தன் போக்கில் பேசிக் கொண்டேயிருந்தாள்.

''இங்கே உங்களைத் தனிமையில் சந்திக்க நான் ஒப்புக்கொண்டது நமது குடும்பச் சகதியைக் கிளறிப் பார்க்கத்தான் என்று நீங்கள் எண்ணிக் கொண்டிருநதால் அதை மறந்துவிடுங்கள். நீங்களல்ல...., உங்களைப் படைத்த கடவுளே வந்தாலும் நமது குடும்பத்தின் சீர்கேட்டை நீக்க முடியாது. என் சொந்த விஷயம் சம்பந்தமாக சில முக்கிய ஆலோசனைகளைக் கேட்கத்தான் உங்களை இங்கு அழைத்தேன்''

இப்படி அவள் கூறியது என்னைத் தூக்கிவாரிப் போட்டது. ஏதோ ஒரு பயங்கரக் கதையின் சிக்கலான பகுதியை ஆர்வத்துடன் கேட்பது போல பானுமதி சொல்லப் போகும் செய்தியைக் கவனித்தேன்.

''நான் சொல்ல இருப்பது மிகவும் அந்தரங்கமானது. அப்படிப்பட்ட ரகஸியத்தை உங்களைத் தவிர வேறு யாரிடமும் என்னால் கூறிக் கொள்ள முடியாது. ஏனெனின் நீங்கள் எனக்காக எதையும் செய்வீர்கள் என்ற நம்பிக்கை என் மனதில் உறுதிப்பட்டிருக்கிறது....''

''என்னைப் பற்றி இப்படி ஒரு முடிவுக்கு உங்களால் எப்படி வர முடிந்தது. உங்கள் ரகஸியத்தை நான் காப்பாற்றுவேன் என்று எப்படி நம்புகிறீர்கள்?...'' என்று நான் குறுக்கிட்டுக் கேட்டேன்.

அவள் சிரித்துவிட்டு ''இது வெகு சுலபமானது. என்னைப் பற்றியும், என் இளமையைப் பற்றியும், எனக்கிருக்கும் திரண்ட அழகைப் பற்றியும் எப்பொழுதும் எனக்கு நம்பிக்கையுண்டு. நீங்கள் இளைஞர். அப்படியொன்றும் முற்றும் துறந்த முனிவரல்ல. சாதாரண மனிதர்களுக்கு உள்ள மனம்தான் உங்களுக்கும் உண்டு என்று நான் புரிந்துகொண்டிருக்கிறேன்.... அப்புறம் விவரிக்க வேண்டுமா? உங்களை என்னுடைய ஆளாக மாற்றுவது கஷ்டமா என்ன?'' என்றாள்.

தீப்பந்தத்தால் என் இதயத்தைத் தொட்டது போன்று ஏற்பட்ட ஒரு உணர்ச்சியால் நான் திகைத்துத் துள்ளினேன். ''அக்கிரமம்.... அநியாயம்....'' என்று என்னை மீறியெழுந்த ஆவேசத்துடன் கத்தினேன்.

பானுமதி என் ஆவேசத்தால் ஒரு சிறிதும் சலனமடைந்ததாகத் தெரியவில்லை. ஒரு பைத்தியக்காரனை வேடிக்கை பார்ப்பது போல என்னைப் பார்த்துவிட்டு ''வீண் ஆரவாரம் செய்வதால் ஒரு பயனுமில்லை. உங்கள் நெஞ்சில் கை வைத்துச் சொல்லுங்கள் என் அழகில் உங்களுக்கு சபலமே கிடையாது என்று...'' என்று கேட்டாள் பானுமதி.

''அபாண்டப்பழி'' என்று நான் சிறினேன்.

அவள் என்னை அர்த்தத்தோடு பார்த்து சிரித்து விட்டு "நன்றாக யோசித்துப் பாருங்கள். ஒரு நாள் நள்ளிரவில் உங்கள் நண்பர் ஊரில் இல்லாத சமயத்தில் நீங்கள் என் படுக்கையருகில் நெருங்கி எவ்வளவு ஆர்வத்தோடு என் அழகைக் கண்ணாரக் கண்டு ரசித்தீர்கள். உங்கள் முகம் கூட கீழே தாழ்ந்து என் முகத்தை நோக்கி வெகு வேகமாக நெருங்கியது. எக்கச் சக்கமாக ஒரு எலி குறுக்கே ஓடி உங்களைமிரட்டிவிடாவிட்டால்குறைந்த பட்சம் அன்று என்னை முத்தமிடவாவது செய்திருப்பீர்கள். இல்லையா...! அன்று நான் ஆழ்ந்து உறங்கிக் கொண்டிருந்ததாக நீங்கள் நினைத்ததுதான் தவறு. என்ன சரிதானே!" என்றாள்.

என் வீராவேச உணர்ச்சி என்னை விட்டு எப்படிப் பறந்தது என்றே எனக்குப் புரியவில்லை. ஒரு நிமிஷத்தில் நான் பெட்டிப் பாம்பாக மாறி ஒடுங்கிப் போய்டேன். பானுமதியை தலைநிமிர்ந்து பார்க்கக் கூட என் மனம் துணியவில்லை. மௌனமாக தலை குனிந்துக் கொண்டேன்.

பானுமதி உரக்கச் சத்தமிட்டு சிரித்தாள். பிறகு "இதில் வெட்கப்பட ஒன்றுமே இல்லை. அந்த நேரத்தில் உங்கள் நிலையில் எந்த ஆண் இருந்தாலும் அப்படித்தான் நடந்திருக்கும், போகட்டும். வீணாக உங்களை நீங்களே ஏமாற்றிக் கொள்வதை விட்டு விட்டு நான் சொல்லப் போவதைக் கேளுங்கள்" என்றாள்.

பலி பீடத்தை நோக்கி இழுத்துச் செல்லப்படும் ஆட்டின் மனோநிலையில் அவள் சொல்ல ஆரம்பித்த விஷயத்திற்கு செவி கொடுக்க ஆரம்பித்தேன்.

(தொடரும்)

குளிர்ச்சிக்கும் கூந்தல் வளர்ச்சிக்கும் சிறந்தது

பிரசிடெண்ட் வெஜிடபிள் ஹேர் ஆயில்

★

முகத்தின் பருக்களை அகற்றி அழகை அளிப்பது

பிரசிடெண்ட் ஸ்னோ

★

நறு மணத்துடன் கவர்ச்சியைத் தருவது

மலபார் பொக்கே டால்கம் பவுடர்

இலங்கை, பர்மா, மலேயாவுக்கு ஏஜன்ஸி தேவை

★

தயாரிப்பவர்கள்:

RATHOD TRADING CO. MADRAS. I.

கலைவழக்கு

ரா. பாலசுப்ரமணியன்

"மாலைக் காற்று மருந்து" இது பண்டைய முறையில் பலன் கண்ட வைத்தியர்களின் வார்த்தை. ஆனால் மாலைக் காற்று "செவிக்கு விருந்து" என்பதுவும் மாங்குடி மக்கள் சில வாரங்களாகக் கொண்டிருந்த அபிப்பிராயம். தென்றல் தவழ, உடலை சில்லென்று தட்டிப் போகும் அந்தப் பூங்காற்று, இனிய குழலின் நாதத்தையும் கனிவான எழுச்சியையும் கலந்து தந்து வந்தது! வாஸ்தவந்தான். தினந்தோறும் கடை வீதிக்குத் திரும்பும் முனையில் மார்க்கெட்டுக்கு எதிரே உள்ள திறந்த வெளியில் நிற்கும் படர்ந்த ஆலமரத்தின் கீழே மாலை நேரத்தில் மனதை மகிழ வைக்கும் புல்லாங்குழல் இசை அந்த வட்டார மக்களைப் புளகாங்கிதம் அடையச் செய்து வந்தது சில நாட்களாக.

வரதராஜன் ஒருபாமரன். பாடிப் பிழைக்கும் பஞ்சை. முறையாக சங்கீதம் பயிலாத ஒரு ஏழை. அவனிடத்தில் ஞானம் இயற்கையிலேயே மண்டிக்கிடந்தது. அவன் 'கான மழை' பொழியும் கண்கொள்ளாக் காட்சி, கண்களில் நீர் பெருகும், 'முகாரி'யில் சோக கீதம், அடுத்து ஆனந்த சாகரத்தில் ஆழ்த்தும். 'பைரவி' யில் ஒரு பாட்டு. மக்கள் மெய் மறந்து. நிற்பார்கள். கர்நாடக ராகங்கள், அவ்வப்போது திரையுலகில் பிரசித்தி பெற்ற சினிமாப்பாட்டுகளையும் வாசிப்பான். பகலெல்லாம் ரேடியோ, இசைத் தட்டுகள் வைக்கும் டீ கடைகள் முன்பு அவனைப் பார்க்கலாம். இசைத் தட்டுகளை கேட்பான், அப்படியே மனதில் பதித்துக் கொள்வான்! இவ்வளவு ஞான ஒளியைக் கொடுத்திருந்த கடவுள் ஏனோ அவன் கண்களின் ஒளியைக்கவர்ந்துக் கொண்டு விட்டார்! இரண்டு கண்களுமில்லை. ஆம்! அவன் ஒரு குருடன். கபோதி!

அவனுடன் ஆறுமுகம். அவன்தான் இவன் வாழ்வின் துணை. ஊன்று கோல். கஷ்டக் கூட்டாளி. அந்தரங்க காரியதரிசி எல்லாம் அவன் தான். ஆறுமுகம் சொல்லுவான் அதுதான் வரதராஜன் காணும் உலகம்! ஆறுமுகம்தான் இவனுக்கு பக்க வாத்தியம் வாசிப்பவன். தாளம் தவறுமல் கிண் கிண்ணென்று இசையோடு இவன் வாத்யமும் சேரும். சங்கீதக் கருவியில்லை தாளம் போட. அவன் அடிவயிறுதான் மிருதங்கம், கஞ்சிரா! அடித்து அடித்து கருத்துக் காப்பேறிப் போன தழும்பு, மக்கள் மனமகிழ்வுடன் தரும் சில்லறையில் வயிறு வளர்த்து வந்தனர்.

அன்று ஆடி அமாவாசை. அந்தி நேரத்துச் சூரியன் வான வீதியில்

செந்தீயை சிந்திக் கொண்டிருந்தான். சுற்றுப்புற ஊர்களிலிருந்தும் ஜனங்கள் வந்து வழக்கத்துக்கு விரோதமாகக் கும்பல் கூடியிருந்தது. வரதராஜன் தன் கச்சேரியைத் துவக்கினுன், கூட்டம் அதிகமாக இருப்பதுகண்டு காசும் நிறையச் சேரும் என்பதை வரதராஜனுக்கு உணர்த்தினுன், ஆறுமுகம். வரதராஜன் வாசிப்பில் விசேஷ கவனம் செலுத்தினுன். சாதாரண நாணல் தட்டு இவனுல் பெருமை அடைந்தது. ஆறுமுகத்தின் தாளம் லயத்தில் சேர்ந்து கணக்காக இருந்தது. தன்னைச் சிறந்தவன் என்று எல்லோரும் மெச்சும்படி செய்த 'மகுடி'யை வாசிக்க ஆரம்பித்தான். தன்னை மறந்தான். மக்கள் யாவரும் உண்மையிலேயே கோகுலத்தில் ஆயர்களை மயக்கிய கண்ணனே மறுபிறப்பு எடுத்தானே என்று வியந்தார்கள். சுற்றுப்புறம் பூராவும் இந்த கீத வெள்ளத்தில் மிதந்து கொண்டிருந்தது. 'க்ரீச்' என்ற சப்தம்! ''ஐயோ'' என்ற அலறல். கூட்டத்திலிருந்த அத்தனை பேரும் சப்தம் வந்த இடத்தில் கூடிவிட்டனர். அவர்கள் கண்ட காட்சி அப்பப்பா கோரம்!

மேலூர் மிட்டாதார் மேகநாத முதலியாரின் புதிய மேகவர்ண 'பியூக்' கார் பிரேக் போட்ட அதிர்ச்சியில் நிலத்தை அரை அடி அறுத்துவிட்டுச் சரிந்து நின்று கொண்டிருந்தது. காரை ஓட்டி வந்த அவர் பரபரப்போடு கதவைத் திறந்துக்கொண்டு வெளியில் இறங்கினுர்.

காருக்கடியில் பதிமூன்று வயதுச் சிறுவன் பரிதாபமாகக் கிடந்தான். அவனுடைய இரண்டு கால்களும் முன் சக்கரத்திற் கடியில் மாட்டியிருந்தது. கண்களும் பிதுங்கி இருந்தன. நெற்றியிலும் பலத்த அடி. ரத்தவெள்ளம்! மக்கள் பதறிப் போய் நின்றனர். பயங்கரம். ஒன்றல்ல; இரண்டு! மிட்டாதார் தங்கமானவர். ஒரு துரும்புக்கும் கெடுதல் செய்யாதவர். எந்தச் சமயத்திலும் நிலை தவருதவர். அவர் இப்படி ஒரு விபத்தைச் செய்ய நேர்ந்ததே என்பது ஒன்று. அவ்வூர் நாட்டாண்மைக்காரர் நாச்சிமுத்து — மேகநாதன் குடும்பத்துக்கும் குலத்துக்கும் பரம விரோதி. அவருடைய மகன் பழனிசாமி இவர் காரில் சிக்கிக் கொண்டானே என்பது இரண்டாவது.

மக்கள் அசைவற்று நின்று கொண்டிருந்தனர். அடிபட்ட சிறுவனை மேகநாதம் தூக்கிக் காரில் போட்டுக் கொண்டு நேரே ஆஸ்பத்திரி நோக்கிச் சென்ருர்.

நடந்த நிகழ்ச்சியில் நாட்டம் செலுத்தாத வரதராஜன் அப்போதுதான் ''கண்ணுல் காண்பதெல்லாம் பொய். ஞானக் கண்ணைத்திறந்து பார் மெய்யே'' என்ற அடிகளை உருக்கமாகப் பாடிக் கொண்டிருந்தான். ஆறுமுகம் மட்டும் தாளத்தை நிறுத்தியிருந்தான். அவனுக்கு ஏற்பட்ட கவலையெல்லாம் 'இந்தப் படுபாவியால் நம் வாயில் மண் விழுந்ததே' என்பது தான். ஆறுமுகம் வரதனின் கையைப் பிடித்து நிறுத்தினுன். விஷயத்தைச் சொன்னுன். ''ஐயோ பாவமே'' என்ருன். இரவு நாம் பட்டினி கிடக்கப் போகும் பாவத்தை யாரப்பா பாக்கப்போருங்க'' என்ருன் ஆறுமுகம். இருவரும் மெள்ள நடந்து அவர்கள் தங்கியிருந்த குளக்கரை மண்டபத்துக்குச் சென்ருர்கள்.

சிறிது நேரத்தில் 'போலீஸ் வண்டி' வந்து நின்றது. வரதராஜனையும் ஆறுமுகத்தையும் அதில் ஏற்றிக்கொண்டு போனுர்கள். பக்கத்தில் தங்கியிருந்த சில பிச்சைக்காரத் தோழர் ''இவர்

> முட்டாளை வாதித்துத் திருத்த முயல்வது தேன் கூட்டை உதைத்து தேன் சேகரிக்க முயல்வது போலாகும்.
>
> — வே. ஸ்ரீ. சர்மா.

களை எதற்குக் கூட்டிக் கொண்டு போகிறார்கள்? ஹூம். எங்கே பிக் பாக்கெட் அடித்தார்களோ.... அட பாவமே'' ''நல்லவங்களாச்சே! ஊரிலும் நல்ல பெயராச்சே!'' ''உண்மையா அந்தப் பயலுக்குக் கண்ணு தெரியலியா இல்லெ வயிறு பொளைக்க இப்படி வேஷம் போடருனே'' என்றெல்லாம் அவர்களே ஒருவருக்கொருவர் சந்தேகங்களைக் கிளப்பி சமாதானமும் சொல்லிக் கொண்டார்கள்.

* * *

அன்று நீதி மன்றத்திலே ஏகப்பட்ட கூட்டம். வெளியில் அதைவிட அதிகம். எள் விழுந்தால் எண்ணெயாக வழியும்! புதுப் புதுக் கார்கள் வரிசையாக நின்று கொண்டிருந்தன. வெளியூர்களிலிருந்து பல புகழ் பெற்ற வழக்கறிஞர்களும் வந்திருந்தனர் சட்டத்தைக் கரைத்துக் குடித்துவிட்டு! மேகநாதத்தின் வக்கீலாக டில்லியிலிருந்து நவராஜ் வந்திருந்தார். பல பிரபல வழக்குகளை சாதுரியமாகப் பேசி தன் கட்சிக்காரர்கள் பக்கம் சாதகமாகும்படி செய்திருக்கிறார். நாட்டாண்மைக்கார நாச்சிமுத்துவும் பரம்பரைப் பணக்காரர். தனது குலப் பழியைத் தீர்த்துக் கொள்ள இது தான் சமயம் என்று, மேகநாதனை எப்படியாவது சிறைக் கம்பிக்குள் காணவேண்டும் என்கிற அவாவில் காசைத் 'தண்ணீ'ராகச் செலவழித்தார்! விசாரணையும் ஆரம்பமாகியது. பலத்த வாதப் பிரதிவாதங்கள். கேள்விகள். குறுக்குக் கேள்விகள்!

நவராஜ் தனது வாதத்தை ஆரம்பித்தார். ''கனம் நீதிபதி அவர்களே! நடந்த நிகழ்ச்சியை நான் மறுக்கவில்லை. மக்கள் கண்டது நடுத்தெருவிலே பலபேர் முன்னிலையில் நிகழ்ந்த ஒரு உண்மை. அதாவது என் கட்சிக்காரரான மேகநாதத்தின் கார் பழனிச்சாமி என்ற சிறுவன் மேல் மோதிக் காயமடையச் செய்த சம்பவம் உண்மை. அது உண்மையா பொய்யா என்பதல்ல என்வாதம். மேகநாதம் வெளியூர் சென்றிருந்தார். அவரது மனைவிக்கு ஆபத்து என்ற தந்தி அனுப்பப்பட்டது. எனவே அவசரமாக காரை ஓட்டிக் கொண்டு வந்திருக்கிறார். உங்களுக்குத் தெரியும் இங்குள்ள அனைவருக்கும் தெரியும்.... அவர் ஒரு 'சங்கீதப் பித்'தென்பது. இசைத் தேவியின் அடிமை என்பது. இதை யாரும் மறுக்க முடியாதே! அவர் காரை ஓட்டிக் கொண்டு வரும் போது, இந்த ஊரையே பலவாரமாகத்தன் இசையால், புல்லாங்குழல் நாதத்தால், மக்களையே மயக்கிய வரதனின் இனிய, தன் நிலை மறக்கச் செய்யும் குழல் வாசிப்பைக் கேட்டார். தன்னை மறந்தார். நாதத்தில் ஐக்யமானர். நிலைதவறினர். ஸ்டேரிங்கை நழுவவிட்டிருக்கிறார். குறுக்கே ஓடிய பையனின் மேல் கார் மோதியது. செய்தது குற்றம். காரை மோதியது சட்ட விரோதம். ஆனல் செய்யப்பட்டதற்குக் காரணம்? அந்த அடிப்படையான அம்சத்தைத்தான் நாம் இங்கு ஆராய வேண்டியிருக்கிறது. இவருடைய இத்தனை ஆண்டுகள் வாழ்விலே இப்படி ஒரு நிகழ்ச்சி நேர்ந்ததா என்ருவது? இல்லை. தன்னை மறந்த ஒரு அசாதாரண நிலை. அந்த நிலையை ஏற்படச் செய்தான் இதோ இந்தக் குழல் ஊதி வரதராஜன். இவனே தான்........எனவே குற்றவாளி இவன்தான்!''

நவராஜ் தனது இடத்தில் உட்கார்ந்தார். மக்கள் ஆச்சரியத்தில்

காலம் மனிதனுக்கு ஆதாரமா? மனிதன் காலத்துக்கு ஆதாரமா? இது எப்படிப் போனுலும், எக்காலத்திலும் மனிதனுக்கு ஆதாரம் பணம் தான்.

— ஞானப்பிரகாசம்

ஆழ்ந்தனர். ஆச்சரியம் ஒன்றல்ல இரண்டு. ஒன்று குற்றவாளியாக் கப்பட்டவன் வரதராஜன். கபோதி. இரண்டு விபத்துக்குள் ளான பழனிச்சாமிக்கு ஒரு கண் போனது. ஒரு கால் போனது! இந்த விசித்திர வழக்கைப் பற்றி பத்திரிகைகள் பக்கம் பக்கமாக வரைந்து தள்ளின. வர்தராஜன் கிளிக் கூண்டிலே ஏற்றப்பட்டான். அவன் ஒளியற்ற கண்களில் ஜலம் வழிவதைக் கண்டார்கள். அவன் தன் கதையைச் சொன்னான். எல் லோரும் அமைதியை எடை போட் டுக் கொண்டிருந்தனர்.

''நான் பரம்பரைப் பிச்சைக் காரனல்ல. பாதியில் ஆனவன். நானே ஆனேன். பிறவிக் குருடன் அல்ல. இடையில் நேர்ந்தது. செல் வம் கொழித்த பெரிய செல்வந்தர் வீட்டிலே பிறந்தவன். இதைக் கேட்டதும் ஆச்சரியப்படுவீர்கள். ஆனால் உண்மை. இப்போது என் னைக் குற்றவாளிக் கூண்டில் நிறுத் திய இதே குழல்தான் என் கண் களை இழக்கச் செய்தது. என்னை நாடோடியாக்கியது. குருட்டு வாழ் வில் நிம்மதி தந்ததுவும் இதுதான்!

நான் பிறந்தவுடன் தாய் இறந் தாள். சில மாதங்களில் என் தந்தை வேறொருத்தியை மணந் தார். மணந்த இரண்டு வருஷங் களில் மலேயாவில் உள்ள எங்கள் தோட்டத்துப் போனார். உடனே யுத்தம் ஆரம்பித்தது. அங்கேயே தங்கிவிட்டார். என் சிற்றன்னை கொடுமைகள் செய்தாள். தனக் குக் குழந்தை இல்லாத குறையை- ஆத்திரத்தை என்மேல் பழியாகத் தீர்த்துக் கொண்டாள். வீட்டி லேயே தங்கமாட்டேன். நண்பர் களோடு ஆற்றோரங்களிலுள்ள நாணற் காட்டுக்குள் புகுந்து தட்டு வெட்டி புல்லாங்குழல் செய்வேன். வாசிப்பேன். பகல் முழுவதையும் புல்லாங்குழல் பயில்வதிலேயே கழிப்பேன். சாப்பாட்டு நேரத் துக்குக்கூட வீட்டுக்குப் போகமாட் டேன். என்னால் பையன்கள் கெடு கிறார்கள், என்னோடு சேர்ந்து சுற்றுகிறார்கள் என்ற புகார் வேறு சின்னம்மாவுக்கு நல்ல காரணமாக அமைந்தது. அதற்காக நாள் தவ றினாலும் அவள் என்னை அடிப்பது தவறாது.

ஒரு நாள் காலை சில நண்பர் களுடன் வழக்கம்போல் நாணற் காட்டிற்குப் போனோம். உள்ளே வெகு தூரம் வந்துவிட்டோம். நல்ல நல்ல குழல்கள் செதுக்கி னேன். வாசிக்க ஆரம்பித்தேன். என்னை அறியாமல் 'மகுடி' வாசித் துக் கொண்டிருந்தேன். நேரம் போனதே தெரியவில்லை. திடீ ரென்று 'ஆ' என்ற அலறல்! என் இசைத் தடைப்பட்டது. என் நண் பன் குமரன் கீழே விழுந்து கிடந் தான். பக்கத்திலே ஒரு நாகப் பாம்பு நெளிந்து ஓடிக்கொண்டிருந் தது. மற்றவர்கள் பயந்தோடி விட் டார்கள். குமரன் பேச்சு மூச்சின் றிக் கிடந்தான். என் கை கால்கள் உதற ஆரம்பித்தன. நடுக்காட்டில் நான் வீட்டை எண்ணினேன். சின் னம்மாளின் காளி சொரூபம். பக் கத்திலே பாம்பால் கடிபட்ட நண் பன். பயம்பிடித்து அழ ஆரம்பித் தேன். அப்போது அங்கிருந்து கால் சென்ற பக்கம் ஓடினேன். ரயில் தண்டவாளத்தின் வழியாக ஓடினேன். ஊரை விட்டே ஓடி விட் டேன். அன்று வீட்டை விட்டு வெளியேறியவன்தான். இன்று வரை ஆதரவில்லாமல் நாடோடி யாக ஊர்ஊராக அலைந்து வரு கிறேன். தனியாகக் குழல் ஊதிப் பிழைத்து வந்தேன். அப்போது தான் இந்த ஆறுமுகம் பழக்க மானான். நான் குழலூதுவேன். இவன் தாளம் போடுவான். ஜனங் கள் எங்கள் 'சங்கீத'த்தைக் கேட்க நிறையக் கூடுவார்கள். பணமும் நிறையக் கிடைக்கும். எங்களுக்கு வேண்டியது போக மீதியை, பிச்சைக்கு அலைந்து ஒன் றுங் கிடைக்காத வயோதிகர் களுக்கும், குருடர்களுக்கும், அங்க ஹீனர்களுக்கும் கொடுப்போம். ரேடியோ இசைத்தட்டு கேட் போம். அதை அப்படியே பயிற்சி செய்வோம். சினிமா பார்ப்போம். எங்களுக்கு யாவும் சொந்த ஊர். எல்லோரும் உறவினர்கள்.

திருச்சிக் கருகில் உள்ள க்ரூருக்குப் போனோம். அங்கே சில நாள் தங்கினோம். வாய்க்கால் கரை ஓரமாக உள்ள நாணற் காட்டுக்குச் சென்று ஒரு நாள், நானும் ஆறுமுகமும் குழல் செய்யத் தட்டுகளை வெட்டிக் கொண்டிருந்தோம். ஒரு நாணலின் முட்களைச் சீவிக் கொண்டிருந்தேன். அப்போது கூரிய சிம்பு ஒன்று என் வலக் கண்ணில் குத்தியது. பளீர் என்று பட்டதும் நிலைதடுமாறி விழுந்தேன். சரிவில் உருண்டு கொண்டே போய் வாய்க்காலுக்குள் குப்புற விழுந்தேன். கையிலிருந்த கத்தி இன்னொரு கண்ணிலும் பட்டது. ரத்தம் பெருகியது. நான் மயக்கமுற்றேன்.

மயக்கம் தெளிந்து கண்களை விழிக்க முயன்றேன். முடியவில்லை முகம் பூராவும் துணியால் கட்டப்பட்டிருந்தது. ஆறுமுகத்தின் மூலம் சர்க்கார் ஆஸ்பத்திரியில் கிடப்பதை உணர்ந்தேன். ஒரு மாதத்துக்கு மேல் அங்கிருந்து வெளியில் வந்தேன்—குருடனாக—இரண்டு கண்களும் இழந்தவனாக! அப்போதிருந்து நான் குருடனானேன். மீண்டும் பழைய ஊதிப் பிழைக்கும் தொழிலையே ஆரம்பித்தோம். இப்போது குருடன் என்ற பச்சாத்தாபமும் பரிவும் ஏற்பட்டது ஜனங்களுக்கு. பல ஊர்கள் சென்றோம். பல மக்களோடு பழகினோம் இங்கு வந்தோம். வயிறு வளர்த்துக் கொண்டிருந்தோம், இதுதான் எனக்குத் தெரிந்தது. தண்டனை கொடுப்பதாயிருந்தால் ஆறுமுகத்திற்கும் சேர்த்துக் கொடுங்கள்! இருவரும் தனித்தனி பிரிந்து வாழ முடியாது. நான் அனுபவித்த கஷ்டங்களை விட இனிமேல் அனுபவிக்க ஒன்றும் இல்லை. ஆகவே என் தலைவிதியைக் கூட நொந்துக் கொள்ளாமல் ஏற்றுக் கொள்வேன்'' என்று கூறி முடித்தான்.

அத்தனை பேரும் வழியுங் தங்கள் கண்ணீரைத் துடைத்துக் கொண்டார்கள். ''ஐயோ, மகனே வரதராஜா! நீ தானா?'' என்று சப்தம் போட்டார் மேகநாதன். அடுத்த நிமிடம் மூர்ச்சையாகி விழுந்தார். தண்ணீரைத் தெளித்து மயக்கம் தெளியவைத்தார்கள். ஆம். அவர்தான் வெளிநாடு சென்ற வரதராஜனின் தந்தை; தான் சேர்த்துவைத்திருந்த செல்வத்திலே தான் மேலூர் ஜமீனை வாங்கியிருந்தார். வந்த நாளாக மகனைத் தேடித் தேடித்தான் அலைந்தார். கடைசியில் தந்தையும் மகனும் வாதி—பிரதிவாதிகளாகக் கோர்ட்டிலே சந்திக்க நேர்ந்திருக்கிறது. வழக்கு விசித்திரமாக மாறியிருக்கிறது. நீதிபதிக்கே வியப்பு அதிகமாகியது. தீர்ப்பு கூறப்பட்டது. அதாவது கண் இழந்து முடமான

நண்பர் :— என்னப்பா ரொம்ப நேரமா இங்கே இப்படியே நின்று கொண்டே இருக்கிறேன். கவனிக்காமல் நீ பாட்டுக்கு ஏதோ யோசனை செய்து கொண்டே இருக்கிறாயே?

கார்டூனிஸ்ட் :— வாருங்கள். கார்டூன் போட விஷயம் அகப்படாமல் யோசித்துக் கொண்டிருந்தேன் உங்களை கண்டவுடன் 'மூட்' வந்து விட்டது உட்காருங்கள்..........!

பழனிச்சாமியின் குடும்பத்துக்கு நஷ்ட ஈடாக ஜமீந்தார் ரூ. 50,000 தந்துவிட வேண்டியது. இன்னும் ஐந்து வருஷத்துக்கு வரதராஜன் புல்லாங்குழலைத் தொடவும் கூடாது !

வரதராஜனுக்கு தந்தை கிடைத்துவிட்டமகிழ்ச்சி. அதோடு இந்தக் கடுமையான தீர்ப்பும். ஆனந்தக் கண்ணீரும் சோகக் கண்ணீரும் ஆறாகப் பெருகி ஓடியது.

இன்று வரதராஜன் மேலூர் சின்ன ஜமீந்தார். கண்களில்லை. காசிருக்கிறது. செல்வம் கொழிக்கிறது. புல்லாங்குழலைத் தீண்டவும் கூடாது. இது உத்தரவு. அவனால் துக்கம் தாங்கவே முடியவில்லை. நினைத்து நினைத்து உருகுவான். கூடவே இருந்து ஆறுமுகம் தேற்றிக் கொண்டிருந்தான்.

ஒரு நாள் மாலை. சின்ன ஜமீந்தார் வரதராஜன் பங்களா முன்புறத் தோட்டத்தில் உட்கார்ந்திருந்தான். வீட்டுக்குள் ரேடியோவில் 'புல்லாங்குழல் இசைத்தட்டு' என்ற அறிவிப்பைக் கேட்டான். ஆறுமுகத்தின் கையைப் பிடித்துக் கொண்டு அரை நொடியில் ரேடியோ இருந்த இடத்திற்குப் போனான். பிரபல புல்லாங்குழல் வித்வான் ஒருவர் 'மகுடி'யைப் பிரமாதமாக வாசித்தார். அதைக் கேட்டு அனுபவித்துக்கொண்டிருந்த வரதராஜனின் கண்களிலிருந்து இரண்டு சொட்டு கண்ணீர்த் துளிகள் பளிங்குத் தரையின் மீது விழுந்து முத்துப் போல் உருண்டன. வெளியில் ஒரு பிச்சைக்காரன் ''நாடகமே உலகம், நாளை நடப்பதை யார் அறிவார்'' என்ற பாடலை வெகு உருக்கமாய் பாடிக்கொண்டிருந்தான்.

தன் மதிப்பு

ச. மு. பிள்ளை
(தென்னுப்பிரிக்கா)

மனிதர்கள் ஒவ்வொருவரிடத்தும் ஒவ்வொரு மேம்பாடுகளைக் காணலாம். ஒரு வகையிலேனும் மேம்பாடில்லாத ஒருவன் மனித வகுப்பிலேயே உண்மையாகக் கிடையாது. பலர் தம்மைத்தாமே ஒன்றுக்கும் உபயோக மற்றவர்கள் என இழிவு கற்பித்துக் கொண்டு, தங்களிடத்தே இயற்கையாகவே அமைந்துள்ள வலிமையை அறியாது, தங்கள் அருமையான வாழ் நாளை ஒருவித குறிக்கோளுமின்றிப் பாழ்படுத்திக் கொள்ளுகின்றனர். மற்றும் பலர், பிறப்பிலேயே உயர்வு தாழ்வு உண்டெனக் கற்பித்தும், பிறரை மேன்மை யடையாது தடுத்துத் தாம் அவர்களை அடிமை கொள்ள நினைக்கின்றனர், சில சுயநல வாதிகளின் சூழ்ச்சியிற் சிக்குண்டு, அவர்கள் கற்பனையில் மயங்கித் தாம்இழிகுலத்தார்தான் என ஏற்றுக் கொண்டு, ஏமாந்து அடிமை வாழ்வில் அறியாது வாழ்ந்து வருகின்றனர்.

அவர்கள் தங்களுக்குத் தாங்களே இயற்றிக் கொள்ளும் குற்றம் தற்கொலையினும் ஆயிர மடங்கு அதிகமானது. இவர்கள் தங்களுக்கே துரோகம் செய்து கொள்வது மல்லாமல், இயற்கையாக இவர்களின் உயர்ந்த சேவையை எதிர்பார்க்கும் அவர்கள் குலத்தை, சமூகத்தை, தேசத்தை உலகத்தை — சுருக்கமாக இயற்கையன்னையை ஏமாற்றுகிருர்கள். இவர்கள் உண்மையில் இழிவானவர்கள் அல்லவேயல்ல. கற்பனையின் மாயையில் மயங்கிக் கிடக்கின்றனர். தங்களைத் தாங்களே ஆழ்ந்து ஆராய்ந்து பார்த்தறியாத குறைதான் இவ்வளவு கெடுதல்களையும் விளைவிக்கிறது. உண்மையாக ஊன்றிப் பார்ப்பார்களே யானல், அவர்கள் தத்தம்மிடத்துள்ள பற்பல மேம்பாடுகளைக் கண்டறிவார்கள். இவ்வாறு ஒருவன் தன்னிடத்துள்ள மேம்பாடுகளை ஆழ்ந்த ஆராய்ச்சியின் பயனுகக் கண்டறிவதைத்தான் "தன்னையறிதல்" என்பது.

எப்போது ஒருவன் தன்னிடத்து இயற்கையாய் அமைந்துள்ள உயர்குணங்களை அறிகிருனே அப்போதே அவன், தான் மற்றையோரினின்றும் எவ்விதத்தாலும் தாழ்ந்தவனன்று, தானும் ஒரு உயர் பதவியையடைய அருகதையுடையவன்தான் என்று தீர்மானிப்பான். இந்தத் தீர்மானம் தன்னிடத்திலேயே தனக்கு ஒரு உயர்ந்த மதிப்பை உண்டாக்கும், அதாவது அவன் தன் மதிப்பு அடைகிருன்.

தன் மதிப்பு ஒவ்வொரு மனிதரிடத்தும், ஒவ்வொரு நாட்டினிடத்தும் அவசியம் இருக்க வேண்டிய ஓர் சிறந்த நற்குணமாகும். இது மற்றெல்லா நற்குணங்களையும், தானுள்ள விடத்திற் சேர்க்கும் வலிமையுடையது. தான் இருக்குமிடத்தில் இழிவான எண்ணங்கள் தலையெடுக்க விடாது. இழிவான காரியங்களைச் செய்ய இடங்கொடுக்காமல் இழுத்துப் பிடிக்கும். சுருக்கமாகத் தன் மதிப்புள்ளோரிடம் உயர்குணங்களே பொலியும், இழிகுணங்கள் இல்லா தொழியும்.

"பிறர் மெச்ச வாழவேண்டும்" என்ற எண்ணமுடைய போலிப் பெரியோர்கள் பகிரங்கத்தால் மாத்திரம் இழிவான காரியங்கள் செய்ய அஞ்சுவார்கள். ஆனல், பிறர் மெச்சாமல் தான் மெச்ச வாழ வேண்டும், அல்லது தன் மதிப்படைய வேண்டும் என்ற எண்ணமுடைய உண்மை முழு மனிதன், அந்தரங்கத்தில் கூட இழி செய்கையைக் கைக் கொள்ளான்; இழிவான எண்ணங்களைக் கூட எண்ணுவதற்கு அவனுக்கு ஒய்வு இராது. முன்னையோர் வேண்டுவதெல்லாம் பிற மனிதர் தங்களை மதிக்க வேண்டுமென்பதே. ஆதலால் பிற மனிதர்

அறியஇடமில்லா அந்தரங்கத்தில் இழி செயலுக்கு இணங்கினு மிணங்குவர். அவர்கள் வேறு; அவர்களை மதிப்பிடுவோர் வேறு. ஆனால், தன் மதிப்பாளர்களைப் பொறுத்தமட்டில் மதிப்பிடுவோ ரும், மதிப்பிடப்படுவோரும் ஒரு வரே. ஓர் இழி செயலைச் செய்து விட்டு உலகமறியாது மறைக்க இயலும். ஆனால் தன்மானம் உள் ளோர் தன் மனமறிய இழிவான எண்ணத்தை எப்போதும் கொள் ளார்.

இழிவான எண்ணம் கொள்ளு தற்கு இடமில்லாதபோது, இழி செயல்களைப் பற்றிப் பேசவே வேண்டுவதில்லை. இழிவான எண் ணம் கொள்ளுவோனே இழிந்த வன் ஆதலின், தம் மனக் கண்முன் தாமும் இழிந்தவனாகத் தோன்று வான், அங்ஙனம் தோன்றுதல் தன் மதிப்பை இழந்த நிலைமையா கும். தன் மதிப்பின் பெருமை அறிந்து அந்தப் பேரின்பத்தைப் பெற்றுவிட்ட ஒருவன், தன்னுயி ரையேனும் விட ஒப்புவானே யல் லாது, தன் மதிப்பை இழக்க ஒரு போதும் ஒப்பமாட்டான். ஆகவே, இது தன் மதிப்பின் தனி மதிப்பா கும்.

அடிமைத் தன்மை பணிய வைத்துவிடும். இழி தன்மை நாணித் தலைகுனிய வைத்துவிடும். இவ்விரண்டும் தன்மதிப்புடை யோனை அணுகுவதில்லை. அவன் தனக்கு இயற்கை அன்னை அளித்த செல்வங்களாகிய நிமிர்ந்தநெஞ்சு, நேரான பார்வை, திறந்த உள்ளம், கணீரென்ற சொல் ஆகியவை களைப் போற்றிக் காப்பாற்றிப் பயன்படுத்திக் கொள்ளுகிறான். எவர்க்கும் தான் தாழ்ந்தவனன்று என்ற கொள்கை, அச்சத்தையும், அடிமைத்தனத்தையும் போக்கி விடுகிறது. எவர் முன்னும் துணிந்து நிமிர்ந்து நிற்கும் ஆற் றலையும் அளிக்கிறது. இழி செய லில்லா வாழ்க்கையுடைய ஒருவன் நாணிக் கூசி நடக்கும் மக்களையும், பொருளைக் கருதி பொய் பேசும் மக்களையும், மறைத்துப் பேசும் வஞ்சகர்களையும் கண்டால் வெட் கப்படுவான்; வருந்துவான். சில சமயம் அவர்களை வெறுத்தும் விடு வான். இக்குணங்களால் அவனு டைய சொல், எழுத்து, செயல், நடை, தோற்றம் ஆகிய அனைத் தும் ஆண்மையும் பெற்று அழகும் பெறுகிறது.

தன்மதிப்புடையவனின் நோக் கம் எப்போதும் உயர்ந்ததாகவே இருக்கும். இவனது நோக்கத்தைக் கண்ட பிறர் ஆகாயக் கோட்டை கட்டுபவன் என எண்ணி நகை யாடினும் ஆடுவர்! உலக வரலாற் றில் பெருமை அடைந்துள்ள ஒவ் வொரு பெரியாரின் வாழ்க்கையை யும் கவனித்தால், அவர்கள் எல் லோருமே ஆகாயக் கோட்டை கட் டினவர்களென அறியலாம். அவர் கள் இளமையிற் கட்டிய ஆகாயக் கோட்டைகள்தான் நாளடைவில் உண்மை உருவம் பெற்று விளங் கின.

தன்மதிப்புடையவன் தன் கொள்கையில், நோக்கத்தில் வெற்றிபெற எப்போதும் முயற்சி செய்துகொண்டே இருப்பான். அதிலும் அவன் தன்னம்பிக்கையு முடையவனாய் இருந்துவிட்டால் எவ்வித இடுக்கண் எதிர்ப்படினும், அவைகளை வென்று சோர்வடை யாது உழைத்து, விரைவில் குறிக் கோளில் வெற்றி பெற்றே தீரு வான்.

தனது மேம்பாடு அறிந்து தன் மதிப்புக் கொண்டவன், இழி செயல் புரியான்; பெருமனம் படைப்பான்; பெருநடை நடப் பான்; உன்னத நிலையை உண் டாக்க உரிமையோடு உழைப் பான்; அவன்தான் எண்ணியதை அடைய முடியும் என்ற தன்னம் பிக்கையும், பெரு முயற்சியும் உடையவன் என்பதை இதுவரை யும் கண்டோம்.

இழிகுணங்களுக்கு எமனும், நற் குணங்களுக்கு நண்பனும், வெற் றிக்கு வித்துமான தன் மதிப்பு இப்பரந்த உலகில் வாழட்டும்.

மனத் தெளிவு...

குணவதி ஒரு சிற்பியின் மகள் தான்! அரச குடும்பத்தைச் சேர்ந்தவள் அல்ல. ஆனல் அவளது அழகிய ரூபத்தைக் கண்டு உலகமே பிரமித்துவிட்டது. புன்னகை முகமும், குழந்தை குணமும், கல்நெஞ்சர்களையும் வசீகரிக்கச் செய்தன. பருவத்தின் அழகெல்லாம் அவளிடம் லயித்திருந்தது. அவளது தந்தைதான் சிற்பி கந்தப்பன்.

சிற்பி கந்தப்பனல் செய்யப்பட்ட சிலைகளையும், சிற்பங்களையும் காண வெளிநாடுகளில் இருந்தெல்லாம் மக்கள் காஞ்சிக்கு வருவார்கள். காஞ்சி அவன் காலத்தில் ஒரு கலைக்கோயிலாக விளங்கியது. பல்லவ மன்னன் நரசிம்மவர்மனல் ஆதரிக்கப்பட்ட தலைசிறந்த சிற்பியாக கந்தப்பன் விளங்கினன். பல்லவ மன்னனின் வெற்றியின் அறிகுறியாக மாமல்லபுரத்தில் பல சிற்பங்களைச் செதுக்கினன் கந்தப்பன். அவனை 'சில்பி வாத்தியார் கந்தன்' என்று பலர் அழைத்தனர்.

அநேக கல்தச்சர்களின் உளிகளின் சப்தம் கேட்கும்போதே குறிப்பிட்ட உளியின் ஓசையைக் கேட்டு ''அடேய் காரியத்தை நாசமாக்கிவிட்டாயே! சிற்பம் வீணகிப் போய்விட்டதே'' என்று கூறிக்கொண்டு சிற்பி கந்தன் அந்த இடத்தை அடைவான். சொல்லிவைத்தாற்போல் அந்தக் கல்தச்சனும் தவறு செய்து முழித்துக் கொண்டிருப்பான். அவ்வளவு திறமையுள்ள கந்தனின் ஒரே செல்வமாகிய குணவதியும் சிற்பக் கலையில் நல்ல தேர்ச்சி அடைந்திருந்தாள். அடிக்கடி சிற்பி கந்தன் தன் மகளோடு ஆலோசித்தே எல்லாக் காரியங்களையும் செய்து வந்தான்.

ஒருநாள் மாலை நேரம். இருட்டிவிட்டது. சிற்பி கந்தன் தன் வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்து இருந்தான். எதிரிலே ஒரு குத்து விளக்கு மங்கலாக எரிந்துகொண்டிருந்தது. கந்தன் அமைதியாகப் பழைய ஓலைச் சுவடிகளைப் படித்துக்கொண்டிருந்தான். அவன் கை, சிற்பக் கலையைப் பற்றிய ஏடுகளைத் தவிர் மற்ற ஏடுகளைத் தொட்டதே இல்லை. குணவதி சிறியவளாய் இருக்கும் பொழுது அவள் தாய் மரணமடைந்தாள். அவனும் வேறு கல்யாணம் செய்து கொள்ளாமல் சிற்பக் கலையிலேயே சிந்தனையை நாட்டினன். குணவதி வீட்டிற்குள் சமையல் செய்து கொண்டிருந்தாள்.

''ஐயா! பசியின் வேகம் தாங்க முடியவில்லை. தஞ்சையில் இருந்து வந்திருக்கிறேன். சிறிது ஆகாரம் கொடுக்க முடியுமா?'' என்று மெலிந்த குரலில் யாரோ உணவு கேட்டதைக் கண்ட சிற்பி கந்தன் தலை நிமிர்ந்தான்.

வந்தவன் பிச்சைக்காரன் அல்ல என்று அவன் மனதில் தோன்றியது. அவனது மாசற்ற முகத்தைக் கண்ட கந்தனுக்கு மனதில் இரக்கம் சுரக்கத் தொடங்கியது. ''யார் நீங்கள் — எந்த ஊர்'' என்று கேட்டான்.

''தஞ்சை மாநகரம்—நடந்து வந்ததனல் மிக்க களைப்பாய் இருக்கிறது. முதலில் சிறிது ஆகாரம் இருந்தால் தயவுசெய்து கொடுங்கள்'' என்ருன் வந்தவன்.

''தாராளமாய் உனக்கு சாப்பாடு போடுகிறேன். நீ இன்றைய

எம். கே. சீனிவாசன்

தினம் என் விருந்தாளியாக் இருக்கவேண்டும். சிறிது நேரத் தில் உன் உணவுக்கு ஏற்பாடு செய்கிறேன்'' என்று கூறிய படியே கந்தன் 'குணவதி' என்று அழைத்தான்.

''இதோ வந்துவிட்டேன்'' என்று கூறிக்கொண்டே குணவதி விரைவாக தன் தந்தையை நோக்கி வந்தாள்.

தன் தந்தையின் அருகில் ஒரு இளங்காளை அமர்ந்திருப்பதைக் கண்டு குணவதி திடுக்கிட்டாள்.

''அம்மா குணவதி! இவர் தஞ்சையிலிருந்து வந்திருக்கிறார். இவருக்கு நமது இல்லத்தில் இன்றைய பொழுது விருந்து'' என்றான் கந்தன்.

''பாவம் யாத்ரீகரோ'' என்றாள் குணவதி.

''இல்லை இல்லை. நான் யாத்ரீகன் அல்ல! நான் ஒரு கல்தச்சன்—ஒரு சிற்பி'' என்றான் விருந்தாளி.

''சிற்பியா'' என்று ஏக காலத்தில் கேட்டபடியே தந்தையும் மகளும் அவனை உற்றுப் பார்த்தனர்.

''ஆம், நான் ஒரு சிற்பிதான். தஞ்சை பிரகதீஸ்வரர் ஆலயத்தைச் சிறப்புடன் கட்டிய, சிற்பி வேலப்பனுடைய பரம்பரையைச் சேர்ந்தவன். என் திறமையை வெளி ஊர்களில் காட்ட இந்த காஞ்சிக்கு வந்துள்ளேன். புகழ் பெற்ற சிற்பி கந்தப்பனைக் கண்டு என் கூட்டுறவை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். இருட்டி விட்டதால் அந்தச் சிற்பியைக் கண்டு பேச முடியவில்லை'' என்றான் வந்தவன்.

அவன் பேசும்பொழுதே அவனது வதனத்தை உற்று நோக்கிக் கொண்டிருந்தாள்குணவதி. அவன் இளமையும், அழகும், பேசும் திறமையும் அவள் மனதைக் கொள்ளைக் கொண்டு விட்டன. ஏதோ ஒரு உணர்ச்சி —ஒரு சக்தி அவளது உடலில் பிரவேசித்தது போலிருந்தது. வந்தவன் அவளை ஒரு தரம் ஏற இறங்க பார்த்தான் சட்டென்று தலைகுனிந்த வண்ணம் குணவதியின் இணையற்ற அழகைக்கண்டு தன் நிலை மறந்து பதுமைபோல் அமர்ந்துவிட்டான். குணவதியும் மின்னலைப் போல் மறைந்தாள்.

சிற்பி கந்தப்பனின் முகத்தில் சிறிது புன்னகை தோன்றியது. அவனை நோக்கி ''ஏனப்பா! இதற்கு முன்பு சிற்பி கந்தப்பனைச் சந்தித்ததில்லையா?'' என்று கேட்டான்.

''புகழைக் கேட்டு இருக்கிறேன் ஆனால் அவரைக் கண்ணால் கண்டதில்லை.''

''ஓகோ நல்லது. நான்தான் நீ நாடிவரும் கந்தப்பன்.''

சிற்பி கந்தப்பன் என்றதுமே, அவன் அலறி எழுந்து கைகூப்பி நின்றான். ''வணக்கம். தாங்கள் என்று தெரியாமல் போய்விட்டது'' என்றான்.

''பரவாயில்லை! தம்பி. நீ உட்காரு. நான் காணும் கனவுகளை நனவாக்கவும், பல்லவ நாடு சிற்பக் கலையில் தலை சிறந்தது என்று உலகம் கூறவும், எனக்கு ஒத்தாசை செய்ய அநேக கல்தச்சர்கள் தேவை. இனி நீ என்னிடமே இருக்கலாம். உனக்கு வேண்டிய வசதிகள் அத்தனையும் மன்னரிடமிருந்து வாங்கித் தருகிறேன்'' என்று கந்தப்பன் கூறினபொழுது புதிதாக வந்த சிற்பி பரவசமடைந்தான்.

''தம்பி உன் பெயர் என்ன?''

''என் பெயர் மணிவண்ணன்.''

''ரொம்ப சந்தோஷம்'' என்றான் கந்தப்பன்.

இது வரையிலும் குணவதி மறைவாக நின்று அவர்களின் சம்பாஷணையைக் கேட்டுக் கொண்டேயிருந்தாள்; 'மணிவண்ணன்' என்னும் பெயரைக் கேட்டதும் அவனை அறியாமலே அவள்

வாய் 'மணிவண்ணன்' என்று மெதுவாக உச்சரித்தது.

சிற்பி மணிவண்ணனைக் கண்டது முதல் குணவதிக்கு இருப்பே கொள்ளவில்லை. அவளையும் அறியாமல் அவனை அடிக்கடி காண வேண்டும் என்ற ஆசை அவளுக்கு ஏற்பட்டது. அதன் காரணத்தை மட்டும் அவள் அறியாள்! அன்றிரவு சிற்பி கந்தப்பன் வீட்டில் ஒரு சிறிய தொரு விருந்து மணிவண்ணனுக்கு நடந்தது. மணிவண்ணனை கந்தப்பன் மிக்க மரியாதையுடன் நடத்தினான். ஆனால் குணவதியோ, தன் தகப்பன் எதிரில் ஒன்றும் தெரியாதவள் போல் நடித்தாள்.

சிற்பி மணிவண்ணன் மனதில் அந்த வீட்டிலேயே தன் வாழ் நாட்கள் முழுவதும் தங்கும் பாக்கியம் கிடைக்குமா என்ற எண்ணம் தோன்றியது. குணவதியின் மனதிலோ எண்ணற்ற அலைகள் மோதின.

2

சிற்பி மணிவண்ணன் தனித்ததோர் வீட்டில் வசித்து வந்தான். வீட்டைச் சுற்றிலும் அழகிய நந்தவனம். மூலைகளில் எல்லாம் விதவிதமான சிற்பங்கள் நிறுத்தப்பட்டன. கண்ணையும் கருத்தையும் அவன் செய்யும் சிற்பத்திலேயே அமைத்துவிடுவான். அவனுக்கு வேண்டிய எல்லாவசதிகளையும் பல்லவ மன்னன் நரசிம்மவர்மன் அளித்து வந்தான். அவன் காஞ்சிக்கு வந்த சில மாதங்களுக்குள் அவனை மக்கள் தெரிந்து கொண்டார்கள். கந்தப்பனுக்கு அடுத்த ஸ்தானத்தை மணிவண்ணன் வகுத்துவந்தான்.

காலையில் கந்தப்பனும் மணிவண்ணனும் ஒன்றாகச் சேர்ந்தே வேலைக்குச் செல்வார்கள். நூற்றுக்கணக்கான சிற்பிகளை வைத்துக் கொண்டு வேலை வாங்குவார்கள். அவர்களுக்குத் தெரியாத முறைகளையும் வழிகளையும் கற்றுக் கொடுப்பார்கள். சிற்பிகள்

எல்லோரும் இளங்காளையாகிய மணிவண்ணனிடம் அதிகமான மரியாதை காட்டத் தொடங்கினார்கள்.

அன்றையதினம் மன்னன் நரசிம்மவர்மன் அவர்களை அழைத்து வரும்படி கட்டளையிட்டு இருந்தான். சிற்பிகள் இருவரும் அரச சமூகத்தை நாடினார்கள். மன்னன் இவர்களைக் கண்டு ஆனந்தங் கொண்டான். ''சிற்பிகளே! அண்மையில் வரும் எனது பிறந்த நாள் கொண்டாட்டத்திற்கு இரண்டு அற்புதச் சிலைகளை நீங்கள் செய்து தரவேண்டும். எனது குடிகளும் வெளிநாட்டு மக்களும் அவைகளைக்கண்டு போற்றவேண்டும்'' என்று கட்டளையிட்டான்.

இரு சிற்பிகளும் தலை குனிந்து வணங்கினர். மன்னனின் கட்டளையை ஒப்புக்கொண்டு திரும்பினர். சிற்பிகளின் மனத்தில் சிந்தனை அலைகள் எழுந்தன! இருவரும் தத்தம் கைத்திறனைத் திறம்பட காட்டிவிடத் தீர்மானித்தனர். மணிவண்ணனுக்கு அரசன் கட்டளையால் மட்டற்ற மகிழ்ச்சி. இத்தகைய தருணத்தையே அவன் சிலகாலமாக எதிர்பார்த்து வந்

தான். ஆனால் சிற்பி கந்தப்ப னுக்கோ மனதில் ஏதோ குழப்பம் காணப்பட்டது. உலக மக்கள் அவன் சிற்பங்களைக் கண்டு வியந்தனர். ஆயினும் மணிவண்ணனின் சிற்பம் சிறந்ததாக அமைந்து விட்டால்....? என்று நினைக்கும்போதே அவன் உள்ளம் பொருமைத் தீயால் படபடவென்று அடித்துக் கொண்டது. அந்த நிமிடம் முதல் சிற்பி கந்தப்பன் சிறந்த கல் ஒன்றைத் தேர்ந்து எடுத்து வேலை செய்து வந்தான். குணவதியின் ஆலோசனையை அவன் கேட்டான். அவளும் நெடுநேரம் யோசனை செய்து, கடைசியாக நடராஜர் உருவத்தைச் செதுக்க யோசனை கூறினுள். மன்னனின் குல தெய்வம் நடராஜப் பெருமான்! நடராஜரின் உருவத்தைக் காணக் காண மன்னன் நரசிம்ம வர்மனுக்கு பக்தி பரவசமாகும். ஆகவே சிற்பி கந்தப்பனும் அந்த யோசனையை ஏற்றுக் கொண்டான். வெற்றி தன்னுடையதென்று நிச்சயித்தான்!

மணிவண்ணன் என்ன சிற்பம் தயாரிக்கின்றுன் என்று கூட கந்தப்பன் விசாரிக்கவில்லை. மணிவண்ணனும் தினசரி கல் தச்சர்களுக்கு வேண்டிய உதவிகளையும் போதனைகளையும் வழக்கம் போல் செய்து வந்தான். என்றும் போல் அவன் முகத்தில் அமைதி காணப்பட்டது. அரசன் கட்டளையை ஒருவேளை மறந்துவிட்டானே என்றுகூட கந்தப்பன் சில சமயங்களில் சந்தேகப்பட்டான். கள்ளமற்றுப் பழகிய கந்தப்பனின் மனதில் ஒரு பெரும் காரிருள் குடிபுகுந்தது.

சிற்பி மணிவண்ணன் கந்தப்பனிடம் அடிக்கடி வந்து கோவில் காரியங்களைப் பற்றிப் பேசுவான். அப்பொழுதெல்லாம் குணவதி அங்கே காட்சி அளிப்பாள். முக்கியமான ஆலோசனைகளில் அவளும் பங்கு கொள்வாள். சில சமயங்களில் இந்த இரு சிற்பிகளையும் திணர வைக்கும் முடிவைத் தெரிவிப்பாள். இவைகளைக் கேட்கக் கேட்கப் பெரிதும் மகிழ்ச்சி அடைவான் மணிவண்ணன்.

அன்றையதினம் சித்ரா பௌர்ணமி. முழுமதி வான வீதியிலே

மிதந்து வந்தான். சிற்பி கந்தப்பன் அவசர காரியமாக வெளியூர் போயிருந்தான். வீட்டில் குணவதி மட்டிலும் தனிமையாய் இருந்தாள். முற்றத்திலே ஒரு கயிற்றுக் கட்டிலில் குணவதி படுத்துக் கொண்டிருந்தாள். "மணிவண்ணன் இன்று வந்தால்" என்று அவள் மனம் நினைக்கும் போதே இன்பமடைந்தது. தனிமையின் கொடுமை அவளைத் தாக்கியது.

"ஐயா! சிற்பி ஐயா!" என்று யாரோ கதவு தட்டிக் கூப்பிடுவது போலிருந்தது. ஆம்; அது மணிவண்ணன் குரல்தான். துள்ளி எழுந்தாள் குணவதி. ஆவலாக கதவைத் திறந்தாள். விளக்கு வெளிச்சத்தில் இருவர் கண்களும் காதல் மொழிகள் பேசின.

சிறிது மௌனம். பிறகு "ஐயா இருக்கிறாரா" என்று மணிவண்ணன் கேட்டான்.

"ஏன் அவசரமாக அவரைப் பார்க்க வேண்டுமா?"

"ஆம், மன்னனின் பிறந்தநாள் வருகிறது. சதயத் திருவிழா நடைபெறும்பொழுது மன்னர் கட்டளைப்படி சிறந்த சிற்பங்களை நாங்கள் அளிக்க வேண்டும்".

"அப்படியானால் உங்கள் சிற்பம் முடிந்து விட்டதா?"

"ஐயா அவர்கள் பார்வையிட்டால் முடிந்தது போல்தான்".

"என்ன சிலையோ?"

"இராஜ ராஜன் நரசிம்மவர்மன் சிலைதான். கொடை அளிக்கும்போது இருக்கும் முகபாவத்தோடு கூடியது"

"மன்னரின் சிலையா?" என்று கேட்டவாறே ஆச்சர்யத்தில் ஆழ்ந்துவிட்டாள் குணவதி.

"ஏன் ஆச்சர்யப்படுகிறாய்"

"மன்னரைப்போல் சிலை செய்ய அபார கற்பனைத் திறன் வேண்டுமே!"

"எல்லாம் உங்கள் கூட்டுறவினால்தான்"

ஏனோ அவள் 'கொல்' என்று சிரித்துவிட்டாள்.

"உன் அப்பா எங்கே" என்று மணிவண்ணன் மறுபடியும் கேட்டான்.

அப்பா வெளியூர் போயிருக்கிறார். நாளைய தினம் கட்டாயம் வந்து விடுவார்"

''வெள்ளியூருக்கா! அப்படியானல் நான் இங்கே தனித்திருப்பது தகாது. நானே வருகிறேன்'' என்று கூறி மணிவண்ணன் சட்டென்று சென்றுவிட்டான். அவனை அழைத்து நிறுத்தலாம் என்று அவள் நினைத்தாள். வெட்கம் அவளைத் தடுத்தது. மணிவண்ணனுடைய சிறந்த குணத்தைக் கண்டு பிரமிப்பு அடைந்தாள். அவனுக்கு அவளிடம் எல்லையற்ற காதல் உண்டு. ஆயினும் முறை தவறி நடக்க அவனுக்கு விருப்பம் இல்லை.

உயிரற்ற உடல் போல் குணவதி கட்டிலில் சாய்ந்தாள். சாந்தியற்ற புழுபோல் துடித்தாள், இரவெல்லாம் எதிர்கால இன்பக் கனவுகள் கண்டாள். அதனுல் தூக்கமும் சரியாக வரவில்லை. கையில் கிடைத்த கனியைத் தின்ன முடியவில்லை என்ருல்........?

3

காஞ்சிமாநகர் கோலாகலமாக விளங்கியது. மன்னன் நரசிம்மவர்மனின் பிறந்த நாள் விழா, சதயத் திருவிழா! மக்களின் கூட்டமும் நகர அலங்கரிப்பும் சொல்லத்தரமல்ல. எங்கும் சிரிப்பும் களிப்பும் சேர்ந்து விளையாடின.

அரசனுடைய அவையிலேவல்லுநர்கள் வகுத்த இலக்கண முறைப்படி அரங்கும் அலங்காரங்களும் செய்யப்பட்டிருந்தன. மன்னன் முன்பு வேத்தியல் நாடகம் நடைபெறப் போகும் காட்சிக்காகப் பிரபுக்கள் காத்துக் கிடந்தனர். மன்னரின் ஆசனத்தின் சிறிது தூரத்தில் இரு பக்கமும் இரண்டு சிலைகள் நிறுத்தப்பட்டன. ஒன்று கலையழகு சொட்டும் தத்துவங்கள் நிறைந்த நடராஜர் சிலை. மற்ருென்று இராஜ ராஜனின் சிலை. கொடையளிப்பது போன்ற நிலை ஆகா! முகத்தில் வீரத்தோடு கூடிய இரக்கம் பிரதிபலித்தது. உள்ளத்திலே இரக்கம், இதழிலே சிறிது புன்முறுவல்.

நாட்டிய மாதரும், இசைவாணர்களும் மன்னன் வரவிற்கு முன்னதாகவே வந்து காத்திருந்தனர். சிற்பி கந்தப்பனும் மணிவண்ணனும் ஒரு பக்கம் நின்றனர். அனைவரும் மன்னரின் சிலையைக் கண்டு பிரமித்துவிட்டனர். மன்னர் வருமுன் 'பராக்கு' கூறப்பட்டது. பல்லவ மன்னன் அரச சபைக்கு வந்து அமர்ந்தான். சிலைகளைக் கண்டான். கலையின் பரிபூரண அழகைக் கண்டு திலைத்து நின்றுவிட்டான். சில விநாடிகளுக்குப் பிறகே ஆசனத்தில் அமர்ந்தான்.

ஆடல்பாடல்கள் முதலியன முறையாக நடந்தேறின. பரிசளிப்புக் கட்டம் வந்தது. தங்கத் தோடாவும், கல் இழைத்த உளியும் சுத்தியும் முதன் முதல் சிற்பி கந்தப்பனுக்கு மன்னன் அளித்தான். நடராஜர் கலைப் சிறப்பை புகழ்ந்தான். அதே போல் சிற்பி மணிவண்ணனுக்கும் பல்லவன் பரிசளித்தான். ஆனுல் மன்னவனின் ஒரே சொல் கந்தப்பனின் இதயத்தில் ஈட்டி கொண்டு குத்துவது போல் இருந்தது. தன்னைப் போல் சிலையைச் செய்த சிற்பி மணிவண்ணனை மன்னவன் புகழ்ந்தான். அத்துடன் ''சிற்பி மணிவண்ணு! இன்று பல்லவ சாம்ராஜ்யத்தில் தலைசிறந்த சிற்பி நீதான்'' என்று மனமகிழ்ந்து கூறிவிட்டான்.

பரிசுபெற்ற மணிவண்ணன் மன்னனை வணங்கினுன். அடுத்தபடி கந்தப்பனை வணங்கினுன். பிறகு அரச சபையினரை வணங்கினுன். இந்த நிகழ்ச்சி கந்தப்பனைக் கேலி செய்வது போல் அவனுக்குப்பட்டது. சபை கலைந்தது. கந்தப்பன் மனதில் பொருமை குடிகொண்டது. மணிவண்ணன்தான் தலை சிறந்த சிற்பி என்று மன்னனே கூறிவிட்டான். இதை விட இழிவு அவனுக்கு என்ன வேண்டும்?

நிகழ்ச்சியை அறிந்து துள்ளிக் குதித்தாள் குணவதி. காதலனும் ஒரு தலை சிறந்த சிற்பி! காரிகை

யின் நடையிலே அன்று தனி அழகு! ஆனல் பேயறைந்த வனைப்போல் தன் அறையிலே உட்கார்ந்திருந்தான் கந்தப்பன். தன் தந்தையின் மாறுதல்களைக் குணவதியால் உணர்ந்து கொள்ளவே முடியவில்லை. அவளுக்கு இருந்த ஆனந்தத்தில் இதைப் பற்றிக் கவனிக்கவே இல்லை.

வழக்கம் போல் மணிவண்ணன் களங்கமில்லாமல் அன்றும் வந்தான். குணவதி தன் தந்தையிருப்பதைக்கூட மறந்து வானளாவி அவனைப் புகழ்ந்தாள். நன்றியறிதலாக மணிவண்ணனும் மனம் விட்டுப் பேசினன். கந்தப்பனின் மனம் நெருப்பிலிட்டு வாட்டுவது போல் இருந்தது. விடை பெற்று மணிவண்ணனும் சென்றுவிட்டான்.

இரவு உணவுக்காக குணவதி தன் தந்தையை அழைத்தாள். அவன் உணவு வேண்டாமென்று கூறிவிட்டான். ஆவேசம் வந்தவன் போல் "குணவதி! உனக்குக் கல்யாணம் செய்துவைக்க நிச்சயத்திருக்கிறேன். இனி நாம் காஞ்சியைவிட்டு வடக்கே செல்லவேண்டும். மணமகன் உன் அத்தை மகன் காத்தவராயன்" என்று கந்தப்பன் கூறினன்.

"அப்பா! காத்தவராயனு! அவனுக்குச் சிறப்கலை யொன்றும் தெரியாதே!

"பரவாயில்லை. நிறைய சொத்திருக்கிறது."

"நான் அவனை மணக்க முடியாது. கலையறியாத மூடனை மணப்பதைவிடக் குளத்தில் தஞ்சம் புகுவேன்?"

"பிறகு"

"அவரைத்தான் மணந்தால் மணப்பேன்"

"யார்! மணிவண்ணனையா?"

"ஆம், அப்பா"

"அந்த நாடோடிப் பயலையா! அவன் என்ன குலமோ? யாருக்குத் தெரியும்?"

• திறமையாளன் தனது திறமையைத் தனக்காகப் பயன்படுத்திக் கொள்வது கொஞ்சம். அவனது திறமைகளைத் தங்களுக்காக மற்றவர்கள் பயன்படுத்திக் கொள்ள ஏற்படுகிற வாய்ப்புகள்தான் அதிகம்.

— ஞானப்பிரகாசம்

"நமது குலம் தானப்பா"

"போதும். என் பகைவனு என் மருமகன்?"

"அப்பா! அப்பா!"

"நான் சொன்னது தான். அந்தப் பாவி உயிரோடு இருக்கும் வரையில் எனக்கு நிம்மதியில்லை."

படீர் என்று கதவைத் தாளிட்டுக்கொண்டான் கந்தப்பன். குணவதியின் கண்களுக்கு உலகமே இருண்டது. இதயத்தில் பூகம்பம் வெடித்தது போன்ற உணர்ச்சி. உணர்ச்சியற்று தந்தையின் அறைக்கு வெளியே படுத்துக் கொண்டாள்.

நள்ளிரவு. பேயும் உறங்கும் காலம்! அடிமேல் அடி வைத்துக் கந்தப்பன் வீட்டை விட்டுக் கிளம்பினன். கதவு மெதுவாகத் திறக்கப்படும் சப்தம் கேட்டு குணவதி கண் விழித்துக் கொண்டாள். தந்தையின் செயல் அவளுக்குப் பெரிதும் திகைப்பைக் கொடுத்தது. எங்கே செல்கிருர் ஒருவேளை மணிவண்ணனை...? அதனை நினைக்கும் பொழுது அவள் உடல் பதை பதைத்தது.

கந்தப்பன் 'விடுவிடு' வென்று மணிவண்ணனின் வீட்டை நோக்கி நடந்தான். நிழலைப்போல் அவனையும் அறியாமல் குணவதியும் பின் தொடர்ந்தாள். அவள் பெண்மையில் ஒரு பெரிய ஆவேசம்!

நந்தவனத்தின் நடுவே யுள்ள அந்த வீட்டின் ஜன்னல் திறந்திருந்தது. விளக்கு வெளிச்சம் வெளியே தெரிந்தது. திருடனைப்

போல் கந்தப்பன் ஜன்னல் வழியே எட்டிப் பார்த்தான். இடுப்பினின்றும் அவன் கைகள் ஒரு கூரிய கத்தியை எடுத்து தயாராக வைத்துக் கொண்டன. விளக்கு வெளிச்சத்தில் அக்கத்தி பளிச்சென்று மின்னியது.

குணவதிக்கு நிலைமை விளங்கி விட்டது. தந்தையாயினும் கொலைகாரனாக மாறினால்....? ஆவேசத்துடன் தந்தையை எதிர்க்க ஓடி வந்தாள்.

வீட்டினுள்ளே கந்தப்பனைப் போன்ற சிலை. அதன் முன் மன்னன் அளித்த பரிசுகள். கை கூப்பிய வண்ணம் மணிவண்ணனின் காட்சி! கந்தப்பன் உற்றுக் கேட்டான். மணிவண்ணன் கூறுவது கேட்டது.

''கலையின் தந்தையே! உங்கள் ஆதரவும் கலையரசி குணவதியின் தூண்டுதலுமே இப்பரிசினைப் பெறச் செய்தன. உலகம் புகழும் சிற்பியே! நீரே என் குரு! நடராஜர் சிலையின் அமைப்புக்கு நான் செய்த மன்னனின் சிலை ஈடாகுமா? நாடோடியாக வந்த என்னை வேரூன்றச் செய்தீரே! பெரும் உபகாரியே!''

கந்தப்பனின் மனம் திடீர் என்று மாறிவிட்டது. கத்தியை வீசியெறிந்தான். வீட்டினுள் ஓடி ''மணிவண்ணா! நீயே கலைஞன்'' என்று அவனைத் தழுவிக் கொண்டான்.

மணிவண்ணன் திகைத்தான். கந்தப்பன் முகத்திலே மகிழ்ச்சி தாண்டவமாடிற்று. ''மணிவண்ணா! கலைஞர் திலகமே! இனி நீ நாடோடி அல்ல. என் மருமகனே. குணவதியின் கணவனே'' என்று பெருமையுடன் கந்தப்பன் கூறினான். ஓடிவந்த வேகத்தில் குணவதி காதலனையும் தந்தையையும் தழுவிக் கொண்டாள்.

காதல் பாதை

சம்பந்தம்

சேகரன் செப்புகிருன்:—

இன்று என் மனம் இத்தனை குதூகலப்படுவானேன்! உம். எனக்கே தெரியவில்லையே!

ஆமாம்; ஆமாம். இப்பொழுது தான் நினைவிற்கு வருகிறது. சோமு சொன்ன செய்திதான் அது. ஆகா! அதை நினைக்க எத்தனை இனிப்பாயிருக்கிறது! பத்மாவே என்னை விசாரித்தாளாமே! சிரித்துச் சிரித்து பேசும் உங்கள் நண்பர் எப்போ வருவார் என்றல்லவா கேட்டாளாம்! இருக்கும்; இருக்கும். பொய்யா சொல்வான் சோமு!

எனக்கென்னவோ பெண்களைக் கண்டால் சற்று சங்கோஜமாகத் தானிருக்கிறது. ஆனல் சோமு! அவர்களிடம் எத்தனை இனிப்பாய் பேசுகிருன் தெரியுமா!

அன்றைக்கு கூட "உன் தங்கையோடு பேசிக் கொண்டிருப்பது யாருடா?" என்று சாதாரணமாய்த்தான் கேட்டு வைத்தேன். உடனே அவன் என்னை என்ன பாடுபடுத்திவிட்டான் தெரியுமா! 'இத்தனை நாட்களாய் உங்களிருவரையும் அறிமுகப்படுத்திவைக்காதது என் மீது தப்பிதந்தான்' என்று என் கரத்தைப் பற்றிக் கொண்டு பரபரவென்று அவளிடமே அல்லவா அழைத்துச் சென்றுவிட்டான். எனக்கே ஏன் அப்படி கேட்டோம் என்ருகிவிட்டது.

என்னைக் கண்டதும் அவள் எழுந்து வணக்கம் செய்தாள். நானும் பதில் வணக்கம் செய்ததாகத்தான் நினைக்கிறேன். சோமுவின் பரபரப்பு என்னை திக்குமுக்கலாடச் செய்துவிட்டது. அதோடு அவளுடைய அழகிய வதனமும் தேன் குரலும் என்னை என்னவோ செய்துவிட்டன.

உடனே என்னைப் பற்றி பெரும் புகழ்மாரி பேசினன் சோமு. அவளைப் பற்றியும் அநேகம் சொன்னன். பிறகு அனைவரும் அங்கேயே உட்கார்ந்துக்கொண்டு அநேகம் பேசினேம். எனக்கென்னவோ எதிலும் மனம் செல்லவில்லை. என்னையறியாது என் கண்கள் அவள் திருமுகத்தையே அடிக்கடி நாடின. ஒன்றிரு தடவை அவளுடைய கருவண்டையொத்த விழிகளுடன் என் பார்வை சந்தித்துக் கொண்டது கூட அப்பொழுதே அவளுடைய முகச் சாயலில் எனக்கு ஒரு கவர்ச்சியேற்பட்டுவிட்டது. அவளோடு அடிக்கடி பேசிக் கொண்டிருந்தால் தேவலையே என்றே உணர்ந்தேன். காதல் என்பதே அதுதானே!

சோமு பொல்லாதவன். என் முகத்தில் அசடு வழிந்ததை எப்படியோ தெரிந்துக் கொண்டுவிட்டான். "சரி சரி நேரமாகிறதே புத்தக சாலைக்குப் போக" என்று என்னைப் பிடித்து இழுத்துக் கொண்டு வந்துவிட்டான். எனக்கென்னவோ அவளைப் பிரிய வருத்தமாய்த்தானிருந்தது. ஆனல் அதைச் சொல்லவும் முடியாத மெல்லவும் முடியாத நிலையிலல்லவா இருந்தேன்!

அன்றிரவு அதே பத்மா சொல்லி வைத்தாற்போல் என் சொப்பனத்தில் வந்தாள். அவளை வெகு சமீபத்திலிருந்து பார்க்கும் பாக்கியம் அப்பொழுதுதான் கிடைத்தது எனக்கு. ஆகா! என்ன அழகு! என்ன அழகு! என் இலக்கிய பணியைக் கண்டு என்னை மிக

வும் புகழ்ந்து போற்றினுள். நான் என்னவோ சொன்னதைக் கேட்டு கலகலவென நகைத்தாள். அச் சிரிப்பொலி இன்னும் என் காதில் ஒலிக்கிறதே! அப்பொழுது என் உடம்பில் ஏற்பட்ட ஒருவித குறு குறுப்பு இன்னும் தணிந்த பாடில்லையே!

காதல் என்பது நோய் பிடித்த சுகம் என்று இப்பொழுதான் தெரிந்துக் கொண்டேன். முன்பின் இறந்திருந்தாலல்லவா எனக்கு இடுகாடு தெரியும்! வேளைக்கு சாப்பிடாமல் பத்மாவையே நினைத்து ஏங்கினேன். என் பார்வை பட்ட இடமெல்லாம் அவளே தோன்றி நின்ருள்.

இன்று காலை விடிந்ததும் விடியாததுமாய் இந்தச் செய்தியைக் கொண்டு வந்தான் சோமு. நண்பன் என்ருல் அவன்தான் நண்பன்!

அதோடு அவள் என்னை நாளை மாலை டென்னிஸ் விளையாட்டில் சந்திக்க விரும்புவதாகவும் சொல்லிப் போனுன். உம். அந்தக் காலத்து காதலர்களெல்லாம் எத்தனை வீர தீர பார்க்கிரம செயல்களெல்லாம் புரிந்திருக்கிருர்கள் தங்கள் காதலியின் கரத்தைப் பற்ற! லைலா கூட, வெகு தூரத்திலிருந்த பாரசீகத்துப் பச்சைக் கிளியும் இந்தியா தேசத்து மான் குட்டியும் கொண்டுவரச் சொல்லவில்லையா கயசிடம்! அப்படியிருக்க இது எம்மாத்திரம்! உம். நாளை மாலை அவளை அங்கு சந்திக்க, இப்பொழுதே எல்லா ஏற்பாடுகளும் செய்துக் கொள்ள வேண்டும். இதுதான் காதல் பாதை போலும்!

பத்மா பகர்கிருள்:—

என் சிநேகிதி வீட்டுக்கு எப்பொழுது சென்ருலும் சரி; அவள் அண்ணன் சோமுதான் என்னை வரவேற்கிருன், அது ஏன்? ஒரு நாள் பேச்சோடு பேச்சாய் அவளை இதுபற்றிக் கூட கேட்டு வைத்தேன். 'அவன் அப்படிதான் பண்ணுகிருன். வீட்டுக்குப் பெரியவனும் அவன். வருபவர்களை முதலில் அவன்தான் வரவேற்கவேண்டும் என்கிருன், பிடிவாதக்காரன்' என்று சூள் கொட்டினுள் அவள்.

அவளைத் தேடிக்கொண்டுபோன முதல் நாள் அப்படித் தானே நடந்தது. 'சாருமதி வீடு இதுதானே'? என்று தயங்கிக் கொண்டே கேட்டேன். 'ஆமாம் இதுவேதான்; என் தங்கைதான் அவள்; வாருங்களேன் உள்ளே' என்று அன்பாய் அழைத்துக்கொண்டு தன் அறைக்குச் சென்று அமரச் செய்தான். பிறகு என்னைப்பற்றி யெல்லாம் விசாரித்தான். சொல்லிக் கொண்டிருந்த பொழுதே 'ஓ! அவருடைய பெண்ணு! இவருடைய தங்கையா! அவர்களனைவரையும் எனக்கு நன்ருய்த் தெரியுமே!' என்றெல்லாம் சொல்லிக் கொண்டிருந்தான். கடைசியில் பேச்சுவாக்கில் அவர்களொருவரையுமே அவனுக்குத் தெரியாது என்று நான் தெரிந்துக் கொண்டேன். அப்பப்பா! என்ன பேச்சு! என்ன பேச்சு! பலே வாய்ச் சாலகன் சோமு.

கடைசியில் காப்பி வரவழைக்கட்டுமா? அல்லது குளிர்பானம் தருவிக்கட்டுமா என்ற பேச்சையெடுத்தான். எனக்கு சுருக்கென்றது. உடனே 'இது சாருமதி வீடுதானே!' என்று சற்று உரக்கவே கேட்டேன், "ஆம், ஆம் மறந்தேன் இதோ அழைத்து வருகிறேன்" என்று வெளியே சென்ருன்.

சற்று நாழிகைக்குள் "ஹலோ! பத்மா!' என்று சாருமதி வந்தாள், 'நீ வந்து ரொம்ப நாழியாகிறது! அண்ணு சொல்லவேயில்லையே!" என்று அவனை சற்று விரைத்துப் பார்த்தாள். அவன் ஒரு குறும்புப் புன்னகை சிந்தினுன். பிறகு நானும் சாருமதியும் முன் ஹாலுக்குச் சென்று இலக்கிய விஷயமாக நிறைய பேசிக் கொண்டிருந்தோம்.

அப்பொழுதெல்லாம் சோமு சும்மாவாயிருந்தான்! அடிக்கடி குறுக்கும் நெடுக்குமாகப் போய்க் கொண்டிருந்தான். சமயா சமயத்தில் என்னை விழுங்குபவன் போல் பார்க்கத் தவறவேயில்லை. சாருமதி அடிக்கடி அவனை தன் கண்களால் கடிந்துக் கொண்டிருந்ததை நான் பார்க்காமல் பார்த்துக் கொண்டிருந்தேன்.

இவனுக்காக என் சிநேகிதியின் வீட்டிற்குப் போகாமலிருக்க முடியுமா! சாருமதி சாதாரண பெண்ணல்லவே! இலக்கிய மேதை. விளையாட்டில் எத்தனை கெட்டிக்காரியோ அதை விட மேம்பட்டவள் இலக்கிய ரசனையில். அப்படியிருக்க அவளை எப்படி பிரிவேன் நான். அடிக்கடி போய்கொண்டுதானிருந்தேன்.

சோமுவும் தன் காலரை இழுத்துவிட்டுக் கொண்டே, என்னிடம் வலிய வந்து பேசத்தான் பேசினான். நான் என் முகத்தை எப்படி எப்படியோ வைத்துக் கொண்டு கூட பார்த்தேன். ஊம் உம். அவன் பொல்லாத குறும்புக்காரன்.

ஆனால், என்னால் இத்தனை வெறுக்கப்பட்ட சோமு, அன்று எத்தனை நல்லவனாய் தென்பட்டான். தெரியுமா! அன்று 'திடுக்' கென்றல்லலா அவன் நண்பன் சேகரனை எனக்கு அறிமுகப்படுத்தி வைத்தான். ஆகா! சேகரன்! எத்தனை அழகானபெயர். அவருடைய குளிர்ந்த திருமுகம் என் உள்ளத்தையே கௌவியிழுத்ததே! சோமுவைப் போலவா அவர்! பேசினது சில வார்த்தைகளேயாயினும் எத்தனை அமரிக்கையாய் அர்த்த புஷ்டியுடன் பேசினார். அவ்வப்பொழுது அவர் சிந்தின அந்தக் குறும்புப் புன்னகையொன்றே போதுமே.

அவர் என் மனதில் நன்றாய் பதிந்து விடவே, அன்றிரவு சரியான தூக்கமேயில்லை. கண்களை மென்மையாய் மூடினால் போதும்; சந்தடி செய்யாது சேகர் எதிரில்

வந்து நிற்பார். ஆ! நீங்களா! என்று கண்களைத்திறந்து பார்த்து ஏமாறுவேன். மனத்தெளிவு இல்லாமல் நேற்று முழுவதும் வெளியே எங்கும் செல்லாமல் வீட்டோடே கிடந்தேன். சாருமதி வீட்டுக்குக் கூட செல்லவேயில்லை.

ஆனால் இன்று அதிகாலை, மாடியில் கண்களைத் துடைத்துக் கொண்டு கட்டிலிலிருந்து இறங்கின பொழுதே. கீழே வாசலில் 'டிரிங் டிரிங்' என்று சைக்கிள் மணி சப்தம் கேட்டது. யாராயிருக்குமென்று, ஆவலாய் கைப்பிடிச் சுவரண்டை ஓடி வந்து எட்டிப் பார்த்தேன். அங்கு ஸைகிளில் சோமு அமர்ந்திருந்ததைக் கண்டதும் எனக்கு சுருக்கென்றது. என்ன துணிச்சல் அவனுக்கு! அதோடு 'உங்களைப் பார்க்கத் தான் வந்தேன்' என்று அண்ணுந்து பேசினான். எனக்கு கோபமும் வெட்கமும் குமிழிட்டுக் கொண்டு வந்தன. துடுக்காய் இரண்டொரு வார்த்தைகள் சொல்லிவிட்டு வாலாம் என்று விடு விடு என்று கீழே இறங்கினேன்.

''நேற்று முழுவதும் உங்களை எங்கே காணவே காணோம்? சேகரன் உங்களைப் பற்றியே விசாரிக்கிறானே!''

அவனுடைய அவ்வார்த்தைகள் என் உடலில் ஒருவித சிலீர் உணர்ச்சியைப் பாயச் செய்தன. ''ஆ! அப்படியா!'' என்றேன் நான். என் கோபமெல்லாம் சூரியனைக் கண்ட பனி போல் இருந்த இடம் தெரியாமல் மறைந்தே விட்டது.

''நாளை மாலை சேகரனை டென்னிஸ் விளையாட்டில் சந்தித்தால் என்ன?''

''விளையாட்டிலா!!''

''ஆமாம் டென்னிஸ் தானே அவனுக்கு உயிர்''

''ச....ரி' என்று என் வார்த்தைகள் தயங்கி வந்தன. ஆனால் அவன் அதற்குள் ''அவசியம் தவறாமல் சந்திக்கணும்'' என்று சைகிளை அழுத்தி மிதித்துக் கொண்டு அதி வேகமாய் போய்விட்டான்.

ஆ! தன் தங்கையின் சிநேகிதி என்ற முறையில் எனக்கு எத்தனை உதவி செய்கிறான்! சேகரை அறிமுகப் படுத்தி வைத்த தொன்றேபோதுமே! அதோடு தூது வேறு சொல்வதென்றால்! அவன் மீதிருந்த என் கெட்ட அபிப்பிராயங்களனைத்தும் ஒரேயடியாய் சரிந்து விழுந்தன.

விற்கு வந்ததும் அப்படியே அசந்து உட்கார்ந்து விட்டேன். என்னை ஏதோ கண்களைக் கட்டிக் காட்டில் விட்டாற் போலிருந்தது. நான் அவரிடம் எப்படி சமாளிப்பேன்' உம் யோசித்து என்ன பயன்! காதல் பாதை இது தான் போலும்!

சோமு சொல்லுகிறான்

என்ன இருந்தாலும் இந்தப் பெண்களுக்கு இத்தனை கல்நெஞ்சு கூடாது! பத்மாதானாகட்டும்...! ஏதோ சிவப்புத் தோலைபோர்த்திக் கொண்டிருக்கிறாளே என்று அவளிடம் எத்தனை சிரித்து பேசுகிறேன். வேண்டுமென்று எத்தனை வம்புக்கிழுக்கிறேன் அவளை! குறைந்தபட்சம் குளிர்ந்தபார்வையாவது வேண்டுமே! ஊம் உம் எள்ளும் கொள்ளும் சேர்ந்து வெடிக்கும் முகத்தை வைத்துக் கொண்டு நாலே வார்த்தைகளில்

சேகர் என்னை விசாரித்ததை நினைக்க என் உள்ளம் ஒருவித புளகிதமடைந்தது. இன்பத்தையே என் உடலில் ஊசி மூலம் ஏற்றினாற் போலிருந்தது. ஆனால் அடுத்த வினாடியிலேயே, நாளை டென்னிஸ் விளையாட்டில் அவரை சந்திக்க வேண்டும் என்பது நினை

தன் பேச்சை முடித்துக் கொள்கிறாளே! இது சரியா? நீங்களே சொல்லுங்கள்.

பெண்களெல்லாம் அன்பின் அவதாரம் என்பார்களே! இவள் அடங்காப்பிடாரியின் அவதாரமாகவல்லவா இருக்கிறாள். 'சாருமதி இல்லையே. டென்னிஸ் விளையாடப் போயிருக்கிறாள். நானும் கடற்கரைக்குப் புறப்பட்டுக் கொண்டிருக்கிறேன். வாருங்களேன் நீங்களும். அப்படியே காற்றாட போய் வருவோம்' என்றதில் என்ன தப்பு இருக்கிறது! என்னை ஒரே விழிப்பாய் விழித்துப் பார்த்துவிட்டு, வெகு வேகமாய் திரும்பிவிட்டாளே பத்மா. படித்த பெண். உம்; இங்கிதம் தெரியாதவள்.

இவள்தான் இப்படி என்றால் என்

தங்கை அதற்கு மேல். அந்தப் பக்கம் அப்படிச் சென்றுவிட்டால் போதும். 'என்ன அண்ணா இது. நாங்கள் இருவரும் பேசிக்கொண்டிருக்கும்பொழுது அடிக்கடி இப்படி வந்துக்கொண்டு...!' என்று சீறுகிறாள். பத்மா இல்லாதபோது கூட அவளைப்பற்றி விசாரிக்கிறேனே, அதைக் கொண்டாவது சாருமதி தெரிந்துகொண்டிருக்க வேண்டாமா! நான் அவளுடைய அண்ணாதானே, என் நிலையறிந்து என்மேல் துளி அனுதாபம் வேண்டுமே! ஊம்உம். அவள் உண்டு அவள் சிநேகிதி உண்டு. சமயத்தில் கூடிக்கொண்டு கொல்லென்று சிரிக்கவேண்டியது. அவ்வளவு தான்.

சேகரன் என்னிடம் பேசிக்கொண்டிருக்கும் பொழுது, சாருமதி மாத்திரம் ஏதேதோ சாக்கிட்டுக்கொண்டு என் அறைக்கு அடிக்கடி வருகிறாளே அது ஏனாம்? குடிக்கத் தண்ணீர் கேட்டால், எனக்கு கண்ணாடி டம்ளரில் கொண்டு வருகிறாள். சேகரனுக்கு வெள்ளி டம்ளரில் கொண்டு வருகிறாள். இதெல்லாம் நான் கவனிக்காமலா இருக்கிறேன்!

நானும் எத்தனையோ தடவை இந்த பத்மாவைக் கண்டதும் 'உம்'மென்று முகத்தை வைத்துக் கொள்ள வேண்டுமென்று தீர்மானித்திருக்கிறேன். ஆனால் முடியவில்லையே! அவளுடைய மோகன வதனம் என்னை கிருகிருக்கச் செய்து விடுகிறதே!

பெண்களை தலைநிமிர்ந்து பார்க்காத, சேகரன் கூடவல்லவா அன்று 'அவள் யார்?' என்று கேட்டுவிட்டான். நானும் அதுதான் சமயம் என்று அப்பொழுதே அவ்விருவரையும் அறிமுகப்படுத்தி வைத்தேன். அது என்ன, பத்மா அவனிடம் அப்படி குழைந்து குழைந்து பேசினாளே! சேகரனுக்கும் அதில் எத்தனை குதூகலம் தெரியுமா? அப்பொழுதுதான் அவன் அர்ஜுன சந்நியாசி என்று எனக்கு விளங்கிற்று. அவ்விருவரது இதயத் துடிப்பையும் அப்பொழுதே நான் உணர்ந்துக் கொண்டேன்! அத்தனை எளிதில் அவர்கள் எண்ணம் கைகூட விடுவேனா நான்! இருக்கட்டும்; இருக்கட்டும். காதல் பாதை எது என்று காட்டிவிடுகிறேன் நான்!

சேகரனும் பத்மாவும்;
சோமுவும் சாருமதியுங் கூட—

"ஹலோ பத்மா! எங்கே இந்தப் பக்கம்?" என்று தன் வலது காலைத் தாங்கி நடந்துக் கொண்டே அவளருகில் சென்றான் சேகரன். வணக்கம் செய்ய தன் கையைத் தூக்க முடியாமல் தலையை மாத்திரம் ஆட்டினாள் பத்மா. "உம்.... இல்.... ஆமாம் நீங்கள் எங்கே வந்தீர்கள்? இன்று மாலை என்னை டென்னிஸ் விளையாட்டில் சந்திக்கச் சொன்னீர்களாமே!" என்று தலை குனிந்து சொன்னாள். அவள் குரல் கரகரத்தது; கண்களில் இலேசாய் நீர் கூட கலங்கியது. 'என்ன நான் சொன்னேனா?' என்று துள்ளிக் குதித்தான் சேகரன். நீ அப்படி சொன்னதாகவல்லவா என்னிடம் சோமு சொன்னான். அதனால் தானே இப்படி ஆஸ்பத்திரிக்கு வரவேண்டிய நிலைமை ஏற்பட்டது எனக்கு! "ஆ! அப்படியா! விளையாடவே தெரியாத நான் ஏன் அப்படி சொல்கிறேன்" என்று கை உபாதை தாங்கமுடியாமல், அப்படியே நிழலுக்கு நின்ற அம்மரத்தின்மீது சாய்ந்துக்கொண்டு விட்டாள்.

"ஆ! அவன் வார்த்தையை நம்பியல்லவா இப்படி மோசம் போனேன். உண்மையைச் சொல்கிறேன் பத்மா, எனக்கு விளையாட்டில் பிரியமே கிடையாது."

"நானும் அப்படித்தான்!"

"இலக்கியங்களை படிப்பதிலும் சர்ச்சை செய்வதிலும் எனக்கு அளவு இல்லாத பிரியம். நான்

ருசிமிக்க ரொட்டி பண். ஐகிளாஸ் பிஸ்கட்ஸ்
ஆரோக்கியம் தரும் பேன்சி கேக்ஸ்
தயாரிப்பவர்: ராதா பிஸ்கட் பாக்டரி, சென்னை-1.

பத்திரிகைகளுக் கெல்லாம் புனைப் பெயரில் இலக்கியக் கட்டுரைகள் எழுதி வருகிறேனே தெரியுமா பத்மா!''

''ஐயோ! நானும் அப்படித் தான்!''

''ஆனல் சோமுவின் வார்த்தையை நம்பி உன் காதலைப் பெறுவதற்காக நேற்று முழுவதும் டென்னிஸ் விளையாட கற்றுக்கொண்டேன். பந்தை ஓடி எடுத்தபொழுது சருக்கி விழுந்து இதோ காலை உடைத்துக்கொண்டு நிற்கிறேன் பார். அதற்குத்தான் ஆஸ்பத்திரிக்கு வந்தேன்.''

''ஐயோ! எனக்கும் இலக்கியம் என்ருல்தான் பிரியம். விளையாட்டென்ருல் வேப்பங்காயாயிற்றே எனக்கு. நானும் உங்கள் காதலைப் பெற நேற்று முழுவதும் விளையாடக்கற்றுக்கொண்டேன். முன்பின் டென்னிஸ் மட்டை பிடித்திருந்தாலல்லவா! இதோ கை சுளுக்கிக் கொண்டு தூக்கவே முடியவில்லை. அப்பப்பப்பா!''

''உம்..இந்தப்பொல்லாத சோமு நம் இருவரையும் இப்படி பைத்தியக்காரர்களாக்கி விட்டானே! காதலுக்கு கண்ணில்லை என்பார்கள். நமக்கு அதோடு காதும் இல்லை; அறிவும் இல்லை என்றல்லவா ஆக்கிவிட்டான் அவன். சரி, சரி, வா! கட்டுக் கட்டிக்கொண்டு வருவோம்''.

இருவரும் ஆஸ்பத்திரிக்குள் தனித்தனி இடத்திற்குச் சென்று கட்டுகட்டிக் கொண்டு வெளியே வந்தார்கள், சேகரனுக்கு காலில் கட்டு; பத்மாவுக்கு கையில் கட்டு இருவருக்கும் கோபம் ஒரு பக்கம். தாபம் ஒருபக்கம். தாங்கள் சோமுவால் ஏமாற்றப்பட்டதை நினைக்க நினைக்க இருவருக்கும் சிரிப்பு வந்துவிட்டது. விழுந்து எழுந்து சிரித்துக் கொண்டே திரும்பினர்கள். அவர்கள் உடலில் வலி இருந்தும், உள்ளத்தில் உவகை யிருந்ததல்லவா!

அப்பொழுது ரஸ்தாவில் எதிரே சோமு அதிவேகமாய் சைகிளில் வருவதைக் கண்டார்கள். 'டக்' கென பக்கத்து முள்வேலிக் கப்பாலிருந்த ஓடிப் பாதைக்கு தங்கள் வழியை மாற்றிக் கொண்டார்கள் சேகரனும் பத்மாவும்.

சோமு அதைப் பார்த்து விட்டான். சைகிளை விட்டிறங்கி ஓடி வந்தான், முள் வேலியல்லவா குறுக்கிட்டு நின்றது. அவர்களை எப்படி எப்படியோ பரிகாசம் செய்ய வந்தவன் அங்கேயே நின்று விட்டான்.

அதே சமயத்தில் இங்கு எங்கே அண்ணு நிற்கிருய்! என்ற குரல் கேட்டுத் திரும்பினுன் சோமு. சாட்சாத் சாருமதியே சைகிளிலிருந்து இறங்கிக் கொண்டிருந்தாள் ''அதோ போகிறது யார் அண்ணு. உன் நண்பன் சேகரு! பக்கத்தில் செல்பவள் பத்மாவா!!''

''ஆமாம்....''

உடனே 'பத்மா!' என்று கத்தினுள் சாருமதி.

'சேகர்!' என்று கத்தினுன் சோமு.

''எங்கே அந்தப் பக்கம் போகிறீர்கள்?'' என்ருர்கள் ஏக சமயத்தில்.

''இது எங்கள் காதல் பாதை' என்று அவர்களைத் திரும்பிப் பார்த்துச் சொல்லிவிட்டு குதூகலமாய் நெடுக நடந்தார்கள் சேகரனும் பத்மாவும்.

அதைக் கேட்டு சோமுவும் சாருமதியும் தலைகுனிந்து நீண்ட பெருமூச்சு விட்டுக் கொண்டார்கள்.

ஏ. ஸி. ஸி.

" நீலகிரி " பிராண்டு
போர்ட்லண்டு சிமெண்டு

பிரிட்டிஷ் ஸ்டேன்டர்டு
தரத்தைவிட சிறந்தது

கீழ்கண்ட எங்கள் டிபோக்களில் கிடைக்கும்

ராயப்பேட்டை : *சிமெண்டு கான்கிரீட் ஒர்க்ஸ்,*
11-A, வெஸ்ட்காட் ரோடு.

திருவல்லிக்கேணி : *131, பைகிராப்ட்ஸ் ரோடு.*
283-A, திருவல்லிக்கேணி ஹைரோடு.
173, பார்பர்ஸ் பிரிட்ஜ் ரோடு.

மயிலாப்பூர் : *14, கச்சேரி ரோடு.*

புதுப்பேட்டை : *73, ஹாரிஸ் ரோடு.*

பெரியமெட் : *" ஜயாமான்ஷன் " பூந்தமல்லி ஹைரோடு.*

சூளை : *139, சூளை ஹைரோடு.*
40, காலத்திய முதலி தெரு, புதிய மார்கட்.

புரசவாக்கம் : *139/2 புரசவாக்கம் ஹைரோடு.*

பார்க் டவுன் : *20-B, வெங்கடாசல முதலி தெரு,*
(அய்யா பிள்ளை தெரு)

வண்ணாரபேட்டை : *105, ஹைரோடு திருவொற்றியூர்.*

கீழ்க்கண்ட வெளியூர் டிப்போக்களிலும் கிடைக்கும்.

ஆற்காடு : *(வ. ஆ. ஜில்லா) " கஸ்தூரி பில்டிங்ஸ் "*

காஞ்சீபுரம் : *(செங்கல்பட்டு ஜில்லா) 99, ராஜா தெரு.*

15, செம்புதாஸ் தெருவிலுள்ள எங்கள் ஆபீஸிலும் கிடைக்கும்

எம். குப்புஸ்வாமி நாய்க்கர்

15, செம்புதாஸ் தெரு, சென்னை-1

போன் : 2489.

தமிழ் முரசம்

இளம்பாரதி

197210

ஆர்த்திடுகப் போர்முரசம் தயக்கம் இன்றி
அன்னைமொழிச் செந்தமிழுக் கிழுக்கு நேர்ந்தால் !

பார்முழுதும் ஒலிக்கட்டும் முரசின் ஓசை
பைந்தமிழர் நம்வாழ்வின் உயர்வைச் சொல்லி.

மார்தட்டிக் கூறிடுவோம் தமிழர் நந்தம்
வண்டமிழின் இன்சுவைக்கு நிகராய் வேறு

சீர்கொண்ட எச்சுவையும் இல்லை யென்று !
செந்தமிழின் மணத்திற்கீ டில்லை, இல்லை !

அயல்மொழிகள் வாழட்டும்; தமிழர் எல்லாம்
அம்மொழிகள் கற்கட்டும் உணர்வி னோடு

அயல் மொழிகள் கற்கின்ற தமிழர் ஆயின்
அன்னைமொழித் தமிழ் மொழியை ஒதுக்கி வாழ்தல்

உயர்வல்ல, உயர்வல்ல எந்த நாளும்
உணர்வேற்றித் திண்மையுடன் தமிழைக் கற்போம்;

அயர்வின்றித் தமிழன்னைப் புகழ் வளர்ப்போம்
''அன்னைவாழி'' என்றிதயம் கீதம் பாட !

முல்லைக்குத் தேரீந்தான் பாரி வள்ளல்;
முடிதுறந்தான் இளங்கோவும் கவிதை ஆக்க !

எல்லாமித் தமிழ்நாட்டில்! வேறெந் நாட்டில்
இவையாவும் நிகழ்ந்ததுண்டு? பெருமை பாடாக்

கல்நெஞ்சம் நீக்கிடுக; தமிழின் இன்பம்
கண்டுள்ளம் பொங்கிடுகத் தமிழைப் பாடி,

புல்லரல்லோம்; தமிழ்தாயின் மக்கள் நாங்கள்
புகழ்மறவர் தமிழரெனப் புகழைத் தேடீர் !



மணப்புயல்

யோகி சுத்தானந்த பாரதியார்

கருப்பாயி அழகான குழந்தை, மாநிறம், கமலக்கண், முகத்தில் நல்லகளை, உதட்டில் முத்துநகை, அங்கங்கள் அழகாக அமைந்திருந்தன. வீராயி தன் உயிரைக் காட்டிலும், கருப்பாயியை அதிகமாக நேசித்தாள். ஆனால் குழந்தை பிறந்தது முதல் நாகப்பன் மனம் ஒரு மாதிரியானது. முத்தம்மாள் அவன் புத்தியை மாற்றி வந்தாள். “இது அவள் பெற்றுக்கொண்ட குழந்தை, இப்படி எத்தனை குழந்தை பெறுவாளோ ஊர்வசி; அவளுக்கு உன் மேல் ஆசையேயில்லை. அவள் யார் யாரிடம் போகிறாள் என்பது எனக்குத் தெரியும். உன்னை அவள் ஏமாற்றுகிறாள்....” என்றெல்லாம் காதில் ஓதி ஓதி, நாகப்பன் மனதை முத்தம்மாள் கலைத்து வந்தாள். வீராயியின் மனவுறுதி சினிக்கும் பிடிக்கவில்லை. ஏனெனில் “கணவனில்லாத போது வீட்டுக்குள் வருவது சரியல்ல. போம் வெளியே” என்று

அவள் ஒரு நாள் சூடுகொடுத்துவிட்டாள். ஆதலால் சீனிக்கும் அவள் மேல் வெறுப்பு ஏற்பட்டது. அவனைப் பகைத்தால் கண்டித் தோட்டத்தில் யாருக்கும் இடமில்லை. சீனி அவளை நயம்பயமாக வசப்படுத்தப் பார்த்தான். முடியவில்லை; அவள் கூலியைக் குறைத்தான். அவள் கூடைக்கொழுந்தை எடுத்து முத்தம்மாள் கூடையில் அள்ளிப் போட்டான். வீராயி ''இந்த அநியாய மெல்லாம் கடவுளுக்குப் பொறுக்குமா'' என்று சொல்லிவிட்டாள். சீனியும்' ''ஏ கழுதே போ திரும்பி, உனக்கு இங்கே வேலையில்லை'' என்று சொல்லிவிட்டான். நாகப்பனையும் ''அந்த மூதேவி முகத்தைப் பாராதே— உனக்கு நல்ல குட்டியைக் கூட்டிவைக்கிறேன்'' என்று வசப்படுத்தினான். அடிமை நாகப்பனும் ''போ கழுதே— உன்னைப் பார்த்தால் யாருக்கும் பிடிக்கவில்லை'' என்று தள்ளினான். நாகப்பன் இரவில் வீட்டுக்கு வருவதில்லை. அவன் நன்றாக குடித்துவிட்டு, முத்தம்மா வீட்டில் இருந்தான்.

முத்தம்மாள் அவன் மனதில் பகைவெறியைத் தூண்டி விட்டாள். அதனால் அவன் வீராயியைப் பார்ப்பதும் குழந்தை கருப்பாயியைத் தொடுவதுங்கூடப் பிடிக்காமல் வெறுத்தான். வீட்டுக்கு வந்தால் "உம்–போடு சோறு; ஏன் இன்னும் தாமதம்; தடிக்கழுதை. சமயலுக்குக் கூட லாயக்கில்லை" என்று இலை போடுவதற்குள் மிரட்டுவான், அடிப்பான்; குடி வெறியில் வீராயி கழுத்தைப் பிடித்துக் கூட நெறிப்பான், குழந்தையைக் காலால் எற்றித் தள்ளுவான். "கழுதை யாருக்குப் பிறந்ததோ" என்று வைவான். வீராயி கண்ணீர் விட்டுக் கதறிக் குழந்தையை அணைத்துக் கொள்வாள். இருவரையும் குப்புறத் தள்ளி மிதிப்பான் நாகப்பன். வீராயி "ஐயோ நான் செய்த பிழை என்ன? இது நமது குழந்தைதான். யாரோ துர்ப்போதனை செய்து, உன் மனதைக் கலைத்துவிட்டார்கள். நான் உன் மனைவி, கருப்பாயிநமது குழந்தை" என்பாள். ஒன்றும் அவன் காதில் ஏறாது. "போடீ சோறு, என்று உணவை வாரியடைத்துக் கொண்டு, அன்புடன் சோறு போட்ட வீராயியை ஒரு அறை அறைந்து, சுவரில் மோதித் தள்ளி அவள் நகை நட்டுகளையும் பறித்துக் கொண்டு ஓடிப்போவான் பாவி. வீராயி மனம் இடிந்து மடிந்து அப்படியே கண்ணீர் விட்டு எதிரேயிருந்த முருகன் படத்தையே பார்ப்பாள்; பிறகு தன் குழந்தையைப் பார்ப்பாள்.

"ஐயோ நல்லவர்களுக்கு உலகில் இடமில்லையா? உலகம் பாபக்காடா? நான் செய்த குற்றமென்ன? ஒரு கணவனுடன் ஒத்து வாழ விரும்பினேன்; எனது பெண்மையைக் காத்துக்கொள்ள விரும்பினேன். அதற்கு எத்தனை பகைவர்! என்மேல் எத்தனை பேர் கோளேற்றி என் குடியைக் கெடுத்தார்கள்! என்னைக் கட்டிக்கொண்ட கணவன் என்னை வெட்டிக் கொல்லப் பார்க்கிறானே — என்ன உலகம்! என்னை அழைத்து வந்த கங்காணி, என் வயிற்றில் அடிக்கிறானே! நான் இரத்தவேர்வை சிந்தி உழைக்கவில்லையா? உழைத்த பணத்தைக் கொண்டு நான் மானமாகப் பிழைக்க வழியில்லையா? இந்தக் குழந்தைக்காக உயிர் வைத்திருக்கிறேன். இன்றேல் இதோ இந்த மாவலிக் கங்கையில் விழுந்து என் கவலையை ஓடும் தண்ணீரில் கரைப்பேன்" என்று மனம் புழுங்குவாள். குழந்தை சிரிக்கும், அந்தச் சிரிப்பு விசன மேகங்களில் மின்னல் போலப் பாய்ந்து, வாழ்க்கையில் நம்பிக்கையூட்டும். நாகப்பன் வந்ததும் மீண்டும் மனப்புயல் வீறியடிக்கும்.

இந்த மனப் புயலுக்கிடையில் வீராயி மீண்டும் கருத்தரித்தாள். மீண்டும் ஒரு குழந்தை. ஆண் குழந்தை பிறந்தது. அதற்கு முருகன் என்று பெயரிட்டாள். இந்தக் குழந்தை பிறந்தபிறகு, கவலை இரண்டு மடங்கானது — முத்தம்மாள் பொறாமை மூன்று மடங்கானது, நாகப்பன் தொல்லை நான்கு மடங்கானது — சீனியின் கொடுங்கோல் ஐந்து மடங்கானது. நாகப்பன் தன் கூலிப் பணமெல்லாம் கள்ளுக் கிடங்கிலும், காமக் கிடங்கிலும் உதறிவிட்டு, வெறிகொண்டு வந்து வீராயியின் சிறு கூலியையும் பறித்துச் செல்வான்; அவள் ஆடையைக்கூட அள்ளிச் சென்று அடகு வைத்துக் குடிப்பான். வீராயி பாவம் கண்ணீர் விட்டுக் கலங்கிச் சோர்ந்து போவாள். இரண்டு குழந்தைகளைக் காப்பாற்ற முடியாமல் ஏங்குவாள். கருப்பாயி மூன்று வயதுக் குழந்தை; முருகன் ஆறு மாதக் குழந்தை. முருகனுக்குப் பால் கொடுக்கக்கூடத் தாய்க்குப் பலமில்லை. சாப்பாடில்லாமல் உடல் தளர்ந்தது; மலை மேலேறிக் கொழுந்து பறிக்கவும் சக்தியில்லை. ஒருநாள் நாகப்பன் காலைப் பிடித்துக்கொண்டு வீராயி தன் கவலைகளைக் கதறி முறையிட்டாள். "நீ எப்படியாவது செத்துப் போடீ!" என்று அவளைப் பந்துபோல் எற்றினான் பாவி.

வீராயி : நான் சாகிறேன், சாகத்தான் போகிறேன். ஐயா இந்தக் குழந்தைகள் பட்டினி கிடந்து தவிக்கின்றன; தகப்பனுன நீ அவர்களுக்காவது ஏதாவது தர வேண்டாமா? உன் கூலிப் பணத்தையும் குடித்துவிட்டு என் சிறு கூலியையும் பறித்துச் சென்று அவளிடம் தருகிருயே; நியாயமா? தருமதேவதை பொறுக்குமா?

நாகப்பன் : தரும தேவதை ஹ ஹ ஹ! தருமமும் தேவதையும் அந்தக் காலம். தருமதேவதை உனக்குச் சோறு போடட்டுமே! உன் குழந்தைகளுக்குத் தீனி போடட்டுமே!

வீராயி : தருமதேவதை நமக்குக் கைகால் தந்திருக்கிறது. உழைத்துண்ணலாம். உழைத்த கூலியெல்லாம் கண்டபடி வீணுக்கினுல் அதென்ன செய்யும்? உனக்கு இரண்டு ரூபா எனக்கு ஒன்றரை ரூபா கிடைக்கிறது. மூன்றரை ரூபாயில் இரண்டு ரூபா மிச்சம் பிடிக்கலாமே. நாம் மானமாகச் சாப்பிட்டு, நல்ல வீடு கட்டிக் கொண்டு சுகமாக வாழலாமே. பாடுபட்டு வருவதை அதற்கும் இதற்கும், அவளுக்கும் கள்ளுக்கும் கொட்டிவிட்டு என்னையும் குழந்தைகளையும் பட்டினி போடுவது நியாயமா? நாகப்பா, உன் மனம் கல்லா கரும்பாறையா? நான் படும் பாட்டை இந்த முருகனே அறிவான்.

நாகப்பன் : ஹ ஹ ஹ! முருகன் அறிவான்! அறிந்தால் அவன் சோறு போடட்டுமே. எனக்கும் சோறு போடட்டுமே.

வீராயி : கடவுள் உன் வாயில் கொண்டு வந்து ஊட்டுமா? கடவுள் மூளை தந்திருக்கிறது: உள்ளம் தந்திருக்கிறது, உடலைத் தந்திருக்கிறது: உழைத்துண்ணலாம். புத்தியிருந்தால் நன்ருக வாழலாம். கடவுள் நமது வினைக்கேற்ற பலனைத் தரும். நல்லது செய்தால் நலம், தீது செய்தால் தீமை வினையும். நமது நினைப்பிற்கும் செயலுக்கும் தக்க பலனைத் தெய்வம் தரும். நம்பு நம்பு.

பையன் : இன்னைக்கி ஒங்க எசமானர் வீட்டுக்கு என்னையும் கூட்டிகிட்டு போயேம்மா விசேஷ நாளாச்சே - அங்கே வந்தால் நெறய சாப்பிடலாமே!

அம்மா : எதுக்கடா நீ வரணும்? உனக்குத்தான் முன்னுடியே நான் எடுத்தாந்திடுவேனே?

நாகப்பன் : கடவுளை....... நம்மையா நம்பச் சொல்லுகிருய். நான் நம்புவதாம். தெய்வமாம் — கடவுளாம் — நன்மையாம் — தீமையாம் — வினையாம் — பலனும். உன் கடவுள் நாளைக் காலை எட்டு மணிக்குச் சுடச்சுடத் தோசையும், இடியாப்பமும், காப்பியும் கொண்டு வரவேண்டும், மதியம் தேயிலைப் புதருக்குச் சோறு கறி குழம்பு மோரு — எல்லாம் கொண்டுவரட்டும்; பார்ப்போம்... பொழுதுபட்டதும் எனக்கு ஒரு புட்டி தரவேண்டும். இரவில் நல்ல சாம்பாரும் சோறும் பாலும் தரவேண்டும். அப்படியானுல் நம்புகிறேன்.

வீராயி : இவ்வளவுதானு? கடவுள் உனக்கு வேட்டி துவைத்துப் போட வேண்டாமா? வேட்டி உடுத்திவிட வேண்டாமா? சோறு

ஊட்ட வேண்டாமா? படுக்கை விரிக்க வேண்டாமா? உன்னை முதுகில் சுமந்து செல்ல வேண்டாமா? உனக்குப் பதிலாகக் கொழுந்து பறிக்க வேண்டாமா? இன்னும் என்னெல்லாம் செய்யச் சொல்லுவாய். உனக்குக் கைகால் இருந்தென்ன?

நாகப்பன் : கழுதை! அதிகப் பிரசங்கிக் கழுதை. கடவுள்தான் எனக்கும் உனக்கும் கைகால் தந்தாரோ! என் அப்பனும் உன் அப்பனும் தந்த கை கால் இவை. ஆணும் பெண்ணும் கூடிப் பெற்ற உடல் இது. இதில் மூளை யிருக்கிறது நினைக்கிறோம். நரம்புள்ளது உழைக்கிறோம்,

வீராயி : அப்படியா? மூளையை நன்றாக நினைத்துப் பார்? நான் உன் மனைவி, நீ என் கணவன், இந்த இரண்டும் நமது குழந்தைகள். இது நம் வீடு. இவை நம் கைகள். நாம் தேயிலைப் புதரில் பாடுபட்டு வெயில் மழை பாராமல் உழைக்கிறோம்; இருவருக்கும் கூலிகிடைக்கிறது: மானமாக பிழைக்கலாம்: அப்படித்தான் பிழைத்தோம். இடையே ஒரு சனியன் வந்து புகுந்து உன் மனதைக் கலைத்தது.

நாகப்பன் : டீ யாரைச் சனியன் என்கிறாய் முத்தம்மாளையா? உன்னைக் கொலை செய்வேன் டாம்.

வீராயி : என்னைக் கொலை செய்யத்தான் கட்டிக் கொண்டாயோ? இதுதான் ஆண்மையோ? உன் கூலிப் பணத்தைக் காலித்தனமாக உதறிவிட்டு. என் கூலிப் பணத்தையும் பறித்துச் சென்று வீட்டைப் பட்டினி போடுவதுதான் ஆண்மையா? பணமில்லாமல் நான் எப்படி இந்தக் குழந்தைகளைப் பாதுகாப்பது?

நாகப்பன் : டாம். கடவுள் இருக்கும்போது உனக்குப் பணம் எதற்கு? ஆண்மையாம் — நியாயமாம் — எனக்கா உபதேசம் செய்கிறாய் — போ — தடிக்கழுதை,

* * *

குடிவெறியில் நாகப்பன் மனைவியை உதைத்துத் தள்ளிக் குழந்தைகளையும் எற்றி மிதித்துவிட்டு, வீட்டில் பாக்கியிருந்த ஒரு பித்தளைப் பாத்திரத்தைத் தூக்கிக் கொண்டு ஓடிப்போனான்.

காலையில் திரும்பிவந்து "டீ கழுதை நீ சொன்னது நியாயந்தான். இனிக் கூலிப் பணத்தை வைத்துக்கொண்டு பிழைப்போம் என்று உள்ளே புகுந்தான், வீட்டில் சட்டி பானை இருந்தன. அவள் எங்கே? குழந்தைகள் எங்கே? அடுப்பங்கரையிலிருந்து ஒரு பூனை "ஞாவ்" என்றது! வீடு விரிச்சென்றிருந்தது. திருமகள் போய்விட்டாள். அவள் விட்ட கண்ணீர் அருவி நிலைப்படியில் சொட்டிக் கிடந்தது.

நாகப்பன் திடுக்கிட்டான். சுற்றிப் பார்த்தான், திகைத்தான். கண்ணீர்விட்டான். ஒன்றுந்தோன்றாமல் உட்கார்ந்து போனான். திடீரென்று அவன் முதுகில் ஓர் அறை விழுந்தது. திரும்பிப் பார்த்தான் — சீனி.

சீனி : மடயா! ஏன் இன்னும் வேலைக்குப் போகாமல் உட்கார்ந்துக் கொண்டிருக்கிறாய்?

நாகப்பன் : ஐயோ ஐயா அவள் எங்கோ போய்விட்டாள். குழந்தைகளைக் காணோம். நான் மகாபாவி! அவளைப் படாதபாடும் படுத்தினேன். என் கொடுமைத் தாங்காமல் எங்கோ போய்விட்டாள் மகராசி. ஐயோ ஊ ஹூ ஹூ.

சீனி : அது போனால் என்னடா முத்தம்மா இருக்கிறாள் - மூதேவி— அழாதேடா.

நாகப்பன் : ஐயோ அவள் கூலியைக் கூடப் பறித்து வீண் செலவு செய்தேன், என் தங்கக் குழந்தைகளைப் பட்டினிப் போட்டேன். குடி வெறியில் அவளை அடித்தேன். பட்டினி போட்டேன் — ஐயோ நான் பாவி....

சீனி : போடா கழுதை வேலைக்கு! அவளாம்— பாவியாம்—

வேலை செய்ய விருப்ப மில்லாவிட்டால் போ வெளியே. டிஸ்மிஸ்.

*　　　*　　　*

நாகப்பன் பாழ் வீட்டைவிட்டுப் பாழ் மனதுடன் வேலைக்குச் சென்றான். அவன் கைகொழுந்து பறிக்க முடியவில்லை. அன்று பாதிக் கூலி தான் கிடைத்தது. அதற்குப் பலகாரம் சாப்பிட்டுவிட்டு முத்தம்மாவிடம் சென்றான். கதவு திறக்கவில்லை. 'ஏ முத்தம்' என்று கெஞ்சினான். முத்தம்மாள் ஜன்னல் வழியாக " தூ நாயே, அவளை நினைத்து அழும் நாய்க்கு முத்தம்மாளிடம் என்ன வேலை? என்ன கொண்டு வந்தாயாம். போடா வெங்கங் கழுதை" என்று துரத்திவிட்டாள்.

நாகப்பனுக்கு உலகம் புளித்தது. " அட கடவுளே " இதுதான் அவன் கடைசி வார்த்தை. அவன் கால்கள் மலைக் கணவாயை நோக்கி ஓடின. மாவலிக் கங்கையின் சுழியில் அவன் உடல் சுழன்றது. பிறகு அவனை யாரும் காணவில்லை. மனப்புயல் அவனை விழுங்கிவிட்டது. மாவலி வெள்ளம் அவனை எங்கோ கொண்டு சென்றது. தாயின் கண்ணீர் வெள்ளம் தகப்பனைத் தண்ணீர் வெள்ளத்தில் ஆழ்த்தியது. தாய் எங்கே?

7. தற்கொலை

மனம் கொதித்தால் மானம் கொதிக்கும், உளம் கொதிக்கும், உயிர் கொதிக்கும். அளவுக்கு மீறிய துயரம் வந்தால் வாழ்க்கை தாங்க முடியாத சுமையாகிவிடுகிறது. துன்பச் சுமையைத் தாங்கி வாழ்வதைவிட உயிரைவிட்டு விடுவதே இன்பம் எனத் தோன்றுகிறது. இந்த உணர்ச்சி, மானமுள்ள மாந்தர் அனைவரிடமும் உண்டு. சாவுக்கு அஞ்சும் மாந்தரும் ஏதாவது ஒரு சமயம் சாவு வராதா என்று துடிப்பதுண்டு. அந்தத் துடிப்பு நாகப்பனுக்கு ஏற்பட்டது. நேற்று வரையில் அவன் சீனிக்கு அடிமையானான், குடித்தான், எதிரிகளை அடித்தான். முத்தம்மா வலையிற் சிக்கித் தனது வீட்டைக் கொள்ளையடித்தான். தரும பத்தினியின் கண்ணீரை வடித்தான். அவள் மனம் கொதிக்

கக் கொதிக்க நடந்தான். அவளைப் பட்டினி போட்டான். அடித்து மிதித்துக் கொல்லவும் பார்த்தான். தான் பெற்ற குழந்தைகளை இரக்கமில்லாமல் எற்றி யெறிந்தான். எல்லாம் கள்வெறியால், காம வெறியால், விபசாரச் சாக்கடையில் விழுந்ததனால். திடீரென்று மனைவி மக்கள் மறைந்ததும் அவன் மனம் திடுக்கிட்டு மாறியது. சூனிய வீட்டில் இருக்க முடியவில்லை. அவன் பாதகப் படலங்கள் மனத்திரையில் சோக நாடகம் புரிந்தன. அடிமைப்பட்டு உழைத்த சீனியும் உதைத்தான். முத்தம்மாளும் அவன் முகத்தில் துப்பினாள். அப்போது தான் தான் அடிமை, அகம்பாவத் திமிருக்கும், காமச் செருக்கிற்கும், கள்ளுக்கும் வேசைக்கும் அடிமை என்பதை நினைத்தான். அன்று தான் மனச்சாட்சி அவனுக்கு மரண தண்டனையளித்தது. இனி உலகில் வாழ முடியாது. வாழக் கூடாதென்று அவன் கணவாயில் இறங்கி மாவலிக் கங்கைச் சுழலில் தன் வாழ்வைக் கரைத்தான். வீறிடும் வெள்ளம் சரும கீதம் பாடியது. அதனோடு ''வீராயி நானும் வந்து விட்டேன், வீராயி, கண்ணே!'' என்ற பல்லவியும் கேட்டது. வீராயி தற்கொலை புரிந்து கொண்டாள் என்றே அவனும் சாவைக் கட்டியணைத்தான்.

வீராயி எங்கே?........எங்கே? கண்டி மலையின் அழகான பசுங் காட்சிகளிடையே அடுக்குப் பாறைகள் செறிந்துள்ளன. கணவாய்களில் ஏற்றமும் இறக்கமுமாகப் பல குத்துப் பாறைகள் அடர்ந்துள்ளன. அவற்றோடு மாவலிக் கங்கை வெள்ளம் ஊழித் தாண்டவமாடிச் செல்லுகிறது. பகலிலேயே அந்தப் பாறைகளூடு நடப்பது கடினம். செருப்பு போட்டும் நடக்க முடியாது, வழுக்கும். வெறுங்காலால் நடந்தால் பாறையின் கத்தி முனைகளும், கற்களும், முட்களும் குத்தும். இரவில் அங்கே யாரும் நடப்பதில்லை. திருடர் கொலைகாரர் கூடத் தடம் பார்த்தே நடப்பர்.

அப்படிப்பட்ட குத்துப் பாறைகளில் ஒரு பெண் இரண்டு குழந்தைகளைச் சுமந்து கொண்டு ஓடுகிருள். வாழ்க்கைச் சுமை மூன்று மடங்காக அவளை அழுத்துகிறது. தன் வாழ்க்கை ஒன்று. குழந்தைகள் வாழ்க்கை இரண்டு. இந்தப் பரிதாபமான வாழ்க்கையைச் சாவின் மடியில் கொண்டு போய்த் தள்ளிவிட்டுப் பேயாகத் திரிந்தாலும் பரவாயில்லை என்றே அந்த உத்தமி நினைத்தாள். எல்லையை மீறி வந்த துயரச் சுமையைச் சாவுச் சுழலில் தொப்பென்று போட்டுவிடவே அவள் விரைந்தாள். பின்னே பார்க்கவில்லை. முன்னே மேடு பள்ளங்களையும் கவனிக்கவில்லை. குழந்தைகளை மட்டும் விழாமல், அழாமல் பார்த்துக் கொண்டு அவள் நடந்தாள். முருகனை தோளில் தூக்கிக் கொண்டு அவள் நடந்தாள். முருகன் அவள் தோளில் உறங்குகிருன். கருப்பாயி இடுப்பில் அரைத் தூக்கமாயிருக்கிருள். அவள் விழித்துக் கொண்டு அம்மா என்னும் போதெல்லாம் ''சும்மாயிரு கண்ணே'' என்று சிறிது கருப்பட்டியை அவள் வாயில் திணித்துச் சமாதானப்படுத்திஞள். ஒரு தடவை வழுக்குப் பாறையில் தடுமாறி விழுந்தாள். முழங்காலில் காயம்பட்டு இரத்தம் பீறியது. குழந்தை முருகன் அதிர்ச்சியால் அழுதான். தன் கால் இரத்தம் வடிவதையும் பாராமல் குழந்தைக்குப் பால் நினைந்தூட்டி அமைதியாக்கி எழுந்து நடந்தாள் தாய். முழங்காலில் இரத்தம் வந்தாலென்ன, மண்டையில் இரத்தம் வந்தாலென்ன. இந்த உடல் இனி யாருக்கு ஏதுக்கு? என்ற வெறுப்புடன் முன் சென்ருள் வீராயி. மனம் ஒடிந்து போனல் உடல் வெறுப்பு எவருக்கும் ஏற்படுகிறது; இப்போது புதர்களூடு. இப்போது காட்டினூடு, இப்போது மலைச் சருவினூடு. இப்போது வெட்டுப் பாறைகளூடு, இப்போது குத்துப் பாறைகளூடு, இப்போது ஏற்றத்தில், இப்போது இறக்கத்தில், இப்போது அபாயத்தில், இப்போது சம தரையில் அவளடிகள் நடந்து சென்றன. ஒரு சமயம் கால் தடுக்கும், முள் தைக்கும், பாம்புகள் காலைச் சுற்றும், நரிகள் ஊளையிட்டுக் குறுக்கே செல்லும், தேள் கொட்டும், எல்லாம் பொறுத்து அச்சத்தை உதறியெறிந்து, குழந்தைகளை மட்டும் விடாமல் வைத்துக் கொண்டு செல்கிருள் அன்னை. வாழ்க்கையின் நரக வேதனையும் மனப் புயலும் அவளை உந்தித் தள்ளின. வீராயி ஒரு செங்குத்தான பாறை மீது நின்று கீழே பார்த்தாள். கங்கை வெள்ளம் பொங்கித் ததும்பி அட்டகாசச் சிரிப்புடன் ஊழி நடம் புரிந்து வந்தது. வா உன் கவலையை ஒழிக்கிறேன், இந்தத் துன்பவுடலுக்கு அமைதியைத் தருகிறேன் என்று அழைத்தது. வீராயி சண்டதாண்டவ மாடிவரும் வெள்ளத்தைக் காண்கிருள். ''இதோ வருகிறேன். ஒழிந்தது கவலை, முருகா'' என்கிருள், தன் முருகனைப் பார்க்கிருள். மகளைப் பார்க்கிருள். முருகன் இப்போது விழித்தெழுந்து அழுகிருன். தாய் முருகனை அணைத்துக் கொண்டு முலைப்பால் தந்து சிறிது ''ராரிரரோ ரா ரா ரோ கண்ணே நீ யாரோ நா ஞரோ'' என்று தாலாட்டுப் பாடிப் பாறையில் படுக்கவைக்கிருள். பாறை உறுத்துகிறது. தனது புடவையில் சிறிது கிழித்து விரித்துப்போர்த்து முருகனைத் தூங்கச் செய்கிருள். திடீரென்று கருப்பாயி விழித்துக் கொண்டு பேசுகிருள்.

குழந்தை : அம்மா எங்கே இருக்கிறோம்?

தாய் : உலக வீட்டில் கண்ணே!

குழந்தை : நமது வீடெங்கே?

தாய்: கண்ணே, நமது கூரைவீடு மிகச் சிறிது. அதில் துக்கமே அதிகம். அதோ பார் ஆகாயம் எவ்வளவு விரிந்திருக்கிறது. அதன் குடை நிழலில் இந்த உலக வீடிருக்கிறது. அதில் நாம் இருக்கிரோம்.

குழந்தை : அம்மா பயமாயிருக்கிறதே?

> உன்னைப் போல மற்றவரையும் நினை என்றுர்கள் பழைய ஞானிகள்- உன்னிடம் கொஞ்சம் பணம் இருந் தாலும், மற்றவர்களை அல்பமாக நினை என்கிருர்கள் புதிய ஞானிகள்,
>
> — ஞானப்பிரகாசம்

தாய் : பயத்தை ஒழிக்கத்தானே யம்மா இங்கே வந்தோம். கருப் பாயி பயப்படாதே. எது வந்தா லும் கவலைப்படாதே. கடவுள் இருக்கிருர். கடவுள் இல்லாவிட் டால் சாவு இருக்கிறது. பயப் படாதே கண்ணே ! இந்த உடம்பு இருக்கு மட்டுந்தானேத் துயரம், பயம், கவலை எல்லாம். இதை ஒழித்துவிடுகிறேன்........

குழந்தை : அம்மா பசிக்கிறதே.

தாய் : கண்ணே இந்தா பாச்சி !

குழந்தை : முருகன் பால் குடிக் கிருன், எனக்குச் சோறு வேண் டும்.

தாய் : கண்ணே விடிந்துதான் சோறு சாப்பிட வேண்டும்.

குழந்தை : விடிந்து நீ சோறு போடுகிருயா ? அப்படியானல் உறங்குகிறேன்.

தாய் : குழந்தாய் கடவுள் உனக் குச் சோறு போடுவார். உலகை நம்பாதே-கடவுளை நம்பு- கவலைப் படாதே. இதுதான் கடைசி வார்த்தை. கருப்பாயி பாறையில் உறங்கினுள். குளிர் வாடை யடித் தது. தனது புடவையில் பாதிக்கு மேல் கிழித்து அவளுக்கும் போர்த் தினுள் தாய். மீதி யிருந்ததைக் கச்சமாகக் கட்டிக் கொண்டாள். எழுந்து நின்ருள்.

''துன்ப உடலே, துயர வாழ்க் கையே ஒழிந்து போங்கள் ! கங் கையம்மா உன் வெள்ளத்தில் என் சுமையைத் தள்ளுகிறேன். இதோ தள்ளுகிறேன். பிறர் வாழச் சகி யாத பொருமை உலகே, பிறர் குடியைக் கெடுக்கும் அகம்பாவ மனித சமுதாயமே விடைபெற்றுக் கொள்ளுகிறேன். ஆசையாக என்னைக் கட்டிக் கொண்டு ஆராத் துயரளித்த நாகப்பா உன்னை மன் னிக்கிறேன். இனி நீ முத்தம்மா ளுடன் நன்ருயிரு. உனக்கும் உனது துன்மார்க்கத்திற்கும் நடுவே நான் இனி நிற்கமாட்டேன். கடவுள் உனக்குச் சன்மார்க்க வழி காட்டட்டும். நான் பெற்ற செல் வங்காள், உங்களை இந்தத் தனிப் பாறையில் விட்டுச் செல்கிறேன். உங்களையும் வெள்ளத்தில் தள்ளி நான் விழுவேன். நான் செய்த பாவம் போதாதென்று சிசுஹத்தி யும் வேண்டாம் என்றே விட்டுச் செல்கிறேன். முருகா என் கண்ணே, முத்தம் ! என் வறண்ட முலையில் மிச்சமுள்ள பாலைக் குடித்துவிடு.

வீராயி ஆசை மகனைக் கட்டித் தழுவிப் பத்துத் தடவை முத்தமிட் டுப் பால் கொடுத்துத் தன் கையால் அணைத்து சோகக் கண்ணீர் விட்டுக் கீழே வைத்தாள். உறங்கும் கருப்பாயியையும் தழுவி யணைத்தாள். தன் ரவிக்கை யைச் கழற்றி அவளுக்குப் போட்டு, படுத்துக்கொள் கண்ணே ! விழித்திருப்பதைவிட உறக்கம் நல்லது. அதைவிடச் சாவு நல்லது. உலகம் சோக நாடக மேடை'' என்று புலம் பினுள். இதோ எழுந்து குதிக்கப் போகிருள். மறுபடி பிள்ளைப் பாசம் இழுக்கிறது. ஐயோ குழந் தைகள் கதி என்னவாகும். கணவ னுக்கு யார் ஆக்கிப் போடுவார் கள். வேசைமோகம் தீர்ந்த பிறகு அவன் நல்ல வழிக்கு வந்தால் கூடி வாழலாமே ஏன் சாக வேண்டும். திரும்பிப் போகலாமா...... என்று பாசம் பின்னே இழுக்கிறது. மீண் டும் சிந்தனைக் கனவில் ஆழ்கிருள். அப்போது கீழிருந்து ''வீராயி வீராயி'' ஆத்தா அம்மா வீராயி. என் கண்ணே என்ற குரல் கேட் கிறது. ஒரு உடல் மிதந்து சாவின் அலைகளுடன் போராடுகிறது. வீராயி தன் கணவன் குரலை அறிந் தாள். ''நாகப்பா இதோ வரு

கிறேன்'' என்று ஒரு சீட்டில் ஏதோ எழுதி வைத்துக் குதித்தாள். அதே இடத்தில் நாகப்பன் தத்தளித்தான். ''ஹா வீராயி — ஹா நாகப்பா'' ஏ கண்ணே! ஹே நாதா'' என்ற சத்தம் கேட்டது. நாகப்பன் வீராயியைத் தழுவிக் கொண்டான். வீராயி நாகப்பனைத் தழுவிக் கொண்டாள். ஊழி வெள்ளம் இந்தக் காதலரின் துன்ப வாழ்வை முகாரி ராகத்தில் பாடிப் பாய்ந்தது.....கண்டி மலை திகைத்து நின்றது. அகண்ட வானம் திகைத்து நின்றது! இரவும் வெள்ளத்தின் சோக ராகத்தைக் கேட்டுத் திகைத்து நின்றது. காலமும் விரைவாகக் காலையை நோக்கிச் சென்றது.

8. அனாதைக் குழந்தைகள்

இருள் கரைந்தது; நட்சத்திர யாத்திரை முடிந்தது. வானம் வெளுத்தது, அருணப் பொன்னகை பூத்தது; சூரியன் தயங்கித் தயங்கி மெல்ல எழுந்து தன் கதிர்க்கரங்களை விரித்து இரண்டு அனாதைக் குழந்தைகளைத் தழுவிக் கொண்டான். மந்த மாருதம் அந்தக் குழந்தைகளைத் தட்டி யெழுப்பியது. ''அம்மா என்றழுதான் முருகன்'' ''அம்மா எங்கே! காணோம்'' — ''கடவுள் உண்டு கவலைப் படாதே'' என்ற சொல்லை நினைத்துக் கொண்டே கருப்பாயி எழுந்து முருகனைத் தட்டிக் கொடுத்து மடியில் வைத்துக் கொண்டாள். முருகன் மீண்டும் வீறிட்டழுதான் — ''இந்தா பாச்சி முருகா அழாதே'' என்று மூன்று வயது அக்காள் தன் மார்பைத் தந்தாள். குழந்தை அதை நக்கிப் பார்த்து மீண்டும் அழுதது. கருப்பாயிருக்கும் பசி தாங்கவில்லை. அம்மா எங்கே! அப்பா எங்கே? விடெங்கே ஊரெங்கே — எங்கே வந்தோம் — எப்படி வந்தோம்—ஒன்றுந் தெரியவில்லை. இரவில் தூக்க மயக்கத்தில் நடந்ததெல்லாம் கனவு போல் ஓடிப் போயின. ''கடவுள் இருக்கிறார், கவலைப் படாதே'' என்ற தாய் மொழிதான் நினைவிருந்தது. அகண்ட வீடான உலகில் தனிப் பாதையில் இந்த அனாதைக் குழந்தைகள் திகைத்து நின்றன. மூன்றரை வயதுக் குழந்தை, ஆறு மாதக் குழந்தையைத் தாய் போல் அணைத்து ஆறுதல் கூறுகிறது. கீழே கங்கை வெள்ளம் இன்னும் சோக ராகம் பாடிச் செல்லுகிறது. அனாத ரக்ஷகனான ஆண்டவன் இந்தக் குழந்தைகளை எப்படி நடத்துகிறானோ பார்ப்போம்.

* * *

கருப்பாயி உடலில் தாயின் ரவிக்கைத் துணி இருக்கிறது. முருகன் உடலில் அதே துணி போர்த்தப்பட்டுள்ளது. தாயின் அடையாளம் அவையே. கருப்பாயி அம்மா அம்மா அம்மா என்று அலறினாள். அம்மா அம்மா அம்மா என்று மலை—வானம் எதிரொலித்தது.

''அம்மா எங்கிருக்கிறாய்.''

அம்மா எங்கிருக்கிறாய்.

''அம்மா வா — இங்கே வா.''

அம்மா வா — இங்கே வா.

''ஐயோ அம்மா.''

ஐயோ அம்மா.

''அம்மா பசி — வா வா.''

அம்மா பசி — வா வா.

இந்த எதிரொலியூடு ஆற்றுப் பாட்டும், காற்றுப் பாட்டும் மர்ம கீதம் பாடிச் சென்றன. வா வா என்று உலகன்னை இக்குழந்தைகளை அழைத்தாள். வேறு வழியில்லாமல் கருப்பாயி முருகனைத் தூக்கிக்கொண்டு, மலைக்காட்டில் தளர் நடை நடந்தாள். குழந்தை களைத்துப் போனான். அங்கே ஒரு ரப்பர் தோட்டம் தெரிந்தது. அதனுட் புகுந்தாள். சலசலவென்று சருகுகளுக்கிடையே ஒரு பாம்பு தவழ்ந்து வந்தது. கருப்பாயி முருகனை இறுகப் பிடித்துக்கொண்டு பயந்து ஓடினாள். பயம் அவளுக்கு புதிய பலம் அளித்தது. முன் விரைந்தாள். அங்கே ஒருவன் ரப்பர் பட்டையறுத்துப் பால் வடித்துக் கொண்டிருந்தான். தாய்ப்

பால் இல்லாத குழந்தை ரப்பர் பாலைப் பார்த்தது.

கருப்பாயி: ஐயா, இந்தக் குழந்தைக்கு இந்தப் பாலைத் தாருங்கோ—பசி.

ஆள்: ஹ ஹ — தங்கமே ரப்பர் பாலைச் சாப்பிடக்கூடாதே. இதன் அம்மா எங்கே?

கருப்பாயி: அம்மா எங்கோ போனுள். செத்துப் போனுள். நாங்கள் அனுதி. இவன் என் தம்பி.

ஆள்: அப்படியா கண்மணிகளா—எங்கே போகிறீர்கள்?

கருப்பாயி: எங்கே போவது? பசிக்கிறது — சோறு கிடைக்கிற இடத்திற்குப் போவோம் — ஐயா நீங்கள் எனக்குக் கொஞ்சம் சோறு தாருங்களேன். இந்தக் குழந்தைக்குக் கொஞ்சம் கஞ்சி தாருங்களேன் — தரமாட்டீர்களா? தர முடியாதென்ருல் நாங்கள் வேறெங்காவது போகிருேம் கோவித்துக்கொள்ள வேண்டாம் ஐயா — எங்களுக்கு வேறு துணையில்லை — நாங்கள் அனுதைக் குழந்தைகள்.

பாலெடுக்கும் ஆள் இந்த இரண்டு குழந்தைகளையும்பார்த்து ஏதோ கனவு கண்டு நின்ருன். அவன் மனம் இளகியது. இரண்டு குழந்தைகளையும் இடுப்பில் எடுத்துக்கொண்டு ரப்பர் பாலையும் கையில் எடுத்துக்கொண்டு புறப்பட்டான். முருகன் ரப்பர் பாலைக் குடிக்கத் துள்ளினுன். கருப்பாயி கீழே இறங்கி அவனை எடுத்து மார்பில் அணைத்துக் கொண்டு — ''வா முருகா, இந்த நல்ல ஐயா நல்ல பால் தருவார்'' — என்று அழைத்துச் சென்ருள். ஆள் மீண்டும் குழந்தைகளைச் சுமந்து கொண்டு தன் மரக் குடிலுக்குள் புகுந்தான். குடில் நிரம்பக் குழந்தைகள் இருந்தன. சுமார் பத்துக் குழந்தைகள் ஓடி விளையாடிச் சத்தமிட்டுக் குதித்துக் கும்மாளம் போட்டன. ''ஏ குட்டிகளா சும்மா இருக்கிறீர்களா, சூடு போடட்டுமா'' என்ருெரு பெண் கரடிக் குரலெடுத்து உருமினுள். குட்டிகள் ஹோ ஹோ என்று சத்தமிட்டுச் சிரித்தன - பெண் கரடி ஒரு பெரிய விறகுக் கட்டையை எடுத்து வந்து, ''போடு மண்டையிலே'' என்று மிரட்டி ஓங்கியது. அதைக் கண்ட கருப்பாயி ''ஆ அம்மா'' என்று அலறினுள். முருகன் பயந்து நடுங்கி குவா குவா என்று கத்தினுன். கரடியின் கண் புதிய குழந்தைகளைப் பார்த்தது.

கரடி: இந்தப் பீடைகள் எங்கிருந்து வந்தன?

ஆள்: கோபம் வேண்டாம் அம்மா! அனுதைக் குழந்தைகள் காட்டில் பசியால் அழுதன. நானே எடுத்து வந்தேன். பசி தணித்து அனுப்புவோம்.

கரடியம்மாள் கண் சிவந்தது; ''பசியா? நீ சம்பாதிப்பது என் வயிற்றுக்கே காணுது; பத்துக் குழந்தைகளை வேறு பெற்று வைத்தாய் — இந்த வானரங்கள் பண்ணும் சேட்டையை அடக்க முடியவில்லை; இவர்களுக்கு சோறு போடுவதே கஷ்டமாயிருக்கிறது - இந்த லட்சணத்தில் இன்னும் இரண்டு குழந்தைகளா.... ஹா....

ஆள்: இன்னும் இரண்டு குழந்தைகள் நமக்குப் பிறந்தால்......

கரடி: பேச்சைப் பார் பேச்சு. இருக்கிற குழந்தைகள் போதும். இன்னும் என் இடுப்பை ஒடிக்காதே. போதும் போதும் குடித்தனத்தில் இடிபடுகிறது, இந்த வானரங்களை நீயேகட்டியழு. நான் எங்காவது போகிறேன்.

ஆள்: கோபம் வேண்டாம் அம்மா — ஏதோ நாம் உண்ணும் உணவில் சிறிது.........

கரடி: சிறிதாம் பெரிதாம் — கொண்டு போ வெளியே பீடைகளை.

ஆள்: அம்மா அறியாக் குழந்தைகள் உன் தாய் மனம் இரங்காதா?

கரடி: அடே உன் வைப்பாட்டி பிள்ளைகளுக்கு நானு சமைத்துப் போடுவது....

(தொடரும்)

மாயச் சொப்பு!

அந்தக் காலத்து ராஜ்யங்களில் ஜோதிபுரிதான் தலை சிறந்து விளங்கியது. ஜோதிபுரி அரசன் வீரசிம்மன் என்றால் பாவலர் முதல் பாமரர்வரை போற்றிப் புகழ்வார்கள். வீரசிம்மனுக்கு இரண்டு குமாரர்கள் இருந்தார்கள். மூத்தவன் பெயர் குணாளன். இளையவன் பெயர் கோவலன். குணாளன் பேராசை உள்ளவன். ஒழுக்கம் கெட்டவன். கோவலனோ மிகவும் நல்லவன். பிறருக்கு உதவி செய்யும் அரிய குணம் படைத்தவன்.

வீரசிம்மன் இறந்தபோது தன் இரு குமாரர்களுக்குமே ராஜ்யத்தைப் பிரித்துக் கொடுத்துவிட்டுச் சென்றான். குணாளன் தானே இராஜ்யம் முழுவதையும் அடைய வேண்டும் என்ற பேராசையினால் தன் தம்பி கோவலனை கொல்லவும் சதி செய்தான். தினமும் இரவில் அருந்தும் பாலில் யாருக்கும் தெரியாமல் ஒரு நாள் விஷம் கலந்து வைத்தான். ஆனால் ஒரு பூனை பாலைக் கொட்டிவிட்டு—அதைக் குடித்து இறந்து விட்டதால் நல்லகாலமாகப் போயிற்று! இல்லாவிடில் கோவலன் இறந்திருப்பான்.

கொஞ்சக் காலத்துக்குப் பிறகு இருவரும் திருமணம் செய்து கொண்டார்கள். அவர்களிருவர்களின் மனைவிகளில் கோவலனுடைய மனைவி நல்ல குணவதி. ஆனால் குணாளனுடைய மனைவியோ — அவனைப் போலவே தீய குணமும் — பொறாமையும் உடையவள். கோவலனும் அவன் மனைவியும் மிகவும் சந்தோஷமாக இருப்பது கண்டு பொறாமையடைந்த அவள் குணாளனுக்கு துர்ப்புத்தி புகட்டினாள். கோவலனையும் அவன் மனைவியையும் காட்டுக்கு ஓட்டிவிடும்படி அடிக்கடி கூறினாள். குணாளனும் இராஜ்ஜியத்துக்கு ஆசைப்பட்டு தன் தம்பியை வஞ்சித்து — காட்டுக்கு அனுப்பிவிட்டான். கோவலன் ராஜ்யத்தை தானே தன்னுடைய நாட்டோடு சேர்த்துக் கொண்டான்.

கோவலனும் அவன் மனைவியும் காட்டில் எவ்வளவோ கஷ்டங்களை அடைந்தனர். முடிவில் ஒரு பாழடைந்த மண்டபத்தில் தங்கினர்.

காட்டில் இருவரும் தினமும் விறகு வெட்டி கிராமங்களில் விற்று அந்தப் பாழ் மண்ட பத்திலேயே வாழ்ந்து வந்தனர். ஒரு நாள் கோவலனின் மனைவி சக்கரைப் பொங்கல் செய்து கோவலன் விறகு எடுத்துக் கொண்டு செல்லும்போது கொடுத்தனுப்பினுள். விறகுக் கட்டை தலையில் சுமந்துக்கொண்டு அவன் செல்லும் வழியில் மிகவும் களைப் புற்றதால் ஒரு குளத்தின் ஓரம் இருந்த மரத்தின் அடியில் உட் கார்ந்தான். விறகுக் கட்டையும்— சக்கரைப் பொங்கல் மூட்டையை யும் மரத்தினடியில் வைத்து விட்டுக் களைப்பினுல் தூங்க ஆரம்பித் தான்.

அந்தக் குளத்தில் குளிப்பதற் காக தினமும் தேவகன்னிகைகள் மூன்று பேர் வருவது வழக்கம். அன்றும் அது போல வந்தவர்கள் கோவலனையும் — விறகுக் கட்டையும் — சக்கரைப் பொங்கல் மூட்டையையும் கவனித்து விட்டார்கள். சக்கரைப் பொங்கலின் வாசனை மூக்கைத் துளைத்தது. மூன்று தேவகன்னிகைகளும் அதை எடுத்து சாப்பிட்டு விட்டு அந்த மூட்டையில் ஒரு தங்கச் சொப்பை வைத்துவிட்டுப் போய்விட்டார்கள்.

கோவலன் தூக்கத்திலிருந்து விடுபட்ட போது பசி அவன் வயிற்றைக் கிள்ளியது. குளத்தில் இறங்கி முகம், கை, கால் சுத்தம் செய்து கொண்டு மூட்டையை அவிழ்த்தான். மூட்டைக்குள்ளே சக்கரைப் பொங்கலைக் காணும். அதற்குப் பதில் தங்கச் சொப்புதான் இருந்தது. கோவலன் மிகவும் ஆச்சரியத்துடன் அந்தச் சொப்பைத் திறந்துப் பார்த்தான். சொப்பைத் திறந்ததுமே அதற்குள்ளிருந்து கரும் புகை குபு குபு வென்று வெளியே வந்தது. பெரிய பூதம் ஒன்று இரு கைகளையும் கட்டிக் கொண்டு பணிவோடு நின்றது. "எஜமானே! இந்த மாயச் சொப்பை வைத்திருப்பவர்களுக்கு நான் அடிமை. நீங்கள் என்ன கட்டளையிட்டாலும் உடனே நிறைவேற்றி விடுவேன்"— என்று கூறியது. உடனே கோவலன் "ஏ பூதமே! இந்தக் காட்டை ஒரு பெரிய பட்டணமாக்கு. ஒரு அரண்மனையும் அதிலே உண்டாக்கி என்னையும் — என் மனைவியையும் அதிலே கொண்டுவை!"— என்ருன்.

என்ன ஆச்சரியம்? கண்மூடிக் கண் திறப்பதற்குள் காடு நாடாகி விட்டது. மிகப் பெரிய அரண்மனையில் கோவலன் தன் ராஜ உடை

களுடன் அவன் மனைவியின் அருகில் நின்றுகொண்டிருந்தான். அன்று முதல் கோவலன் தன்னுடைய நகரை நல்ல முறையில் ஆண்டு மனைவியோடு சுகமாய் வாழ்ந்துவந்தான்.

குணளன் — கோவலனை நாட்டை விட்டுக் காட்டுக்கு ஓட்டிவிட்ட பிறகு ஜனங்களை தன் இஷ்டப்படியெல்லாம் அதிகாரம் செய்தான். ஆகையால் அவன் கொடுமைகள் நாளுக்கு நாள் அதிகமாகவே மக்கள் அடுத்த நாட்டு அரசன் பூபாலனிடம் முறையிட்டனர். பூபாலன் குணளனை ஒழித்துக்கட்ட தக்க சமயம் எதிர்பார்த்துக் கொண்டிருந்ததால் அவன் மீது யுத்தம் கொடுத்தான். எதிர்பாராதவிதமாக யுத்தத்தை சமாளிக்க முடியாததால் — குணளன் தன் மனைவியோடு காட்டை நோக்கி ஓடிவிட்டான். ஆனால் குணளன் தேடிப்போன காட்டைக் காணவில்லை. ஒரு பெரிய நகரமே காணப்பட்டது. இதுவரை இந்நகரைப் பற்றி ஒன்றும் அவனுக்குத் தெரியாததால் அந்நகர் வாசி ஒருவனிடம் அதைப்பற்றி விசாரித்தான். அதற்கு அவன் "ஐயா இந்நகருக்கு 'பாலிகா நகர்'' என்று பெயர். இதை ஆளும் அரசர் மிகவும் நல்லவர். கோவலன் என்று பெயர்'' — என்றான். அதைக் கேட்ட குணளனின் மனைவி "இந்த அரசரிடம் சென்று ஏதாவது வேலை கேளுங்கள் நம் நிலையைச் சொல்லி'' — என்றாள். அவன் மனைவி இப்போது எவ்வளவோ மாறிவிட்டாள். அவள் யோசனையின்படியே அரண்மனையை அடைந்தான் குணளன்.

கோவலன் குணளனை நோக்கினான். குணளன் கோவலனை நோக்கினான். மறு விநாடியே "அண்ணா! என்று கூவிய வாறே குணளனை அணைத்துக் கொண்டான் கோவலன்.

குணளன் கண்களில் நீர் கசிய "தம்பி கோவலா! என்னை மன்னித்து விடு. உன்னை விட வயதில் பெரியவனான யான் பொறாமை — பேராசைப் பேய்களுக்கு அடிமைப்பட்டு அநீதி இழைத்துவிட்டேன். உண்மையில் குணக் குன்று நீதான்'' என்று கதறினான். கோவலன் "அண்ணா! நடந்ததை மறந்து விடுங்கள்!'' — என்று ஆறுதல் கூறினான்.

அன்று முதல் குணளனும் கோவலனும் இணை பிரியாமல் — நீதிதவறாமல் ஆண்டுவந்தனர் ஒரே ராஜ்யத்தை. குணளனின் மனைவியும் நல்லவளாகி விட்டாள்.

அதிசயம்

உசிலம்பட்டிக்கு அருகேயுள்ள பாலக் கோம்பை கிராமத்தில் பொதுமக்களை ஒரு அதிசயமான பறவை தாக்கி வருகிறதாம். வீதியில் செல்வோரை கூர்மையான தன் நகங்களாலும் அலகினாலும் பலமாகத் தாக்குகிறதாம். கிராம வாசிகள் இப்போது கீழே பார்த்துக் கொண்டு நடக்காமல் அண்ணாந்து ஆகாயத்தைப் பார்த்தவாறே நடக்கிறார்களாம். இப்பறவை 'கழுகை' விடப் பெரியதாக இருக்கிறது. இதைச் சுட்டுக் கொல்லும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர் ஜனங்கள்!

* * *

மண்ணெண்ணெய் விளக்கு மூலம் இயங்கக்கூடிய ஒரு ரேடியோவை அகில இந்திய ரேடியோவின் ஆராய்ச்சிப் பிரிவினர் கண்டு பிடித்துள்ளார்களாம். தினமும் 3 மணி நேரம் வீதம் ஒரு மாதம் ரேடியோ கேட்டால் அதற்கு மூன்று ரூபாய்தான் செலவாகுமாம். இதை கிராம வாசிகளெல்லோரும்—மின்சார வசதியில்லாத போதும் — அனுபவிக்க முடியும் அல்லவா?

* * *

சமயபுரத்திற்கு அருகே உள்ள மருதூரில் ஜில்லா போர்டு தேர்தல் நடைபெற்றபோது 105 வயதுள்ள ஒரு கிழவி நடந்தே ஓட்டுச் சாவடிக்கு வந்து காங்கிரஸுக்கு ஓட்டுப் போட்டாளாம். இந்தக் காட்சியைக் கண்டு எல்லோரும் ஆச்சரியப்பட்டனராம்!

* * *

பப்பலோவில் டௌக்லஸ் ஸ்மித் என்பவர் இருந்தார். இவரிடம் கறுப்பு முயல் ஒன்று இருந்தது. அக் கறுப்பு முயலுக்கு 46 குட்டிகள் பிறந்தன. அதில் ஆச்சரியம் என்னவென்றால் 46 குட்டிகளும் வெள்ளைக் குட்டிகளே!

நியூஜீலந்தில் ராபின்ஸ்ஸன் என்று ஒருவர் இருந்தார். அவர் 1928-ல் ஒருவித பீன்ஸ் பயிரிட்டார். அவர் பயிரிட்ட பீன்ஸ் சுரைக்காய் மாதிரி காய்க்க ஆரம்பித்தது. ஒவ்வொரு பீன்ஸும் ஆறு அடிக்கு மேல் நீளமும் 17 அங்குலம் சுற்றளவும் இருந்ததாம். ஒரு வேளை புடலங்காயாக இருக்குமோ?

* * *

முன்பு எல்லாம் டென்மார்க்கில் எவனாவது ஒரு ஏழை சிவப்பு உடையுடன் வீதியில் நடந்தால் உடனே அவனைக் கைது செய்து விடுவார்களாம். அரசர் — அரச குடும்பத்தினர்—அரசாங்கப் பதவியில் இருப்பவர் பெரும் செல்வந்தர் இவர்களே சிவப்பு உடை அணியலாமாம்! எப்படி இந்த விநோத சட்டம்?

* * *

'கொலம்பைட்' சத்துள்ள ஒரு அபூர்வ கனிப் பொருள் தென் மலேயாவில் ஜோஹோர் மாகாணத்திலுள்ள ஒரு சிறு இடத்தில் இருப்பதாகவும் இதைக் கண்டு பிடிப்பவருக்கு அமெரிக்கா — 100 சதவிகித போனஸ் தருவதாகவும் அறிவித்துள்ளார்கள். மும்முரமாக எல்லோரும் மண்ணைத் தோண்டுகின்றனராம் 'கொலம்பைட்' பொருளைக் காண.

* * *

பறக்கும் தட்டைப்பற்றி எவ்வளவோ செய்திகள் வெளிவந்துள்ளது அல்லவா? ஆஸ்த்திரேலியாவில் உள்ள ஒருவர் அதை போட்டோவும் பிடித்து இருக்கிறாராம். தேநீர் கோப்பையைக் கவிழ்த்தால் எப்படி இருக்குமோ அப்படி இருக்கிறதாம் அதன் போட்டோ!

* * *

சார்லட்டில் ஒருவர் வீடு கட்டினார். இதில் அதிசயம் என்னவென்றால் அந்த வீட்டை முழுவதும் சீமைக் கரியினால் கட்டினாராம்.

நாட்டுக்கு வேண்டியது செல்வம்
வீட்டுக்கு வேண்டியது

தயாரிப்பாளர் : செல்வம் இண்டஸ்டிரியல்ஸ், சென்னை-21.



பார்வையின்

கிருஷ்ணமூர்த்திக்குத் தூக்கமே வரவில்லை. எப்படி யெப்படியோ புரண்டு படுத்துப் பார்த்தான். கண்களை இறுக மூடி, அறுத்துக்கொண்டு செல்லும் மனதை இழுத்துப் பிடித்துத் தூங்க முயன்றான். ஆனாலும் முடியவில்லை. மேஜை மீது வைத்திருந்த ரேடியம் டைம்பீஸ் பன்னிரண்டரை மணியைக் காட்டிக் கொண்டிருந்தது. தினமும் இவ்வளவு நேரத்திற்கு இரண்டு தூக்கம் போட்டிருப்பானே! இன்று அவனுக்கு என்ன வந்தது?

பணக் கவலையா? மாதம் இருநூறு ரூபாய் சுளையாக சம்பாதித்துக் கொண்டு சென்னையில் ஒரு வாடகை ரூமில் வசித்து வரும் ஒண்டிப் பிரம்மச்சாரியான அவனுக்கு பணக் கவலை எங்கிருந்து வரும்? குடும்பக்கவலையோ என்ன என்பதே அவனுக்குத் தெரியாது. உடல் நோய் ஏதாவது அவனை வருத்துகிறதோ? அப்படியும் இருக்க முடியாது. ஏனென்றால் அதற்கான அறிகுறிகள்—முக்கல், முனகல் — ஒன்றும் அவனிடமிருந்து வெளிப்படவில்லை.

பின் என்னதான் அவன் மனதை அப்படி அலைக்கழித்துக் கொண்டிருக்கிறது?

காலையில் ஆபீஸுக்குச் செல்லும்பொழுது பஸ்ஸிலே பார்த்த அந்தப் பெண்!

ஆஹா! நினைத்தாலும் அவன் உடம்பு புளகித்தது. அவனும் இதுவரை எவ்வளவோ பெண்களைப் பார்த்திருக்கிறான். அவர்களில் ஒருவராவது இவளைப் போல் அவன் மனதிலே ஒரு கிளுகிளுப்பை உண்டாக்கியதில்லை.

அந்த அழகு வடிவமே அவன் மனதை ஆகர்ஷித்துக் கொண்டு அவனை 'என்னவோ' செய்துக் கொண்டிருந்தது.

வழக்கம்போல் காலை 9 மணிக்கு 23-ம் நம்பர் பஸ்ஸுக்காக லஸ் முனையில் நின்று கொண்டிருந்தான் கிருஷ்ணமூர்த்தி. அகஸ்மாத்தாக அவன் பார்வை சில கஜ தூரங்களுக்கப்பால் நின்று கொண்டிருந்த உருவத்தின் மீது பட்டதும் இனமறியாத இன்பஊற்று அவன் உடல் முழுதும் பெருக்கெடுத்தது. அவன் கண்கள் அந்த செளந்தர்ய பிம்பத்தைக் கண்டு தம் வேலையை மறந்து சலனமற்று நின்று விட்டன.

அப்பொழுதுதான் அவன் சற்றும் எதிர்பாராத ஒரு நிகழ்ச்சி நடந்தது.

அவள் திரும்பி அவனைப் பார்த்தாள்! ஒரு நிமிஷம் பார்த்துக் கொண்டே இருந்தாள்!! அவனும் தன்னையே பார்த்துக் கொண்டிருக்கிறான் என்ற அறிவு உதித்ததுமோ என்னவோ வெட்கம் அடைந்தவள் போல் முகத்தைத் திருப்பிக்கொண்டாள்; அப்போது அவள் உதட்டோரத்திலே புன்ன

கையின் சாயல் தோன்றியது போலிருந்தது கிருஷ்ண மூர்த்திக்கு!

பார்வை

அவனும் இந்த நான்கு வருஷங்களாக சென்னை பஸ்களில் பிரயாணம் செய்துக் கொண்டுதான் இருக்கிறான். எவ்வளவோ நூற்றுக்கணக்கான பெண்களைப் பார்த்திருக்கிறான். ஆனால் ஒருவராவது தப்பித் தவறிக்கூட அவனைத்திரும்பிப் பார்த்ததில்லை.

அப்படியிருக்க இன்று அந்தப் பெண் அவனை அப்படி விழுங்கி விடுவதுபோல் பார்த்ததோடு மட்டுமல்லாமல் கொஞ்சம் சிரிக்கவும் சிரித்தாள் என்றால் அது அவன் வாழ்க்கையிலேயே ஒரு மகத்தான நாள் என்பதில் என்ன சந்தேகம்? அந்தக்கணமே அவன் உள்ளத்தில் காதல் வித்து ஊன்றப்பட்டது.

என்னென்னவோ நம்பர்களைத் தாங்கிய பஸ்கள் வந்து கொண்டும் போய்க் கொண்டும் இருந்தன. ஆனால் அவன் எதிர்பார்த்துக் கொண்டிருந்த 23-ம் நம்பர் பஸ் மாத்திரம் வரவே இல்லை. வந்த பஸ் ஒவ்வொன்றிலும் ஜனங்கள் முண்டி அடித்து ஏறிக் கொண்டும் இறங்கிக் கொண்டும் இருந்தனர்.

• ஆனால் அந்த அழகி மாத்திரம் தான் நின்ற இடத்தை விட்டு நகரவே இல்லை. ஏன்? அவள் எந்த பஸ்ஸுக்காகக் காத்துக் கொண்டிருக்கிறாள்? ஒரு சமயம் அவளும் 23-ம் நம்பருக்காகத் தான் காத்துக் கொண்டிருக்கிறாளோ? அந்த நினைவே அவன் இதயத்தில் சந்தோஷ அலைகளை எழுப்பியது.

மறுகணமே மற்றோர் எண்ணம். அவள் எந்த பஸ்ஸுக்காகவும் காத்து நிற்கவில்லை. அவனைப் பார்த்த பிறகு அவள் தான் வந்த காரியத்தையே மறந்துவிட்டாள். அவன் எந்த பஸ்ஸில் ஏறினாலும் அதிலே ஏறத் தயாராக நிற்கிறாள் என்று நினைத்தான். இல்லாவிட்டால் அவள் ஏன் அடிக்கொருதரம் அப்படித் திரும்பித் திரும்பி அவனைப் பார்க்க வேண்டும்?

''கிருஷ்ணமூர்த்தி! நீ அதிருஷ்டக்காரனடா. இல்லாவிட்டால் இப்படி எதிர்பாராதவிதமாக ஒரு ஆரணங்கு உன் வலையில் வந்து விழுவாளா?'' என்று தன்னைத் தானே மெச்சிக்கொண்டான்.

பஸ்ஸோ வருவதாகக் காணோம்!

கிருஷ்ணமூர்த்தியின் காதல் கண்கள் அந்த எழிலரசியின் வனப்பை ஆராய்வதில் ஈடுபட்டன.

ஒட்டைச் சிவிங்கிபோல் உயரமும் அல்ல; பெருச்சாளி போல் குட்டையும் அல்ல. நடுத்தர உயரம். காண்டாமிருகம் போல் பருமனும் அல்ல; வேட்டை நாய் போல் ஒல்லியும் அல்ல, இடைத்தரமான உடற்கட்டு. ரோஜா போன்ற சிவப்பும் அல்ல; தார் போன்ற கருப்புமல்ல. மாநிறம்.

ஹேமா ஆனந்த தீர்த்தன்

ஆனால் முகத்திலே அலாதியான களை. குறு குறுவென்று சதா வட்டமிடும் கண்கள்; புன்னகை மறையா அழகிய மெல்லிய உதடுகள்; சிரிக்கும்போது பளிச்சென ஒளி வீசும் முத்துப் போன்ற பாங்கான பல்வரிசை (இதை அவன் கவனிப்பதற்கு இதுவரை சந்தர்ப்பம் ஏற்படாவிட்டாலும், அப்படித்தான் இருந்தாக வேண்டும் என்று அவன் உள்ளுணர்வு அவனுக்குக் கூறியது.) இடது கையிலே ஒரு ரிஸ்ட் வாட்ச். மழ மழவென்று வாளிப்பாயிருந்த அவளது மென்கரத்தைச் சுற்றியிருந்த கடியாரத்தின் 'ஸ்ட்ராப்' எவ்வளவு அழகாக இருக்கிறது! வலது கையிலே இரு பொன்வளையல்கள்.

இரட்டைப் பின்னல்; அவற்றிலே ஒன்று தோள் மேல் விழுந்து மார் மேல் புரண்டது. மற்றொன்று கருநாகம் போல் முதுகின் மேல் ஒய்யாரமாகத் தொடை வரையிலும் தொங்கியது. இரு பின்னல்களின் அஸ்திவாரத்திலே இரண்டு வெள்ளை ரோஜாக்கள் மந்தகாசத்துடன் சொருகப்பட்டிருந்தன.

அவள் அணிந்திருந்த உடை! அவளால் அவை அழகு பெற்றனவா அன்றி அவைகளால் அவள் வனப்பெய்தினளா? நிர்ணயிப்பது கஷ்டம் தான். சல்லடை போன்ற மென்மையான மஞ்சள் ஜார்ஜெட் புடவை உடலோடு ஒட்டிக் கொண்டிருந்தது; உள் பாவாடையில் செய்யப்பட்டிருந்த 'எம்பிராய்டரி' வேலைத்திறனை எடுத்துக் காட்டுவதற்காகவே அப்புடவையை உடுத்தியிருந்தாள் போலும். பளபளவென்று பிரகாசிக்கும் கருநீல வெல்வெட் ரவிக்கை! அதை அவள் அணிந்திருந்தாளா அல்லது உடம்போடு சேர்த்துத் தைத்திருந்தார்களா? ரவிக்கையின் வலது தோள்பட்டையிலே ஜிகினாவில் தைக்கப்பட்ட சக்கரம்; கழுத்தில் அதிக ஆடம்பரமில்லாமல் ஒரு 'நெக்லேஸ்' இரண்டு காதுகளிலும் காலணா அளவுக்கு ஜக ஜக வென்று பிரகாசிக்கும் என்னவோ ஒரு ஆபரணம்—அதன் பெயர் அவனுக்குத் தெரியவில்லை.

அவனை அவளைப்பற்றிய நினைவிலிருந்து விடுவிப்பதற்காகவே போல் 23-ம் நம்பர் பஸ் வந்து நின்றது. பஸ்ஸை நோக்கி அவன் ஓடினான். அவளும் ஓடினாள். இருவரும் ஏறினார்கள். அந்த அவசரத்திலும் அவள் அவன் மீது தன் கடைக்கண் பார்வையை வீசி அவன் உடலைப் புல்லரிக்கச் செய்தாள்.

பெண்களுக்காக ஒதுக்கப்பட்ட கடைசி சீட்டிலே ஒரே ஒரு இடம் காலியாக இருந்தது. அதிலே அவள் உட்கார்ந்து விட்டாள். கிருஷ்ணமூர்த்தி அங்கேயே பக்கத்தில் எங்காவது இடம் இருக்கிறதா என்று பார்த்தான். அதிர்ஷ்டத்தில் துரதிருஷ்டம்! ஒரு இடம் கூட காலியிருக்கவில்லை. பக்கவாட்டமாக அமைத்திருக்கும் நீண்ட சீட்டிலே கோடியில் டிரைவருக்குப் பக்கத்தில் ஒரு ஆசனம் காலியாக இருந்தது. அங்கே போய் உட்கார்ந்துக் கொண்டான்.

அங்கிருந்து அவளை நன்றாகப் பார்க்க முடிந்தது. அதில் அவனுக்குத் திருப்தி. அடிக்கடி அவளும் அவனைப் பார்ப்பதையும் அவன் பார்க்கிறானென்று தெரிந்ததும் தன் பார்வையை வேறு புறம் திருப்பிக்கொள்வதையும் கிருஷ்ணமூர்த்தி கவனிக்கத் தவறவில்லை.

ஆனால் அவன் சந்தோஷம் அல்ப திருப்தியாக முடிந்தது. ஆழ்வார்பேட்டையில் பஸ் வந்து நின்றதும் தட தட வென்று ஒரு 'காட்டுக் கும்பல்' பஸ்ஸில் ஏறியது. அவனுக்கும் அவன் அழகுத் தெய்வத்திற்கும் மத்தியிலே நந்திபோல் நின்று சந்நிதியை மறைத்தது. அவனுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. ஆனால் ஆத்திரத்தை யார் மேல் காட்டுவது? எப்படிக் காட்டுவது? உண்மையைச் சொன்னால் அடுத்த நிமிஷம் அவன் மண்டையைப் பிளந்து விடமாட்டார்களா?

எழும்பூர் வரையில் தங்கு தடையின்றி அவள் அழகு ராசியைப் பருகிக்கொண்டு செல்லலாமென்று நினைத்ததற்கு மாறாக இப்படி ஏற்பட்டுவிட்டதே என்று வருத்த முற்றான். ஆயினும் அவன் மனம் தளரவில்லை. முயற்சியைக் கைவிடவில்லை. உடலை இப்படியும் அப்படியும் வளைத்து அஷ்டகோணலாக்கிக் கொண்டு, எங்கே யாவது இடுக்கில் அவள் தாமரை முகம் காணப்படாதா என்று தேடினான். பிரகதீசுவரர் கோவில் மாடு போல் நின்றிருந்த ஒரு இரட்டை நாடி கொஞ்சம் நகர்ந்ததும் அவள் அவன் கண்களில் பட்டாள். ஆவலுடன் கிருஷ்ணமூர்த்தி அவளைப் பார்த்தான். அதோ? அவளும் அவனையே பார்ப்பதற்கு முயற்சிக்கிறாள். தலையைக் குனிந்து கொள்கிறாள்.

அவளுக்கும் பக்கத்தில் யாரோ புதிதாக ஒரு பெண் உட்கார்ந்திருப்பதை கிருஷ்ணமூர்த்தி அப்பொழுதுதான் கவனித்தான். அவள் தன் சிநேகிதியுடன் ஏதோ சுவாரஸ்யமாகப் பேசுவதையும் இடையிடையே கிருஷ்ணமூர்த்தியைப் பார்ப்பதுமாக இருந்தாள். அவள் சினேகிதியும் தலையைத் தூக்கி கிருஷ்ணமூர்த்தியை ஒரு முறை பார்த்துவிட்டு தன் தோழியிடம் ஏதோ சொல்லி அவள் இடுப்பிலே கிச்சு கிச்சு மூட்டினாள். கிருஷ்ணமூர்த்தியின் அழகுத் தெய்வம் உடனே கன்னம் சிவக்கத் தலையைக் குனிந்துகொண்டது.

கிருஷ்ணமூர்த்திக்குக் கொஞ்ச நஞ்சம் இருந்த சந்தேகமும் போய் விட்டது. அவர்கள் இருவரும் அவனைப்பற்றித்தான் பேசிக் கொள்கிறார்கள். அவள் சிநேகிதி அவளை ஏதோ சொல்லி கேலி செய்கிறாள். அவள் நாணத்தால் தலையைக் குனிந்து கொள்கிறாள். சகஜந்தானே என்று எண்ணினான் அவன்.

அந்தக் கணத்திலேயே அவன் ஒரு சுற்றுப் பெருத்திருந்தாலும், பெருத்திருக்கலாம், ஆனந்தப் பூரிப்பினால்!

தான் இதுகாறும் கல்யாணம் ஆகாமல் இருப்பதைப் பற்றித் தன்னைக் கேலி செய்யும் ஆபீஸ் நண்பர்களையெல்லாம் துச்சமாக மதித்தான் கிருஷ்ணமூர்த்தி. இவ்வளவுநாள் தான் பிரம்மச்சாரியாக இருந்தது வீண் போகவில்லை என்று நினைத்து சந்தோஷப்பட்டுக் கொண்டான். இவ்வளவு அழகுடையவள் தனக்கு மனைவியாக வாய்க்க வேண்டும் — அதுவும் காதல் மனையாளாக வாய்க்க வேண்டும் – என்று பிரம்மா தன் தலையில் எழுதி விட்டிருக்கும் போது இதற்கு முன் எப்படிக் கல்யாணம் ஆக முடியும்? என்று நினைத்து பிரம்மதேவனுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டான்.

பஸ் ஆயிரம் விளக்கில் வந்து நின்றதும் அவள் இறங்குவதற்காக எழுந்தாள். கிருஷ்ணமூர்த்திக்கு இது எதிர்பாராத ஏமாற்றம்! தானும் இங்கேயே இறங்கி விடலாமா என்று ஒரு கணம் யோசித்தான். ஆபீஸ் மானேஜர் என்னும் ஒருபூதத்தின் தோற்றம் மனக் கண்முன் தெரியவே அந்த எண்ணத்தை மாற்றிக் கொண்டான்.

வேண்டுமென்றே அவள் பின் பக்கம் இறங்காமல் முன்பக்கம்

இறங்கினாள். இறங்கும் போது மீண்டுமொரு முறை – கடைசியாக தன் கடைக் கண் பார்வையை அவன் மீது வீசிவிட்டுத்தான் இறங்கினாள்.

கிருஷ்ணமூர்த்திக்கு உச்சி குளிர்ந்துவிட்டது.

எப்படியோ ஆபீஸில் அன்றைய வேலையை ஒப்பேற்றினான். நினைவெல்லாம் அவள் பின்னாலேயே சென்றுகொண்டிருந்தது. சாயங்காலம் பீச்சுக்குப் போனான். எங்காவது அவள் தென்படமாட்டாளா என்று அவன் கண்கள் பெண்கள் கூட்டத்தையெல்லாம் துருவின. ஆனால் ஏமாற்றம் தான்.

தூக்கம் வருவதாகத் தெரியவில்லை. கிருஷ்ணமூர்த்திக்கு திடீரென்று ஒரு யோசனை தோன்றியது. 'அவள் என்னைக் காதலிக்கிறாளென்பது நிச்சயமாகத் தெரிகிறது. என் மனநிலை அவளுக்குத் தெரியுமோ தெரியாதோ. நாளைக்கே அதை அவளிடம் தெரிவித்துவிட்டால் என்ன? ஏன் தயங்க வேண்டும். துணிச்சலோடு காரியம் செய்தால் தான் வெற்றி பெற முடியும்.

இப்படி நினைத்துக் கொண்டவன் உடனே எழுந்து பேப்பரும் பேனாவும் எடுத்து வைத்துக் கொண்டு தன் காதலையெல்லாம் அதிலே கொட்டினான். கடைசியாக, "நீ என்னைப் பார்த்த பார்வையிலே உன் அளவில்லாக் காதலை அறிந்து கொண்டேன். இது ஏதோ பூர்வ ஜன்மத் தொடர்பாக இருக்க வேண்டும். இல்லாவிட்டால் முதல் பார்வையிலேயே நம் இருவர் உள்ளமும் இப்படி ஒன்றுபட்டிருக்க முடியாது. இதை எழுதவும் எனக்குத் துணிச்சல் ஏற்பட்டிருக்காது. உடனே பதில் எழுதுவாயென எதிர்பார்க்கட்டுமா?" என்று எழுதி முடித்தான்.

மறு நாள். லஸ் முனையிலே முதல் நாளைப் போலவே அவளைச் சந்தித்தான். பார்வை பரிமாறிக் கொண்டனர். ஒன்றாகவே பஸ்ஸில் பிரயாணம் செய்தனர். கிருஷ்ணமூர்த்தி எப்படியோ துணிச்சலை வரவழைத்துக் கொண்டு தான் எழுதிய கடிதத்தை அவளிடம் சேர்ப்பித்துவிட்டான். அவளும் அதை எடுத்து தன் கை பைக்குள் வைத்துக் கொண்டதும் அவன் மனம் நிம்மதியடைந்தது.

மறு நாள் எப்போது வரப்போகிறது, அவளிடமிருந்து என்ன பதில் வரப்போகிறது என்று அவன் மனம் துடியாய்த் துடிக்க ஆரம்பித்தது. ஒரு சமயம் அக் கடிதத்தை வேறு யாரிடமாவது காட்டி தன்னை மாட்டிவைத்துவிடுவாளோ என்ற பயம் தோன்றியது. மறுகணமே "சே, சே. அப்படியெல்லாம் செய்ய மாட்டாள். அவள் மனம் எப்படியென்பது தான் பார்வையிலேயே தெரிந்துவிட்டதே" என்று தைரியப்படுத்திக் கொள்வான்.

மூன்றாம் நாள் காலை. லஸ் முனை. வழக்கம் போல் இருவரும் ஆஜர். அவள் பதில் கடிதம் கொடுக்கமாட்டாளா என்று பறந்தான் கிருஷ்ணமூர்த்தி. ஆனால் அவளோ கொஞ்சம் கூடப் பதட்டமில்லாமல் இருந்தாள்.

பஸ் வேகமாகச் சென்றுகொண்டிருந்தது. இதோ ஆயிரம் விளக்கு 'ஸ்டாப்' வந்து விட்டது. அவள் இறங்கிப்போய் விடுவாள். கிருஷ்ணமூர்த்தியின் மனம் ஏமாற்றத்தின் எல்லையில் நின்றது.

பஸ் நின்றது. அவள் எழுந்திருந்தாள். இறங்குவதற்காக பஸ்ஸின் முன்பக்கம் வந்தாள். வரும் போது லாகவமாக அவன் மடி மீது ஒரு கடிதத்தைப் போட்டுவிட்டு இறங்கிச் சென்றாள்.

கிருஷ்ணமூர்த்தி 'லபக்'கென்று அதை எடுத்து தன் பையில் போட்டுக் கொண்டான். அவன் மனம் 'தடக்' 'தடக்'கென்று வேகமாக அடித்துக் கொள்ள ஆரம்பித்தது. பஸ்ஸில் சுற்றுமுற்றுமிருந்தவர்கள் அவனை ஒரு மாதிரியாகப் பார்த்தார்கள்.

''கிடக்கிறார்கள் பொறுமைக்காரர்கள்'' என்று அவர்களை உதறித் தள்ளிவிட்டு அடுத்த 'ஸ்டாப்' பிலேயே கிருஷ்ணமூர்த்தி இறங்கி விட்டான், கடிதத்தைப் படிப்பதற்காக. ஆபீஸுக்குப் போகும் வரையில் அவனுக்குப் பொறுமை இருக்கவில்லை.

அவள் எழுதியிருந்தாள்.

ஐயா,

சிறு வயதிலிருந்தே எனக்கு மிருகக் காட்சி சாலையைப் பார்ப்பதென்றால் பிடிக்கும். மனிதக் குரங்கு, முள்ளம்பன்றி, காண்டா மிருகம் இவைகளையெல்லாம் பார்க்கும்போது எவ்வளவு அருவருப்பாக அவைகள் காணப்பட்டாலும் அவைகளைப் பார்க்காமல் இருக்க என்னால் முடியாது. விகாரமான அம்மிருகங்களைப் பார்ப்பதிலே எனக்கு ஒரு ஆவல். ஏன்? ஒவ்வொரு சமயத்தில் மனிதக் குரங்குகளை சீண்டிவிட்டு விளையாடக் கூட விளையாடுவேன். இதனாலெல்லாம் அந்த மிருகங்கள் நான் அவைகளைக் காதலிப்பதாக நினைத்துக் கொண்டு விட்டால் அதை விட முட்டாள்தனம் வேறென்ன இருக்க முடியும்?

பி. கு:– இந்தக் கடிதத்தைப் படித்த பிறகு என் பெயரைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்ற ஆசை உங்களுக்கு இருக்காதென நினைக்கிறேன்.

அவள் பெயரைத் தெரிந்துக் கொள்ள ஆசைப்படாதது மட்டுமல்ல, அவள் முகத்தைக் கூடப் பார்க்க கிருஷ்ணமூர்த்தி அதன் பிறகு ஆசைப்படவில்லை. 23-ம் நம்பர் பஸ்ஸில் போவதையே விட்டு விட்டான். வேறு பஸ்ஸில் பிரயாணம் செய்யும் பொழுதும் ஏதாவது ஒரு புத்தகத்தைக் கையில் வைத்துக் கொண்டு தலையைக் குனிந்து படித்துக் கொண்டிருக்கிறான். தலை நிமிர்ந்து யாரையும் – ஆண்களைக் கூட – பார்ப்பதில்லை!

சென்னையில்
சிறந்து விளங்கும்
விநாயகர்
V. ARUMUGA CHETTY
சுருட்டுகள்
ஷெல்
பிராண்டு
TRADE MARK REGISTERED
PROPRIETOR V. ARUMUGA CHETTY
மணிலா
சுருட்டுகள்

V. ஆறுமுக செட்டி
18, அன்னா பிள்ளை தெரு, சென்னை-1.
N.B. பொடிக்கு உயர்ந்த பந்தர் புகையிலைகளும் எம்மிடம் கிடைக்கும்.

மதிப்புரை

தீபாவளி மலர்கள்

ஆனந்த விகடன்: விலை ஐந்து ரூபாய்

ராஜாஜியின் 'பிரயோஜனம் என்ன' என்ற கட்டுரை மலருக்கு சிறப்பளிக்கிறது. கே. காமராஜ் நாடார், சி. சுப்ரமண்யம், எம். பக்தவத்சலம் முதலியோரும் தங்கள் கட்டுரையால் மலரை சிறப்பித்துள்ளார்கள். பரத நாட்டியக் கச்சேரி என்ற புகைப்பட நாட்டியப் பகுதியும்–ராமகிருஷ்ண சரிதம் ஓவியக் கட்டுரையும் — பாலு சகோதரர்களின் பால பக்தர்களும் – செஞ்சிக் கோட்டை கட்டுரையும் மலருக்கு மிகவும் சிறப்பை அளிக்கிறது. மணிமணியான கதைகள். மதியை மயக்கும் வண்ண ஓவியங்கள் 'சில்பி' யின் சங்கரரும் ஸ்ரீ காஞ்சியும் — திருத்தணி முருகன் இரண்டும் போற்றக்கூடிய அம்சங்களாகும். மொத்தத்தில் மலர் பிரமாதம்.

கலைமகள்: விலை இரண்டு ரூபாய்

அனுபவம் – அறிவு – எழுத்து – மூன்றிலும் பழுத்து விளங்கும் நம் தலைவர் ராஜாஜி தமக்கே இயல்பான உவமைகளால் தமிழ் மறைகள் பற்றி விளக்குகிறார். முதன் முதலில் தமிழில் துப்பறியும் நாவல்கள் எழுதின ஜே. ஆர். ரங்கராஜுவின் 'பாலபருவம்' மிகவும் இனிமையாக இருக்கிறது. சொல்லுக்கும் சிந்தனைக்கும் உள்ள தொடர்பு – சந்தானம் அவர்களின் கட்டுரையால் விளங்குகிறது. மலரின் சிறப்பு –நாமக்கல் கவிஞரின் திருக்குறள் காமத்துப்பாலின் கட்டுரையாலும்–பாஸ்கரத் தொண்டைமானின் சிற்பக் கட்டுரையாலும் அதிகரிக்கிறது. 'வாகனங்கள்'– ஆலய தீபங்கள் – என்னும் புகைப்படக் கலைப்பகுதியும் சிறந்த அம்சங்கள். தமிழ் நாட்டுக் கதை உலகில் ஏறு போல் நடை போடும் எழுத்தாளர்களின் பதினேழு கதைகளும் – ஒரு நாடகமும் படிக்க சுவையாக இருக்கிறது. மலரில் வெளியாகியுள்ள ஓவியங்கள் உள்ளத்தை தொடுகிறது.

காதல்: (ஆண்டு மலர்)

தீபாவளியின் போது காதலுக்கு ஆண்டு நிறைவு வருவதால் ஆண்டு மலராகவே அது வெளியாகிறது. இரண்டு ரூபாய் விலையில் 164 பக்கத்தில், பதினான்கு கதைகள் – ஆறு அருமையான கட்டுரைகள்– இரு கவிதைகள் அடங்கியுள்ளது. லைலா மஜ்னு புகைப்பட நாடகமும்–குற்றாலக் குறவஞ்சிக் காட்சியும், சந்தாமியான்-ராமகிருஷ்ணா முதலியோரின் புகைப் படங்களும் மலரை மணம் கமழச் செய்கின்றன.

கல்கி: விலை 1 ரூபாய்

தனி மலர் கொண்டுவராமல் வழக்கமான இதழையே இவ்வருடம் தீபாவளி தினத்தில் சில விசேஷ அம்சங்களைப் புகுத்தி தந்திருக்கிறார்கள். மாடசாமியின் தீர்ப்பும், சுத்தானந்த பாரதியாரின் ''வீரத்தாய்'' என்னும் ருஷ்ய அனுபவக் கட்டுரையும் மலருக்கு சிறப்பளிக்கிறது. கல்கியின் 'மயில்விழிமான்' கதை படிக்க மிகவும் சுவாரஸ்யமாக இருக்கிறது. கதைகளும் நன்றாகவே இருக்கின்றன. கல்கி மலர் என்றால் சொல்ல வேண்டுமா சித்திரச் சிறப்புக்கு.

சிவாஜி (ஆண்டு மலர்) விலை ரூ. 1.

சிவாஜி ஆண்டு மலரில் படங்கள் இல்லை என்ற குறையை – சுமார் 30-க்கும் மேற்பட்ட கதைகளை வெளியிட்டு நிவர்த்தி செய்து விட்டார்கள். தமிழ் நாட்டில் உள்ள எழுத்தாளர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதை அறிய வேண்டுமானால் சிவாஜி மலரைப் பார்த்தால் போதும். கட்டுரைகளும்–கவிதைகளும் இடம் பெற்றுள்ளன.

சுதேசமித்திரன்: *விலை எட்டணா*

தமிழ் நாட்டில் எழுதப் படிக்கத் தெரிந்த எளிய குடும்பத்தினரும் வாங்கிப்படித்து மகிழும் வகையில் இவ்வருடம் மித்திரன் மலர் வெளியாகியுள்ளது. இருபது கதைகள்—ஐந்து கட்டுரைகள்—பக்கத்துக்குப் பக்கம் வண்ணச் சித்திரங்களோடுபொலியும் மலர் அபாரம். கவர்னர் பிரகாசா—ரா. பி. சேதுப்பிள்ளை, பெ. தூரன், வரதராசனார்—கி. வா. ஜ. முதலியோரும் மலரில் எழுதியுள்ளனர். கதைகள் படிக்க சலிப்பே தட்டவில்லை. மாதவனின் அட்டைப்படம் மிகவும் பிரமாதம். குறைந்த விலையில் சிறந்த மலரை அளித்திருக்கின்றனர்.

கண்ணன்: *விலை ரூபாய் ஒன்று*

கண்ணனின் ஐந்தாவது தீபாவளி மலரில் தமிழ் நாட்டின் மிகப் பெரிய எழுத்தாளர்களும் ராஜாஜி வரதராசனார் — முதலியோரும் எழுதியிருக்கிறார்கள். பக்கத்துக்குப் பக்கம் வண்ணச் சித்திரங்கள் கண்களைப் பறிக்கிறது. கண்ணன் என் சேவகன்—போட்டோக்விஸ்—ரயில்வே நூற்றாண்டு விழா — முதலியவை பாராட்டக் கூடிய அம்சங்கள். குழந்தைகளுக்கு ஏற்ற பரிசு!

விந்தியா: *விலை எட்டணா*

124 பக்கமுள்ள விந்தியா தீபாவளி இதழும் சிறந்த கட்டுரைகளுடனும்— கதைகளுடனும்— வெளியாகியுள்ளது. கதைகள் எல்லாம் நன்றாகவே இருக்கின்றன. சித்திரங்களும்—புகைப்படங்களும் நன்கு அமைந்து இருக்கின்றன.

மாலா: *விலை 12 அணா*

104 பக்கமுள்ள மாலா தீபாவளி மலரில் ஐந்தே கதைகள் தான் வெளியாகியுள்ளது. சிறிய கட்டுரைகள் ஐந்தும் — ஒரு நாடகமும் சேர்த்து இருக்கிறார்கள். மலரில் சினிமாப் படங்களுக்கு பிரதான மளிக்கப் பட்டிருப்பது ஒரு குறைதான்.

பேசும் படம்: *விலை 1—4—0*

பேசும்படம் தீபாவளி விசேஷ இதழும் அழகாய் மலர்ந்து உள்ளது. 'புத்தகமும் புனைப் பெயரும்' என்ற ஹாஸ்யக் கட்டுரை நன்கு அமைந்து இருக்கிறது. 'ஆர்ட்' காகிதத்தில் கண்ணைக் கவரும் வகையில் — பக்கத்துக்குப் பக்கம் ஜொலிக்கும் நடிக — நடிகைகளின் புகைப் படங்களோடு வெளிவந்துள்ளது.

குண்டூசி: *விலை 3 ரூபாய்*

குண்டூசி மலரில் 'மணம்' உண்மையாகவே கமகமவென்று வீசுகிறது. பிரபல வாசனை திரவிய கம்பெனியான டி. எஸ். ஆரின் மணம் கமழும் ஏற்பாடு புதுமையான அம்சம். பக்கத்துக்குப் பக்கம் சினிமா நக்ஷத்திரங்கள் ஜொலிக்கிறார்கள். சில சினிமா நட்சத்திரங்களின் கட்டுரையும் — குசல குமாரியின் வாழ்க்கையும் மலரில் இடம் பெற்றுள்ளது.

முஸ்லிம் முரசு *(மீலாத் மலர்)*

விலை 8 அணா. பக்கங்கள் 96.

நபிகள் நாயகம் பிறந்த தின விழாவையொட்டி வெளியிடப்பட்டு இருக்கும் முஸ்லிம் முரசு மீலாத் மலரில்—இஸ்லாமின் பெருமையைப் பற்றியும் — முஸ்லிம் உலகைப்பற்றியும் — சிறந்த கட்டுரைகளும் கதைகளும் இடம் பெற்று இருக்கின்றன. 'ரெஸாக்' கின் அட்டைப்பட ஓவியம் அழகாக இருக்கிறது.

மணிவிளக்கு: *(மீலாத் மலர்)*

விலை 8 அணா. பக்கங்கள் 112.

மணி விளக்கு மலரில் 'உண்மை மணக்கிறது' — என்னும் கட்டுரையும் — இரு பெருமொழிகள் — கட்டுரையும் அறிவுக்கு விருந்தாக இருக்கிறது. காலத்தை வென்றிடுவார் அட்டைப் படமும் அழகாக இருக்கிறது.

—வி. ஆர். பாலன்

சரியான பரிசு

வாதூலன்

"சாவித்திரிக்குக் கல்யாணமாம். கடிதாசு வந்திருக்கு. உங்களையும் அழைச்சுண்டு கல்யாணத்துக்கு நாலு நாள் முன்னதாகவே வரவேண்டும் என்று எழுதியிருக்கிறாள்" என்றாள் என் மனைவி சாந்தி, கையில் காபி டம்ளரை நீட்டியபடியே.

"அட! சாவித்திரிக்குக் கல்யாணமா? யார் வரன்? என்று கேட்டேன் ஆவலுடன்.

"இந்தாருங்கள், கல்யாணக் கடிதாசு. திருச்சியில் காலேஜில் புரொபஸராக இருக்கிறாராம்" என்று கூறியபடியே கல்யாணக் கடிதத்தை என்னிடம் கொடுத்தாள்.

அதைப் பிரித்துப் பார்த்தேன். பெயரைப் பார்த்ததும் எனக்கு மிகுந்த சந்தோஷமுண்டாகியது. அந்த வரன் சந்திரசேகரனை எனக்குத் தெரியும். என்னைவிட ஒரு வகுப்பு கீழே படித்துக்கொண்டிருந்தான், காலேஜில். சிவப்பாக, வாட்டசாட்டமாக இருப்பான். அவனுடன் நான் நெருங்கிப் பழகாவிட்டாலும் அவன் மிகவும் நல்ல குணம் உடையவன் என்று தெரியும். அவன் சாவித்திரிக்குக் கணவனாவதைப் பற்றி எனக்கு மிகுந்த திருப்தியாக இருந்தது.

"என்ன? கல்யாணத்துக்குப் போக வேண்டியது தானே?" என்று கேட்டாள் சாந்தி. அவளுக்குத் தன் தோழியின் கல்யாணத்துக்குப் போகவேண்டுமென்ற துடிப்பு. நான் எங்கே லீவு இல்லை, பண வசதி இல்லை, என்று ஏதாவது சாக்குப் போக்கு கூறிவிடுகிறேனோ என்று வேறு பயம்.

"கண்டிப்பாகப் போக வேண்டியதுதான். அவளுடைய கல்யாணத்துக்குப் போகாமல் வேறு யார் கல்யாணத்துக்குப் போவது? அவளால் அல்லவா நான் உன்னை அடைந்தேன். நாளைக்கே லீவுக்கு எழுதிப் போட்டு விடுகிறேன். சரிதானே?" என்று குதூகலத்துடன் கூறினேன்.

"ஆமாம். அவளால் தான் நானும் உங்களை அடைந்தேன். நம்மிருவருக்கும் இடையே பாலமாக அமைந்து அவள் நம்மை

இணைத்து விட்டாள். அவள் எவ்வளவு சுட்டி! என் மனதை எப்படியோ அறிந்துக்கொண்டு காரியங்களைச் சட்டு புட்டென்று நடத்தி விட்டாளே! முதலில் அவள் விளையாட்டுக்காகக் கேட்டாள் என்றுதான் நினைத்தேன், உங்களை எனக்குப் பிடித்திருக்கிறதா என்று கேட்டபோது. ஆனால் நீங்கள் என்னைப் பார்க்க வந்தபோதுதான் அது எவ்வளவு உண்மை என்று தெரிந்தது'' என்றாள் சாந்தி. அவளுடைய குரலில் தன் தோழியைப் பற்றிய பெருமிதம் தென்பட்டது.

சாந்தி காபி டம்ளரை எடுத்துக் கொண்டு போய்விட்டாள், தன் சமையல் வேலையைப் பார்க்க. என் உள்ளமும் சாவித்திரியைப் பற்றியும், என் விவாகத்தைப் பற்றியும் நினைக்க ஆரம்பித்தது.

2

என் பெற்றோருக்கு நான் ஒரே பிள்ளை. காலேஜில் பி. ஏ. படித்து முடிந்ததும் என் தகப்பனார் எப்படியோ தெரிந்தவர்கள் மூலமாய் ஒரு பெரிய கம்பெனியில் உதவி மானேஜர் வேலை செய்து வைத்தார். நல்ல வேலை கிடைத்ததும் அடுத்த பிரச்னை என் விவாகத்தைப் பற்றியதாக மாறிற்று. வேலையில்லாமல் சும்மா இருந்தால்கூடப் பெண்ணைத் தருகிறேன் என்று வரும்போது, நல்ல உத்தியோகத்தில் இருக்கும் எனக்குப் பெண் கொடுக்க முன்வருவதைப் பற்றிக் கேட்கவா வேண்டும்? இரண்டு மூன்று பெண்களை நான் போய்ப் பார்த்துவிட்டு வந்தேன். ஒன்றும் என் மனதுக்கு சரியாகப் பிடிபடாமல் இருந்தது.

அன்று என் தகப்பனார் திருச்சியில் ஒரு பெண்ணைப் பார்க்க வேண்டுமென்று என்னை இரண்டு நாட்கள் லீவு எடுத்துக்கொள்ளும்படி கூறினார். மூவரும் பெண்ணைப் பார்க்கப் போனோம்.

பெண்ணைப் பார்த்துவிட்டு வந்ததும் மனதுக்குத் திருப்தியாக இருந்தது. என் சம்மதத்தை என் தகப்பனாரிடம் கூறிவிட்டேன். அவர்களுக்கும் பிடித்துவிட்டிருந்தது. பெண்ணின் தகப்பனார் நிறைய நிலபுலன் உடையவர். பெண்ணும் கண்ணுக்கு லட்சணமாய் இருந்தாள். அவளுடைய பதவிசை சிறிது நேரத்திலேயே கண்டு கொண்டதாக என் தாயார் கூறி அவளைப் பற்றிப் பெருமையாக அக்கம் பக்கத்தில் அதற்குள் கூறிக்கொள்ள ஆரம்பித்து விட்டாள்.

ஆகவே எல்லாம் திருப்தியாகப் போய்விடவே என் தகப்பனார் பெண்ணின் தகப்பனாருக்கு எல்லோருக்கும் பெண் பிடித்து விட்டது, மேற்கொண்டு விவாக நாளை நிச்சயிக்க ஏற்பாடு செய்யலாம், என்று எழுதிவிட்டார். வீட்டில் என் விவாகத்தைப் பற்றித் தடபுடலாக இருந்தது. என்னென்ன வாங்க வேண்டும் என்று அப்போதே பேச ஆரம்பித்துவிட்டார்கள்.

நான்கு நாட்கள் கழித்து நான் காரியாலயத்திலிருந்து வந்ததும் என் தகப்பனாரும், தாயாரும் ஏதோ பெரும் பொருளைக் கொள்ளை கொடுத்தவர்களைப் போல் உற்சாகமற்றுக் காணப்பட்டனர். என் கையில் டிபனைக் கொடுத்துக் கொண்டே என் தாயார், ''உம், அவ்வளவுதான் அதனுடைய அதிர்ஷ்டம்!'' என்று அங்கலாய்ப்புடன் கூறினாள்.

''யாருடைய அதிர்ஷ்டத்துக்குக் குறைவு வந்துவிட்டது?'' என்று ஒன்றும் புரியாமல் கேட்டேன்.

''எல்லாம் அந்தப் பெண்ணுக்குத்தான்! அதற்கு உன்னைப் பிடிக்கவில்லையாம்! ராஜாவைப் போல் இருக்கும் உன்னைப் பண்ணிக் கொள்ள ஒருத்திக்குக் கசக்குமோ? எதுக்கும் கொடுத்து வைக்க வேண்டாமா?'' என்று கூறினாள்.

''சரி, விட்டுத்தள்ளு........ அவள் இல்லாவிட்டால் இன்னும் எத்

தனையோ பேர் இருக்கிறார்கள். இதைவிட இன்னும் உயர்ந்த இடத்திலிருந்து பெண் கொண்டுவருகிறேன், பார் !'' என்றார் என் தகப்பனார் ரோஷத்துடன்.

மேஜை மேல் இருந்த அந்தக் கடிதத்தைப் பார்த்தேன்.

''....எங்களுக்கு உங்களுடைய சம்பந்தத்தில் மிகுந்த ஆவல் இருந்தாலும் என் பெண் தங்கள் பிள்ளையை மணக்க விரும்பாததால் மிகவும் வருந்துகிறேன். எனக்கு இருப்பது ஒரே பெண் ஆனதால் அவளுடைய விருப்பத்துக்கு மாறாக நடக்கமனம் இசைய மாட்டேன் என்கிறது. இதைத் தாங்கள் தவறாகக் கொள்ள மாட்டீர்கள் என்று நம்புகிறேன்'' என்று எழுதியிருந்தது.

அதைக் கண்டதும் எனக்கு மிகவும் கோபம் உண்டாயிற்று அந்தப் பெண் மேல். என்னைப் பிடிக்கவில்லை என்று ஒரு பெண் கூறிவிட்டதானது என் ஆண்மைக்குச் சவால் விட்டது போல் இருந்தது. இதுவரை நான்தான் பெண்ணைப் பிடிக்கவில்லை என்று கூறி வந்திருக்கிறேனேயொழிய என்னை யாருக்காவது பிடிக்காதிருக்கும் என்று யோசித்ததே இல்லை. அப்படியிருக்க எந்த விதத்தில் என்னிடம் குறை கண்டு என்னை வேண்டாம் என்று கூறிவிட்டாள் என்று எண்ணி மனம் கொதித்தேன். ஆனால் மேலும் யோசிக்கும்போது நாம் இதற்கு முன் பார்த்தப் பெண்களை வேண்டாம் என்று கூறவில்லையா? அவர்களிடம் எந்தக் குறையைக் கண்டு அவ்விதம் கூறினேன்? அந்தப் பெண்களில் எத்தனை பேரிடம் எவ்வளவு அருங்குணங்கள் இருக்கின்றனவோ? பார்த்த ஒரு பார்வையில் ஏதோ ஒரு கவர்ச்சி காணப்படாததால் ஒதுக்கி வந்தேன். அவ்வளவுதானே! அது போல். என்னிடமும் அவளுடைய கண்களுக்கு ஏதாவது குற்றம், குறை தென்பட்டிருக்கலாம். அதனால் பிடிக்கவில்லை என்று கூறி விட்டிருக்கலாம். இதில் என்ன தவறு? இதற்கு நான் ஏன் கவலை கொள்ள வேண்டும்? இருமனமும் ஒத்துப்போனால் தானேவாழ்க்கை இன்பமளிக்கும்?' என்று நினைத்து மனதைச் சமாதானப் படுத்திக் கொண்டேன்.

3

அடுத்த நாள் காலையில் விழித்தெழுந்ததும் நான் எல்லாவற்றையும் மறந்துவிட்டேன். எத்தனையோ கனவுகள் காண்கிறோம். அவை யெல்லாம் ஞாபகத்தில் இருக்கின்றனவா என்ன?

ஆனால் காரியாலயத்துக்குப் போனதும் ஒரு பெரிய அதிசயம் காத்திருந்தது, ஒரு கடித ரூபத்தில். என் பெயருக்கு வந்திருந்த அந்தக் கடிதத்தைப் பிரித்தேன். அது என்னைப் பெரிய ஆச்சரியத்தில், திகைப்பில் ஆழ்த்திவிட்டது. அந்தக் கடிதம் நான் திருச்சியில் பார்த்துவிட்டு வந்த பெண் சாவித்திரியால் எழுதப்பட்டிருந்தது! அவள் எனக்கு என்ன எழுதியிருப்பாள்? வேண்டாமென்று ஒதுக்கி விட்ட எனக்கு எழுத என்ன இருக்கிறது? ஒருவேளை மனம் மாறி அவசரத்தில் வேண்டாம் என்று கூறி விட்டதற்காக என்னிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டு தன்னை மணந்து கொள்ளும்படி கேட்டுஎழுதியிருக்கிறாளா? என்று பல்வேறு யோசனைகளுடன் ஆவல் தூண்ட அந்தக் கடிதத்தைப்படித்தேன். அது நீண்ட கடிதமாக இருந்தது. அவள் என்னை அழைத்திருந்த அழைப்பே ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. அதுவே ஒரு முக்கியமான செய்தி இருக்கிறதென்று உணர்த்தியது.

அன்புள்ள அண்ணா,

தங்களைச் சகோதரனாக்கிக் கொண்டதற்குமன்னிக்கவும். நான் தங்களை மணக்க விரும்பவில்லை என்பதைக் கேட்டு என் மேல் கோபமும், வெறுப்பும் கொண்டிருப்பீர்கள் என்று எனக்குத் தெரியும். உங்களிடம் எந்தக் குறை கண்டு நான் உங்களை

மணக்க மறுத்தேன் என்று பொங்கியிருப்பீர்கள். உண்மையில் உங்களிடம் எவ்விதமான குற்றத்தை, குறையை நான் காண முடியும்? உங்களை அடைய யாரும் பாக்கியம் செய்திருக்க வேண்டுமே! நான் அந்த பாக்கியம் செய்யவில்லை!

'நான் இந்தக் கடிதத்தைத் தங்களுக்கு எழுத வேண்டிய காரணம் என்ன? என்ன எழுதப் போகிறேன்?' என்று புரியாமல் திகைப்பீர்கள், என்னுடைய கதையைக் கொஞ்சம் பொறுமையுடன் கேட்பீர்களா?

நான் என் பெற்றோருக்கு ஒரே செல்வப் பெண். என் மீது அவர்களுக்கு உள்ள அன்பை அளவிட முடியாது. நானும், சாந்தியும் அந்தரங்கத் தோழிகள். இருவரும் எஸ், எஸ். எல். ஸி. வரை ஒன்ருகப் படித்தோம். நான் மட்டும் இண்டர் வரை படித்தேன். சாந்தியால் எஸ். எஸ். எல். ஸிக்கு மேல் படிக்க முடியவில்லை. இருந்தாலும் அவள் மிகவும் கெட்டிக்காரி. படிப்பில் சூட்டிகை.

அவள் பள்ளிக்கூடம் ஒன்றில் உபாத்தியாயினியாக இருக்கிருள். அவளுடைய பெற்ரோர்கள் அவளுக்கு விவாகம் செய்து வைக்க முயன்றனர். ஆனல் ஏழ்மை குறுக்கே நின்றது. அதனல் அவள் உபாத்தியாயினியாகவே வேலை செய்து வருகிருள்.

நான் இண்டர் படித்து முடிந்ததும் என் தகப்பனர் எனக்கும் விவாகத்துக்கு முயற்சி செய்தார். எத்தனையோ பேர்கள் வந்து பார்த்துவிட்டுப் போனர்கள். அவர்கள் எல்லோருக்கும் என்னைப் பிடித்திருந்தது. என் தகப்பனர் செய்யும் சீர், வரதட்சணையும் அவர்களுக்குத் திருப்தியாக இருந்தது. ஆனல் எனக்குத்தான் அவர்கள் யாரையும் பிடிக்கவில்லை. எல்லோரையும் தட்டிக் கழித்து வந்தேன். என் பெற்ருேருக்கு என் மேல் கோபம்கூட! ஆனல் நான் செல்லப் பெண்ணனதால் என் இஷ்டத்துக்கு மாருக வற்புறுத்தவும் விரும்பவில்லை.

கடைசியாக, நீங்கள் அன்று என்னைக் காண வந்தீர்கள். ஒவ்வொருவரையும் பார்த்துப் பார்த்துப் பிடிக்காமல் சலித்துப்போன எனக்குப் பெண் பார்க்க வருபவர்களைக் கண்டாலே வெறுப்பாய் இருந்தது. இந்த உலகத்திலேயே என் மனதுக்கிசைந்தவனுக எவனையும் பிரம்மா படைக்கவில்லையோ என்று கூட சந்தேகப்பட்டேன். ஒவ்வொரு தடவையும் என்னைப் பார்க்க வரும் போதும் இந்தப் பிள்ளை எனக்குப் பிடித்தவராக இருக்கக்கூடாதா என்று பிரார்த்தித்துக் கொள்வேன். ஆனல், எல்லாம் வியர்த்தமாய்ப் போய்க்கொண்டிருந்தது. அதனல் அன்று நீங்கள் வரும் போது அசுவாரசியமாய் இருந்தேன். சரியாகக்கூட அலங்கரித்துக் கொள்ளவில்லை. வந்தவர்களுக்கு என்னைப் பிடிப்பதைப் பற்றிய கவலையை விட, அவர்களை எனக்குப் பிடிப்பதுதான் முக்கியமாக இருந்ததால் நான் ஏன் அலங்காரம் செய்துகொள்ள வேண்டும்? என்று சாதாரணமாகவே அலங்கரித்துக் கொண்டேன்.

உங்களை நமஸ்காரம் செய்துவிட்டு நிமிர்ந்ததும் என் உள்ளம் பரபரப்பு கொண்டது. அதில் ஆனந்த லாகிரி ஏற்பட்டது. நான் இத்தனை நாட்கள் கண்டக் கனவு நனவாகிவிட்டது போல் தோன்றிற்று. எனக்கேற்ற மணவாளர் கிடைத்து விட்டார் என்று எண்ணி மகிழ்ந்தேன். அந்த உற்சாகத்தில் நான் பாட்டுக்களைக் கணீரென்று பாடினேன். நீங்கள் தலையை ஆட்டிக்கொண்டு, தாளம் போட்டு ரசித்ததையும், என்னைக் கூறிய பார்வையுடன் பார்த்துக் கொண்டிருந்ததையும் கண்டு புளகாங்கித மடைந்தேன். பாட்டுமுடிந்ததும் உள்ளே போய்விட்டேன். உங்கள் தாயார் என்னிடம் அன்பாகப்பேசினர். என்ன படித்திருக்கிறேன்? பூப் போடத் தெரியுமா? வீட்டு வேலைகளெல்லாம் தெரி

யுமா? என்று கேட்டுவிட்டு 'என் பிள்ளையைப் பிடித்திருக்கிறதா?' என்று கேட்டார்.

என்னதான் படித்த பெண்ணுனாலும் நேருக்கு நேர் அன்னியர் ஒருவர் கல்யாணப் பேச்சை எடுத்தால்—அதுவும் பிள்ளையைப் பிடித்திருக்கிறதா என்று பிள்ளையின் தாயாரே கேட்டால் பெண்ணின் வாய் எப்படித் திறக்கும்? உள்ளத்தின் உவகையை உதட்டில் வெளிப்படுத்தி மௌனமாக இருந்தேன்.

சாந்தி, கூட இருந்தவள் "உங்கள் பிள்ளையை மணக்க அவளுக்குக் கசக்குமா என்ன?" என்று கேலி செய்தாள்,

நீங்கள் எல்லாம் போன பிறகு சாந்தி என் அறைக்கு வந்தாள். நான் தங்கள்மோகன உருவை இன்பமாய் மனத்துள் தியானித்துக் கொண்டு இருந்தேன். அவள் என்னருகே வந்து என்னை உலுப்பினுள். நான் முதலில் அதை உணரவில்லை.

"உனக்கு உணர்வு இங்கே எங்கே இருக்கிறது? 'அவர்' கொண்டுபோய் விட்டாராக்கும், உன் உள்ளத்தை" என்ருள் சாந்தி.

"சரி தான் போடி. சொன்னுல் நம்ப மாட்டாய். நான் எதைப் பற்றியும் நினைக்கவில்லை..... வெறுமனே கண்களை மூடிக்கொண்டிருந்தேன், அவ்வளவுதான்" என்று புளுகப் பிரயத்தனம் செய்தேன்.

"நீ ரொம்ப அதிஷ்டசாலியடி...." என்ருள் சாந்தி, சிறிது நேர மௌனத்திற்குப் பின்.

"எப்படிக் கூறுகிருய்?" என்று கேட்டேன் ஒன்றும் அறியாதவள் போல்.

"என்ன பாசாங்கு செய்கிறாயடி" என்றாள் பொய்க் கோபத்துடன் சாந்தி.

"நீ சொல்வதே எனக்குப் புரியவில்லையே".

"புரியாதம்மா, புரியாது. அழகில் மன்மதனையொத்தவனை மணவாளனாகப் பெறப்போகும் உனக்கு ஒன்றுமே புரியாது தான்".

எனக்குத் திடீரென்று ஒரு யோசனை தோன்றிற்று. என்னைக் கேலி செய்யும் அவளையே திருப்பிக் கிண்டல் செய்ய வேண்டுமென்று தோன்றிற்று. உடனே சாந்தியைப் பார்த்து "ஏண்டிசாந்தி! அவர் நிஜம்மாகவே ரொம்பவும் அழகாயிருக்காரோ?" என்று கேட்டேன்.



"சந்தேகமென்ன? அவரைப் போன்ற அழகுடையவரைப் பார்ப்பது அபூர்வம். அவருடைய பிரகாசமான முகமும், சுருண்ட கிராப்பும், பரந்த மார்பும், திரண்ட தோள்களும், கூர்மையான கண்களும், நீண்ட மூக்கும்.... அவரை மன்மதன் என்று கூறுவது முற்றிலும் பொருந்தும்" என்று உண்மையான உள்ளத்துடன் கூறினாள் சாந்தி.

"சாந்தி, அவரை உனக்குப் பிடித்திருக்கிறதா?" என்று கேட்டேன் அவளை.

"இதென்ன கேள்வியடி, சாவித்திரி?" என்று திடுக்கிட்டுப் போய்க் கேட்டாள் சாந்தி.

"சொல்லேன்.... அவரை உனக்குப் பிடித்திருக்கிறதா?" என்று வற்புறுத்திக் கேட்டேன்.

"அப்படியென்றால்?"

"அவரைக் கல்யாணம் செய்துகொள்ள நீ சம்மதிப்பாயா? சொல்" என்று கேட்டேன்.

"என்னப் பைத்தியக்காரக் கேள்வியடி....?" என்று சாந்தி பதறிப் போய்க் கேட்டாள்.

"கேட்டக் கேள்விக்குப் பதில் சொல். உன்னைப் பண்ணிக் கொள்ளச் சொன்னால் நீ அவரைக்கல்யாணம் பண்ணிக் கொள்வாயா?" என்று மேலும் வற்புறுத்திக் கேட்டேன்.

"பூவை வேண்டாத வண்டு உண்டாடி. அந்த அழகனை மணக்கக் கசக்குமா என்ன? ஆனால் அந்தப் பேச்சு எதற்கு? மனதால் நினைப்பது கூடப்

பாவம்'' என்று கூறிவிட்டுப் பெருமூச் செறிந்தாள் சாந்தி.

''எனக்கு அவரைப் பிடிக்கவில்லையடி.... நீ அவரிடம் அப்படி என்ன பிரமாத அழகைக் கண்டு விட்டாய் என்றுதான் புரியவில்லை! இதுவரை என்னை வந்துப் பார்த்து விட்டுப் போனவர்களைவிட இவர் எவ்விதத்திலும் உயர்வாகத் தெரியவில்லை'' என்றேன்.

''ஏண்டி இப்படிப் பசப்புகிறாய்? உன் உள்ளம்தான் அப்போதே தெரிந்து விட்டதே'' என்னிடம் அளக்காதே அவரை மணந்து நீ சுகமாக வாழவேண்டு மென்பது தான் என் பிரார்த்தனை....... சரி... நேரமாய் விட்டது. நான் 'நோட்ஸ்' எழுத வேண்டும்'' என்று கூறிவிட்டுப் போய் விட்டாள்.

சாந்தி கூறியதிலிருந்து அவளுடைய உள்ளம் புரிந்து விட்டது. அவளும் உங்களை விரும்பியிருக்கிறாள். என் மனதில் போராட்டம் உண்டாயிற்று. எத்தனையோ வரன்களைப் பார்த்துப் பார்த்து அலுத்த பிறகு கிடைத்த ரத்தினமான உங்களை மணந்து கொள்வதா-அல்லது சாந்தி உங்கள்மேல் ஆசை கொண்டிருக்கிறாளே அவளுக்காக விட்டுக் கொடுத்து உங்களிருவருக்கும் விவாகம் செய்து வைப்பதில் முயல்வதா —என்று யோசித்தேன். கடைசியில் அவள் உங்களை மணக்க வழி செய்ய வேண்டுமென்று தோன்றிற்று. அவள் ஏழை. அவளுக்கு வரன் கிடைப்பது சுலபமல்ல. நீங்களாக அவளைப் பார்த்தால் வேண்டாமென்று உதறிவிட்டாலும் விடுவீர்கள். ஆனால் நான் கேட்டுக்கொண்டால் நீங்கள் அவளை மணப்பீர்கள் என்று நம்பிக்கை ஏற்பட்டது. அவள் என்னைவிட அழகு, அந்தஸ்து இவைகளில் குறைவானாலும் என்னைவிடப் பன்மடங்கு அறிவில் சிறந்தவள், அவளை நீங்கள் வெறுக்க மாட்டீர்கள் என்ற நம்பிக்கையுடன்தான் உங்களைப் பிடிக்கவில்லை என்று கூறிவிட்டேன்.

நான் உங்களைப் பிடிக்கவில்லை என்று கூறியபோது சாந்தி முதலில் நம்பவில்லை. ஆனால் நான் அப்பாவிடம் கூறி உங்களுக்கு அவர் கடிதம் எழுதி விட்டதை அறிந்ததும் சாந்தி என்னிடம் வந்து, ''உன்னைப் போல் ஒரு முட்டாள், கர்வம் பிடித்தவளைப் பார்த்ததில்லை, சாவித்திரி'' என்று கோபித்துக் கொண்டாள்.

''ஏன் அப்படிச் சொல்கிறாய்?'' என்று கேட்டேன்.

''இத்தனை அழகு, அறிவு வாய்ந்தவரைப் போய்ப் பிடிக்கவில்லை என்று கூறிவிட்டாயே.... இதைவிட உயர்வாய் உனக்கு எவன் கிடைக்கப் போகிறான்?'' என்றாள். அவளுடைய பேச்சில் என் அசட்டுத் தனத்துக்கு அனுதாபமும், என் அகம்பாவத்துக்குக் கோபமும், வெறுப்பும் கலந்திருந்தன.

''இப்படி அவரைப் பற்றியே புகழ்கிறாயே! அவரை நீ மணந்து கொள்வதுதானே?'' என்றேன்.

''உம்.... அவ்வளவு அதிர்ஷ்டம் நான் செய்திருக்கிறேனா? அவருடைய ரூப லாவண்யம் எங்கே? என் அழகு எங்கே? அவருடைய அந்தஸ்து என்ன? எங்கள் அந்தஸ்து என்ன? இரண்டுக்கும் ஆயிரம் ஏணிகள் வைத்தால் கூட எட்டாதே'' என்றாள் பெருமூச்சுடன்.

''எட்டாது என்று பிரமித்து சும்மாயிருந்தால் எப்படித் தெரியும்? பிரயத்தனப்பட்டுப் பார்க்க வேண்டும். ஒரு வேளை உன்னை மணக்க அவர் சம்மதித்துவிட்டால்?'' என்றேன். பிறகு ''உன் அப்பாவிடம் சொல்லி எழுதிப் பார்க்கச் சொல்... என்னதான் ஆகிறது, பார்ப்போமே'' என்றேன்.

''ஐயோ, நான் எப்படிச் சொல்வேன்....... வெட்கமாக இருக்கிறது....'' என்றாள் சாந்தி.

''அட, இதற்கென்ன, நான் சொல்கிறேன் உன் தகப்பனாரிடம்'' என்றேன்.

அன்றே அவளுடைய தாயாரிடம் போய் விஷயத்தை எல்லாம் கூறி உங்கள் தகப்பனருக்கு எழுதும்படி ஏற்பாடு செய்தேன். அவரும் எழுதியிருக்கிறர் உங்கள் தகப்பனருக்கு.

இந்தக் கடிதத்தைப் படித்துவிட்டு, ஆபீஸ் முடிந்ததும் சாயந்திரம் வீடு போய்ச் சேர்ந்ததும் உங்கள் தகப்பனர் இதைத் தெரிவிப்பார். நான் உங்களைத்தான் மனப்பூர்வமாய் நம்பியிருக்கிறேன். என் தோழியை வந்துப் பார்த்துவிட்டு அவளை மனைவியாக ஏற்றுக்கொள்ள வேண்டும். அவள் உங்கள் வாழ்க்கையை எவ்வளவு சிறப்பிப்பாள் என்பதைப் பிறகு உணர்வீர்கள். அவளைப்போல் ஒரு பெண் கிடைப்பது அபூர்வம்.

இப்படிக்கு தங்கை,
சாவித்திரி.

இந்தக் கடிதத்தைப் படித்ததும் சாவித்திரி தன் தோழிக்காக தன் ஆசையைத் தியாகம் செய்துவிட்ட அதிசயத்தைக் கண்டு வியந்தேன். அவள் மேல் உண்டான கோபம் மாறி அவளைப் பற்றி மனம் பெருமையாக எண்ணியது.

சாயந்திரம் விட்டுக்குப் போனதும் என் தகப்பனர், ''மறுபடியும் திருச்சியிலிருந்து இன்னெரு பெண்ணின் ஜாதகம் வந்திருக்கிறது. நாம் போய்ப் பார்த்தோமே அந்தப் பெண்ணின் தோழியாம். ஆனல் ஏழைகள் போல் இருக்கிறது.... பைத்தியக்கார மனுஷன் என்னமோ எழுதி விட்டார்.......... நமக்குச் சரியாக எல்லாம் செய்ய அவர்களால் முடியுமா?'' என்ருர்.

''போய்ப் பார்த்து விட்டு வந்தால் போகிறது'' என்றேன் நான்.

அவர்கள் என் யோசனைக்கு முதலில் ஒப்பவில்லை. ஆனல் என் பிடிவாதத்தின் பேரில் மறுபடியும் போனேம். சாந்தியைப் பார்த்தோம். சாவித்திரி எழுதியிருந்ததைப் போல் சாந்தியின் முகத்தில் அறிவுக்களை சொட்டியது. அழகாகவும் இருந்தாள். ஆனல் என் பெற்ருேருக்கு அவ்வளவாகப் பிடிக்கவில்லை. நான் ஒரே பிடிவாதமாக இருந்தேன். அவர்களுக்கே என் போக்கு புரியவில்லை. கடைசியில் அவர்கள் என் இஷ்டத்துக்கு ஒப்புக்கொண்டார்கள். ஏதும் வரதட்சணையின்றி, சீர் அதிகம் இன்றி சாந்தியைக் கைப்பிடித்தேன்.

முதலில் அவளிடம் வெறுப்புக் கொண்டிருந்த என் பெற்ருேர் அவளுடைய சுறுசுறுப்பையும், அறிவையும் கண்டு மகிழ்ந்தனர். இப்போது அவர்களுக்கு சாந்தி என்ருல் உயிர்.

சாவித்திரி எனக்களித்த பொக்கிஷமாகவே சாந்தியைப் பாவித்தேன்.

4

இன்று, அவளுக்கு விவாகமென்ருல் நாங்கள் போகாமலிருக்க முடியுமா?

''ஆமாம், சாவித்திரிக்கு என்ன பரிசளிக்கப் போகிறீர்கள்?'' என்று கேட்டாள் சாந்தி, என் சிந்தனையைக் கலைத்தவாறே.

நான் யோசித்துப் பார்த்தேன். என்ன பரிசளிப்பது? புரியவில்லை, ''நீயேதான் சொல்லேன்'' என்று கேட்டேன் அவளை.

''ஒரு ஜதை 'பிரிட்ஜ் வளையல்' செய்துப் பரிசளித்து விடுங்கள்'' என்ருள்.

எனக்கும் அது சரியாகப் பட்டது. எங்கள் இருவருக்கும் இடையில் அவள் ஒரு பாலமாக இருந்து பிணைத்து விட்டாளல்லவா? அவளுக்கு 'பிரிட்ஜ் வளை' வாங்கிப் பரிசளிப்பது நியாயமானதுதானே!

நடனமணிகள் வரிசையில்...

எம்பியெஸ்

குமாரி சீதா

நடனமாடுகிறவர்களைவிட ஆடப் படும் விதத்திற்குத்தான் சிறப்பு கொடுக்கப்பட வேண்டும். அப் படிப் பார்க்கப்போனல் குமாரி சிதாவின் நடனம் பாராட்டப்படு வதில் நியாயம் இருக்கிறது. வழு வூர் ராமய்யா பிள்ளையிடம் முறை யாகக் கலை பயின்ற குமாரி சீதா வுக்கு பத்து வயதுதான் ஆகிறது. பத்து வருட அனுபவம் பெற்ற நடனமணியைப் போல மிகவும் அருமையாக ஆடுகிறுர். நடனத் தில் தன் முழுத் திறமையையும் காட்டும் சீதாவின் நடனத்திற்கு எங்கும் நல்ல வரவேற்பு இருக் கிறது. நடன உலகின் சிகரத்தை நோக்கி முன்னேறிக் கொண்டு இருக்கும் குமாரி சீதாவுக்கு 'உமா' ஆசி கூறுகிருள்.

குமாரி ஈ. வி. சரோஜா

பிரபல நடன ஆசிரியர் வழுவூர் ராமையா பிள்ளை குழந்தை சரோஜாவை தத்தி தத்தி நடக்கும் பருவத்தில் ஒரு நாள் காண சென் றிருந்தார். தத்தி தடுமாறிய அந்த நடையில் நடனத்தின் பாவங்களை கவனித்த பிள்ளைவாள் தன் னுடனே அழைத்து வந்து வித் தையை பயிலுவித்தார் கேட்க வேண்டுமா வித்தையின் வளர்ச் சிக்கு? வயதைப் போல கலா ஞானமும் ஆடும் திறமையும் வளர்ந்து கொண்டுவந்தது சரோ ஜாவுக்கு. அதற்குள் இவரை பட வுலகம் வரவேற்றது. ''என் தங்கை'' படத்தில் கதாநாயகி 'என் தங்கை'யாக நடித்தார். இப் பொழுது பல படங்களில் நடித்தும் வருகிருர். பரதகலைக்கு அவர் பணி யாற்றி வழுவூராருக்கு மேலும் பெருமை தேடித் தருவார் என்ப தில் சந்தேகமில்லை.

குமாரி கல்யாணி

பரத நாட்டிய உலகிலே குமாரி கல்யாணி பிரவேசித்தபோது ரசிகர்கள் என்னென்னமோ எதிர் பார்த்தார்கள். கல்யாணி மேடையில் குதித்தால் கூட ரசிகர்கள் ரசிக்கத் தயாராக இருந்தார்கள். அதிருஷ்டவசமாக அவரிடம் நிறைந்த ஞானமும் இருந்தது. கல்யாணி நடன உலகில் பிரவேசித்த மிகக்குறைந்த காலத்திற்குள் முன்னணி நக்ஷத்திரமாகி விட்டார். ஏராளமான கச்சேரிகள் நடைபெற்றவண்ணம் இருந்தன. பட உலகிலும் அவருக்குக் கிராக்கி ஏற்பட்டது. அதுதான் அவரது வாழ்க்கையின் திருப்பமாக அமைந்துவிட்டது. திருமழிசை ஆழ்வாரில் நடிக்க ஆரம்பித்தார். அதன் பிறகு அவருக்கு நடன, பட உலகங்களில் மவுசு குறைந்தே போய்விட்டது. நடன உலகில் அவர் மீண்டும் பிரவேசித்து புகழுடன் விளங்குவார் என்றே நம்புகிறேன்.

குமாரி செல்லம்

சுமார் ஆறு வருடங்களுக்கு முன்பு எங்கும் ஒரே நடன அரங்கேற்றமாகவே இருந்தது. இந்த மவுசில் அரங்கேறியவர்கள்தான் சரோஜா—செல்லம் சகோதரிகள். அவர்கள் நடனம் திறமையை அடிப்படையாக கொண்டிருந்தது. ரஸிகரஞ்சனி சபையில் அரங்கேற்றம் நடந்தது என்ருல் அதன் தரத்திற்கு கேட்க வேண்டுமா? ராமசாமி என்பவரிடம் சிக்ஷை பெற்றனர் சகோதரிகள். சரோஜாவிற்கு திருமணம் ஆகிவிடவே இப்பொழுது செல்லம் மட்டும் நடனக் கலையில் நன்கு பயிற்சி பெற்று—ஆனல் பகட்டும் படாடோபமும் இல்லாமல்—பணியாற்றி வரும் குமாரி சரஸாவிடம் தன் கலைக்கு மெருகிட்டுக் கொண்டிருக்கிருர். வழுவூராரின் பிரதம சிஷ்யை இந்த சரஸா என்பதை நடன உலகில் யாவரும் அறிவர். அவரிடம் சிக்ஷை பெற்றுள்ள செல்லத்திற்கு எதிர் காலம் சிறப்பாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.


''எதிர்பாராத'' தில்
சில காட்சிகள்

[வியார்பி]

எதிர்பாராதது

நீங்கள் எல்லோரும் மிகவும் ஆவலோடு எதிர் பார்த்துக் கொண்டிருந்த 'எதிர்பாராதது' முடிந்து விட்டது. சரவணபவா—யூனிட்டி பிக்சர்ஸ்ஸாரின் கூட்டுத் தயாரிப்பான எதிர்பாராதது—டிசம்பர் 9-ம் தேதி வெளியாகிறது. இதில் பிரபல நட்சத்திரங்களான சிவாஜி கணேசன், நாகையா, சகஸ்ரநாமம், பத்மினி, எஸ். வரலக்ஷ்மி முதலியோர் அற்புதமாக நடித்துள்ளனர். சரவண பவா, யூனிட்டி பிக்சர்ஸாருக்கு அவர்களின் முதல் தயாரிப்பே எதிர்பாராத விதமாக வெற்றியை அளிக்கும் என்பதில் ஐயமில்லை! ரத்தபாசம் கதை-வசனம் எழுதிய ஸ்ரீதர்தான் இதிலும் கதை-வசனப் பொறுப்பை ஏற்றுக் கொண்டுள்ளார். CH. நாராயணமூர்த்தி அற்புதமாக டைரக்ஷன் செய்திருக்கிறார்.

அஞ்சலி எட்டிப் பார்ப்பது ஜூபிடரின் ஹிந்தி **வேலைக்காரியில்**

செல்லப்பிள்ளை

ஏவி. எம்.மின் செல்லப்பிள்ளை மிகத்துரிதமாக வளர்ந்து வருகிறது. இதில் கே. ஆர். ராமசாமி, நாகையா, கண்ணாம்பா, சாவித்திரி, பி.டி. சம்பந்தம் முதலியோர் நடிக்கின்றனர். எம். வி. ராமனின் டைரக்ஷனில் வளர்ந்து வரும் இதை 'வதினா' என்ற பெயரில் தெலுங்கிலும் தயாரித்து வருகின்றனர். இதில் தங்கவேலுவும் நடிக்க ஒப்பந்தமாகி உள்ளாராம். ஏ.வி. எம். மின் அடுத்த வெளியீடு செல்லப்பிள்ளைதான்!

எல்லாம் இன்பமயம்

பி. என். டி. புரொடக்ஷன்ஸின் பெயரால் ஆர். பத்மநாபன் தயாரித்து வரும் இப்படத்தில் டி. ஆர். ராமச்சந்திரன், தங்கவேலு, எம். என். கிருஷ்ணன், சிவதாணு, பொட்டை கிருஷ்ணமூர்த்தி, ராஜ சுலோசனா, மீனாக்ஷி, ஆகியோர் நடிக்கின்றனர். ஜித்தன் பானர்ஜி இப்படத்தை டைரக்ட் செய்து வருகிறார். இதன் படப்பிடிப்பு நியூடோனில் நடந்து வருகிறது.

மனைவியின் மகன்

'மனைவியின் மகன்' என்னும் நூதனப் பெயர் கொண்ட படம் ஒன்று நரசு ஸ்டூடியோவில் ஜம்பு புரொடக்ஷன்ஸாரால் தயாரிக்கப்பட்டு வருகிறது. இதே படம் இந்தியிலும் 'ராஜ்' என்ற பெயரில் தயாரிக்கப்படுகிறது. குமாரி வைஜயந்திமாலா, எம். வி. ராஜம்மா நடிக்கும் இப்படம் எம். வி. ராமனால் டைரக்ட் செய்யப்பட்டு வருகிறது.

உலகம் பலவிதம்

நியூடோன் ஸ்டுடியோவில் நேஷனல் புரொடக்ஷன்ஸ் தயாரித்துவரும் உலகம் பலவிதம் உருவாகிவருகிறது. சிவாஜி கணேசன் வீரப்பா, டி. கே. ராமச்சந்திரன், தங்கவேலு, லலிதா, ராதாகிருஷ்ணன், பாண்டியன் முதலியோர் நடிக்கும் உலகம் பலவிதம் நாடக நடிகர் ஒருவரின் வாழ்க்கையைச் சுற்றிப் பின்னப்பட்ட கதையாகும். டி. ஆர். ரகுநாத் மேற்பார்வையில் முருகேஸ் இப்படத்தை டைரக்ட் செய்து வருகிருர்.

மிஸ்ஸி அம்மா

விஜயா புரொடக்ஷன்ஸார் தங்கள் பொங்கல்வெளியீடாக மிஸ்ஸி அம்மாவை வெளியிடுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. டைரக்டர் பிரசாத்தின் மேற் பார்வையில் உருவாகும் இதில் சாவித்திரி, ஜெமினி கணேசன் இருவரும் பிரதமபாகத்தில் தோன்றுகின்றனர். நம்பியார், ஜமுனுபாய், தங்கவேலு, முதலியோரும் நடிக்கின்றனர்.

தமிழ் இங்கிலீஷ் போதினி

தமிழ் படிக்கத் தெரிந்தவர்கள் இந்தப் புஸ்தகத்தின் மூலம் பிறர் ஒத்தாசையில்லாமல், இங்கிலீஷ் சுலபமாகப் படிக்கவும், பேசவும், கடிதங்கள் எழுதவும்கற்றுக் கொள்ளலாம்.

ஒரு பெரிய பைண்டு புஸ்தகம்.

விலை ரூபாய் 5—0—0

தையல் கட்டிங் & மானுவல்!

இப்புத்தகத்தின் மூலம் யார் வேண்டுமானுலும், எவர் உதவியைக் கொண்டும் தையல் வேலையை சுலபமாகக் கற்றுக் கொள்ளலாம்.

விலை ரூபாய் 2—8—0

பீதாம்பர ஜாலத்திரட்டு
(MAGIC BOOK)

பலவிதமான பலகாரங்கள் அழைப்பிக்கும் ஜாலம், ஒரு அறைக்குள் அழகிய ஸ்திரீகளைக் காண்பிக்கும் ஜாலம், வசிய அஞ்சனம், முதலிய 1500 ஜாலங்கள் அடங்கியிருக்கின்றன.

விலை ரூபாய் 2—4—0

VANI BOOK DEPOT (U)
Post Box No 239. MADRAS-1.

'நல்லவனி'ல் பி. ஸரஸ்வதி

குமார விஜயம்

சென்னை ஒற்றைவாடையில் *19—11—54* வெள்ளிக்கிழமை மாலை கனம் நிதி மந்திரி சி. சுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் – திருப்புகழ் மணி டி. எம். கிருஷ்ணசாமி அய்யர் அவர்கள் முன்னிலையிலும் – மதுரை தேவி பால விநோத சங்கீத சபையின் உரிமையாளர் நவாப் டி. எஸ். ராஜமாணிக்கம் அவர்களின் குமார விஜயம் என்னும் முருகப் பெருமானின் திரு அவதாரம் பற்றிய நாடகம் நடந்தேறியது. அற்புதமான காட்சி ஜோடனைகளுடன் – நாளுக்கு நாள் நாஸ்திகம் பரவும் இந்நாளில் பல வருடங்களாக பக்தியை பரப்பும் நாடகங்களை நடத்திவரும் நவாப் ராஜமாணிக்கம் அவர்கள் நீடூழி வாழ்க.

தாம்பூல சிலவு காலணுதான்

REGD. No. 1515
ஸ்டூடென்ஸ்
STUDENTS
பாக்குதூள்
NUT

P. R. வடிவேலு முதலியார் & சன்.,
28, முல்லா சாயபு தெரு, :: மதருஸ்-1.

மாதவிடாய்

நிகரற்ற மருந்து (தேவி பில்ஸ்) Regd. by the Central Drugs Laboratory of the Govt. of India, under No. (CDL\688) எக்காரணத்திணுலும் எத்தனை மாதமாணுலும் நின்றுபோன மாதவிடாயை அதிக சுலபமாக தவருமல் உடனே வெளியாக்கும். அநேக நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்ற திவ்ய ஔஷதம். உத்திரவாதமுள்ளது. போலி மருந்துகளை வாங்கி ஏமாருதீர்கள். சாதாரண கேஸ்களுக்கு (Ordinary) விலை ரூ. 8-8-0 மாதங்களான கேஸ்களுக்கு (Special) ரூ. 10—8—0. (த. சி. தனி)

கர்ப்பத்தடை

நிகரற்ற மருந்து (ஸ்பெக் பில்ஸ்) Regd No. 266 12 நாட்கள் சாப்பிட்டால் 6 வருஷத்திற்கு சாஸ்வதமாக கருவைத் தடுக்கும். மாதவிடாய தவருது. அநேக நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்ற திவ்ய ஔஷதம் உத்திரவாதமுள்ளது போலி மருந்துகளை வாங்கி ஏமாருதீர்கள். பில்ஸ் விலை ரூ. 12-0-0. (த. சி. தனி)

SEENU & Co., P. B. 1638. (S) MADRAS-1.

134, SARANGOON ROAD, SINGAPORE

சிலோன் ஏஜண்ட் : NEW COLOMBO MEDICAL STORES, 82, Main St., கொழும்பு-11

அச்சிட்டு வெளியிடுபவர், ஆசிரியர் : ஜி. உமாபதி எம். சி., உமா பிரிண்டர்ஸ்,
4/32, தாதா முத்தியப்பன் தெரு, சென்னை-1.

டிசம்பர் வெளியீடு

நடிகர்கள்: மனோஹர், சாமா, நம்பியார், V. K. ராமசாமி, முஸ்தாபா, நந்தாராம், சாய்ராம். சந்தானம், ஷண்முகம், ஸ்டண்ட் சாமிநாதன், தோடி கண்ணன், P. K. சரஸ்வதி, சுலோசனா, ரேவதி, C. K. சரஸ்வதி, S. R. லக்ஷ்மி

ஸன்ரைஸ் ப்ரொடக்ஷன்ஸ்

நல்லவன்

டைரக்ஷன்
திருவேங்கடம்

விவரங்களுக்கு:
ஸன்ரைஸ் ப்ரொடக்ஷன் மதருஸ்-24.

Edited, Printed and Published by G. Umapathy, M.C. at Uma Printers, 4/32, Thathamuthiappan Street, Madras-1 Phone: 2200